
கல்கி

KALKI 29.12.2002
ரூ. 6.00



சீஸன் சிறப்புப் பக்கங்கள்



திரும்பிப் பார்த்தபோது...



- வைரம் விலையில் ஒரு காரட்டுக்கு ரூ 2000/- தள்ளுபடி
- தங்க நகைகளுக்கு கூலி இல்லை
- வெள்ளி சாமான்களுக்கு கூலி இல்லை
- ரூபி, எமரால்டு நகைகளுக்கு கூலி இல்லை
- வைர நகைகளுக்கு கூலி இல்லை
- குறைந்த சேதாரம்
- படங்கள், பரிசுப் பொருள்களுக்கு 10% தள்ளுபடி
- ரூபி, எமரால்டு போன்ற கற்களுக்கு 10% தள்ளுபடி
- சான் கோல்டு நகைகளுக்கு 20% தள்ளுபடி

(இச்சலுகைகள் ரெடி நகைகளுக்கு மட்டும். ஆர்டர்களுக்கும் ஒரு சில ஸ்பெஷல் டிசைன்களுக்கும் பொருந்தாது)

SWARNALAYA
Jewellery

5, Bazulla Road, T.Nagar, Chennai - 600 017. Tel : 28156386, 28157787, 28158144.
E-mail : asukumaran@eth.net www.swarnalayajewellery.com

SANGOLD BANGLES



1 கிராம், 2 கிராம் வளையல்கள் என பிரபலமாகியிருக்கும் இவை பரபரப்பாக விற்று வருகின்றன. GOLD FORMING என்கிற ஜெர்மன் டெக்னாலஜியுடன் பிரத்யேகமான சிமார்முறையில் தயாரிக்கப்படும் இவை, கறுப்பது இல்லை, வெளுத்துப்போவதும் இல்லை, பளபளப்பு குறைவதும் இல்லை. வைரவளையல்கள் வாங்குபவர்கள் கூட ஆசையுடன் வாங்கிப்போகும் இவ்வளையல்கள் புதுவருடத்தினை முன்னிட்டு **டிசம்பர் 25 முதல் ஜனவரி 2 வரை** 20% தள்ளுபடி விலையில் கிடைக்கும்.

Wanted : Distributors for " SANGOLD" BANGLES for other districts in Tamilnadu

பாலா



போதும், போதுமென அலறும் அளவுக்குத் திகட்டிப் போய் விட்ட தாதா சினிமாக்களின் வரிசையில், மற்றொரு இளம் தாதாவாக வந்திருக்கிறார் பாலா. இவர் காதலுக்காகக் கத்தியைக் கீழே போடும் ரகம்.

நாயகன் பாலாவின் புஜபல பராக்கிரமத்தை, அசல் சினிமாத்தனத்தோடு ஆரம்பக் காட்சிகள் பறைசாற்ற, எல்லாம் ஒரே குட்டையில் ஊறின மட்டைதான் என்று இருக்கையில் மடங்கித் தளர்ந்து போகிற நம்மை, நிமிர்ந்து உட்கார வைக்கின்றன ப்ளாஷ்பேக் காட்சிகள்.

தங்கையின் தற்கொலைப் பின்னணிக்குக் காரணமான ஓம்பிரகாஷ் கூட்டணியை வெட்டி வீழ்த்தி விட்டு, அரிவாளோடு நிலை தடுமாறி நிற்கும் பாலாவை, அதே நோக்கத்தோடு அங்கே வரும், தாதா பசுபதியின் கூலிப்படை, தங்கள் தலைவரிடம் அழைத்துப்போய் பாலாவை கமாண்டர் ஆக்குவது நல்ல திடுக். இது போன்ற சுவாரஸ்யமான 'திடுக் திடுக்' திருப்பங்களோடு திரைக்கதை அமைத்திருக்கும் அறிமுக இயக்குனர் தீபக், பிரதான பாத்திரங்களை அற்புதமாகப் பட்டை தீட்டியிருக்கிறார். ஜெயமணி, பசுபதி இருவரையும் உருவாக்கிய காட்பாதர் பரந்தாமன் (திலகன்), பக்கவாதப் படுக்கையில் இருந்தபடியே, இருவரையும் ஆட்டி வைக்கும் ஸ்டைல் ஹை கிளாஸ்.

முரட்டுத்தனம், மென்மை இரண்டின் கலவையாக வரும் பாலா பாத்திரத்தில் ஷாமும், காதலன் அடியாளாக மாறிய காரணம் அறிந்து சமாதானம் அடையும் ஆர்த்தியாக மீரா ஜாஸ்மினும், அளவான நடிப்பில் கச்சிதமாய்ப் பொருந்தி விடுகிறார்கள்.

குட்டியாக கருணாஸ் பண்ணும் பந்தாக்களும், அதையொட்டி அவருக்குக் கிடைக்கும் கைமேல் பலன்களும் ரசிக்கத்தூண்டும் புது பாணி நகைச்சுவைத் தோரணங்கள்.

கதையை உள்வாங்கிக் கொண்டு உரையாடல், பின்னணி இசை, ஒளிப்பதிவு மூன்றிலும் பிரமாதப்படுத்தியிருக்கும் விஜி, யுவன், ப்ரியன் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். வண்டி வண்டியாய் வன்முறை நிறைந்திருக்கும் படத்தில், பளிச்சென்று தெரியும் ஒரு குறை, ஒப்புக்குச்சப்பாணியாகக் கூட ஓரிடத்திலும் போலீஸ் தலையைக் காட்டாதது. எனினும் போரடிக்காத சுறுசுறுவாலா இந்த பாலா.

— விஷுவல்தாசன்

• ஆவரெஜ்

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
புதிய ஈ மெயில் முகவரிகள் : எடிடோரியல் : kalki@kalkiweekly.com
சந்தா : subscription@kalkiweekly.com பிற தகவல்கள் : info@kalkiweekly.com

- அ.தி.மு.க. பொதுக்குழு காட்சிகள்

அம்மாதான் அடுத்த பிரதமர்!

சமீபத்தில் நடந்து முடிந்த அ.தி.மு.க. செயற்குழுவில் ஒரு தொழிற்சங்கப் பிரமுகர் தாம் பேச விரும்புவதாக, எழுதிக் கொடுத்து விட்டுத் தம் சீட்டில் அமர்வதற்காகத் திரும்பினார். அப்போது அவரது எதிர்கோஷ்டியைச் சேர்ந்த நண்பர் ஒருவர் "என்ன அண்ணே! எங்களைப் பற்றிப் புகாரா?" என்று கிண்டலுடன் கேட்டார். அப்படி அவர் கிண்டல் செய்ததற்குக் காரணம் உண்டு. வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர் மீதும் ஒன்றியச் செயலாளர், மாவட்டச் செயலாளர் மீதும், மாவட்டச் செயலாளர் மாநில நிர்வாகிகள் மீதும் புகார்ப் பட்டியல் வாசிக்க, பொதுக்குழு நல்ல தருணத்தை உருவாக்கி தந்தது. இது தவிர, மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மோதல், கட்சிக்காரர்களை போலீஸ்காரர்கள் மற்றும் அதிகாரிகள் மதிக்காமல் செயல்படுவது, என்று ஏராளமான புகார்கள். இப்படிப்பட்ட புகார்களைக் கேட்டுச் சலித்துப் போனதால்தானோ என்னவோ, இரண்டாவது நாள் புகார்ப் பெட்டியொன்றை வைத்துவிட்டார் ஜெயலலிதா!

கிட்டத்தட்ட மூவாயிரம் கட்சிப் பிரமுகர்களைக் கூப்பிட்டு, அவர்களுடன் இரண்டு நாட்கள் இருந்து, நல்ல விருந்து படைத்து, குறைகளைக் கேட்டு அனுப்பியிருக்கிறார் ஜெ. பொதுக்குழுவை இப்போது கூட்ட வேண்டிய அவசியம் என்ன? ஒவ்வொரு கட்சியும் தேர்தல் கமிஷனிடம் தங்கள் சட்ட திட்டங்களைக் கொடுத்திருக்கின்றனர். அந்த அடிப்படையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் பொதுக்குழுக் கூட்டத்தைக் கூட்டவில்லையென்றால், தேர்தல் கமிஷன் கேள்வி கேட்கும். எனவே அந்த வகையில் சடங்கை நிறைவேற்றவே இந்த பொதுக்குழுக் கூட்டம்.

இது தவிர, தமிழக அரசின் பல்வேறு நடவடிக்கைகளால், பொது மக்களின் சகல பிரிவினரும் அதிருப்திக்கு ஆளாகியிருக்கின்றனர். இந்த நிலையில் கட்சிக்காரர்களின் ஒட்டு மொத்த ஆதரவும் ஜெயலலிதாவுக்கு இருக்கிறது என்பதைக் காட்டத்தான் இந்தப் பொதுக் குழுவாம். கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களுக்கு முன் தேர்தல் சமயத்தில் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் போனதோடு சரி. அதற்குப் பின் தொண்டர்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஜெ.வுக்கு இல்லை. எனவே அந்த இடைவெளியைக் குறைக்கும் பொருட்டு இந்தப் பொதுக் குழு கூட்டப்பட்டது. 'டான்ஸி' தீர்ப்பு எப்படி இருக்குமோ என்ற கவலை, அ.தி.மு.க.வில் எல்லோரையும் உறுத்திக் கொண்டிருக்கிறது. "ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்ட இயக்கம் இது. எதையும் தாங்கும் வலிமை படைத்தது" என்று கட்சிகாரர்களுக்கு நம்பிக்கையூட்டும் விதமாகவும், இந்தப் பொதுக்குழு கூட்டப் பட்டது என்கிறார்கள்.

"ஆட்சியிலும், கட்சியிலும், இன்னமும் ஆக்கபூர்வமாக என்னென்ன செய்யலாம் என்பது குறித்து, உறுப்பினர்கள் ஐந்தே நிமிடத்தில் கருத்து சொல்ல வேண்டும்" என்று கேட்டுக் கொள்ளப்பட்டாலும், பேசியவர்கள் அனைவரும் ஜெயலலிதாவைப் புகழ்வதற்கே ஐந்து நிமிடம் எடுத்துக் கொண்டனர். "பா.ஜ.க.வும் வேண்டாம். காங்கிரஸும் வேண்டாம்; மூன்றாவது அணி அமையுங்கள். நீங்கள்தான் பிரதமர்" என்று டஜனுக்கு மேற்பட்டவர்கள் பேசினார்கள். ஒரு கட்டத்தில் புகழ்ச்சியால் சலித்துப் போன ஜெ. பலரை மணியடித்து உட்கார வைத்துவிட்டார். குறிப்பாக மாணவர் அணிச் செயலாளர் விஜய் பாஸ்கர் புகழ்ந்து தள்ளி விட்டு, சப்ஜெட்டுக்கு வருவதற்கு முன் உட்கார வைக்கப்பட்டார். எஸ்.எஸ். சந்திரன் வழக்கம்போல வாஜ்பாயின் முதுமையைக் கிண்டல் செய்யத் துவங்கினார். உடனே ஜெயலலிதா "முதுமை என்பது மனி



• புலமைப்பித்தனுக்கு சால்வை

தனுக்கு இயற்கை, எனவே கிண்டல் வேண்டாம்" என்று சொல்லி அவரை 'கட்' செய்தார். "தி.மு.க.விலிருந்தபோது நான் வாடகை வீட்டில் குடியிருந்தேன். இப்போது மூன்று வீடுகள் சொந்தமாக இருக்கின்றன." என்றாராம் எஸ்.எஸ். "அது சரி. ஒரு கூட்டத்துக்கு 15,000 ரூபாய் எங்களிடமிருந்து கசக்கிப் பிழிந்து வாங்கினால், மூன்று வீடுகள் என்ன முப்பதுகூட வாங்கலாமே" என்று அரங்கத்தின் பின் இருக்கையில் முணுமுணுப்பு எழுந்தது. மைத்ரேயன் பேசும்போது "மூன்றாவது அணி அமைவதற்கான வேலையை உடனே துவங்க வேண்டுமென்றும், தேசிய விவகாரங்களில் தொடர்ந்து கருத்துக்கள் சொல்லவும் வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அ.தி.மு.க.வைப் பொறுத்த மட்டில், மிக ஜூனியர்களான விருதுநகர் சீனிவாசன் மற்றும் கலிவரதன் ஆகியோருக்கும் பேச வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அவர்களும் அம்மா மனம் குளிர கருணாநிதியை கடுமையாகச் சாடிப் பேசினார்களாம். சசிகலாவுக்கு வழக்கம்போல முன் வரிசையில் இடம் கொடுக்கப்பட்டது. தினகரன் எந்த ஆரவாரமும் இன்றி அமைதியாக வந்து சென்றார். மாநில நிர்வாகிகளுக்கு மட்டும் மேடையில் நாற்காலிகள்.



• முன் வரிசையில் சின்ன மேடம்

இறுதியாகப் பேசும்போது ஜெ. "மூன்றாவது அணி அமைத்து பிரதமர் பதவியைப் பிடிப்பது ஒன்றும் பெரிய விஷயமல்ல" என்றும் "வாய்ப்புகள் இவற்றைத் தீர்மானிக்கும்" என்றும் பேசினார். சோழிங்கநல்லூர் ஒன்றியச் செயலாளரை மிரட்டும் மாவட்டச் செயலாளர் (சிட்லபாக்கம் ராஜேந்திரன்) கடுமையாக எச்சரிக்கப்பட்டார். பத்து மாவட்டச் செயலாளர்களுக்கு, ஒழுங்காக நடக்குமாறு மெமோ கொடுக்கப்பட்டது!

தி.மு.க. சமீபத்தில் நடத்திய மகளிர் கருத்தரங்குக்குத் திரண்டு வந்த பெண்கள் கூட்டம், அ.தி.மு.க.விலும் பாதிப்பை உண்டாக்கியிருக்கிறது. உள்ளாட்சிகளில் பொறுப்பு வகிக்கும் கழக தாய்க்குலங்களையும், மகளிர் அணியினரையும், தனியாகக் கூட்டம் போட்டுச் சந்திக்க இருக்கிறார் ஜெ. "இந்துக்களை புண்படுத்திப் பேசுவதற்காக கருணாநிதிமீது கிரிமினல் வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று பொதுக்குழுவில் தீர்மானம் போட்டிருக்கிறோம். ஆனால் கைது போன்ற நடவடிக்கையில் இறங்கமாட்டோம். தொடர்ந்து பயமுறுத்தல் இருக்கும். இந்த அணுகுமுறையின்படி மோடி பாணியில் மெஜாரிட்டி சமுதாய வோட்டுகளை வாங்குவதுதான் எங்கள் குறிக்கோள். பாராளுமன்றத்தைப் பொறுத்தவரை காங்கிரஸ், பா.ஜ.க. மொத்தமாக 350 சீட்டுகளைத்தான் பிடிக்கும். மீதி இருக்கும் சீட்டுகள், மாநிலக் கட்சிகள் மற்றும் உதிரிக் கட்சிகளுக்குத்தான். சுமார் 150 சீட்டுகளை வாங்கும் வகையில் மூன்றாவது அணி அமைப்பது சாத்தியமே" என்கிறார் ஓர் அதிமுக. பாராளுமன்ற உறுப்பினர். 'மூன்றாவது அணி அமைத்து, அதில் தலைவராக வர முயற்சி செய்வது, இல்லையேல், தேர்தலுக்குப் பிறகு பா.ஜ.க.வுக்கு ஆதரவு கொடுத்து மத்திய அமைச்சரவையில் இடம் பிடிப்பது, என்பது யுக்தியாம். இப்போது பா.ஜ.க.வை எதிர்ப்பதற்காக காங்கிரஸுடன் இணைந்து செயல்படும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டுகளை, மூன்றாவது அணிக்கு இழுப்பது சுலபமே என்று நினைக்கிறாராம் ஜெ!

- ப்ரியன்

படங்கள் : சௌரா

ப்ளாஷ்பேக் பார்த்தபோது...



• ஹர்ஷா

'2002ம் ஆண்டைத் திரும்பிப் பார்த்துத் திருப்திக் கொள்கின்றனர் சில கல்லூரிப் புள்ளிகள்!

சௌம்யா : *(எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில் வணிகவியல்)*

போன வருஷம் ரொம்ப ஜாலியான வருஷம் தாங்க... சிங்கப்பூருக்கு ஸ்பெஷல் ட்ரிப் அடிச்சிட்டு வந்தேன். சலிக்கச் சலிக்க ஊர் சுற்றிப் பார்த்து, வகை வகையாச் சாப்பிட்டு, கூடை கூடையாக ஷாப்பிங் செய்து... சந்தோஷமான அனுபவங்கள் தந்த சென்ற ஆண்டுக்கு நன்றி பல.... பிளஸ் டூ வரைக்கும் இரண்டாவது மொழியாக பிரெஞ்சு படிச்சேன். இந்த வருஷம் அதே மொழியில் நிச்சயமா டிப்ளமா வாங்கிடமுனு. போன வருஷத்து உறுதி மொழியா எடுத்துக்கிட்டேன். ஆனா படிப்பு, அது, இதுன்னு பிஸி ஆயிட்டதனாலே, பிரெஞ்ச் கிளாஸ் போக முடியலை.

ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை, மட்டமான வருஷம். 'வீஸிங் பிரச்னை' படுத்தி எடுத்துடுச்சு. சிங்கப்பூர், பெங்களூர், கொச்சின்னு ஊர் சுற்றியதனாலேயும் காலேஜ்லே அட்டெண்டென்ஸ் இல்லை. (பிராக்ஸி கொடுத்தா கண்டுபிடிச்சுடறாங்க!) அதனாலே, இனிமே சமர்த்தா காலேஜ் போகணும்.

2003ன் உறுதிமொழி : *நான் படிக்கிறது மகளிர் மட்டுமே படிக்கும் காலேஜ்னாலும், ப்ரெண்ட்ஸ் எல்லாரும் பசங்க பாணியிலே 'மாமு, மச்சான்'ன்னு கூப்பிட்டுக்குவோம்... புது வருஷத்துலே அதை மாற்றி, புதுசா ஏதாவது விளிச்சொல் கண்டுபிடிக்கணும்.*

ஆதித்யா : *(எஸ்.வி.ஸி. பொறியியல் கல்லூரியில் கம்ப்யூட்டர் சயின்ஸ்)*

இன்ஜினியரிங்கைப் பொறுத்தவரை, முதல் வருஷம் கண்ணைக் கட்டி, காலேஜ் கேம்பஸ்ல விட்ட மாதிரி இருக்கும். கடைசி இரண்டு வருஷம், ஜி.ஆர்.ஈ., ப்ராஜெக்ட்னு பிஸியாயிடுவோம். என்ஜாய் பண்றதுன்னா அது செகண்ட் இயர்தான். அதுதான் வருஷம் பூரா தீபாவளி கொண்டாடிட்டோம். பிளஸ் டூ வரை, பாய்ஸ் ஸ்கூல்ல படிச்ச எனக்கு, முதல் வருஷம் பெண்களுடன் பேசவே தயக்கமா இருந்தது. ஆனா இந்த வருஷம் நிறைய கேர்ல் ஃப்ரெண்ட்ஸ்!

வீட்டிலேயும் நல்ல மாற்றங்கள்தான். என்னோட அக்கா அர்ச்சனா, எம்.எஸ். படிக்



• தீப்தா



• சௌம்யா

கிறதுக்காக, யு.எஸ். போனாங்க. அப்பாவுக்கும் பிஸினெஸ் நல்லா இருக்கு.

புது வருஷ உறுதி மொழி : ஜிம்முக்குப் போய், ஹ்ருதிக் ரோஷன் மாதிரி, பாடி பில்ட் பண்ணணும். ஹாலிவுட் நடிகை கேதரின் ஜீடா ஜோன்ஸ்கிட்டே 'ஐ லவ் யூ' சொல்லணும்.

ஸ்வேதா: *(கிண்டி ஐ.ஐ.டியில் முதுகலை அறிவியல்)*

போன வருஷத் துவக்கத்திலேயே எங்க அக்கா செளம்யாவோட கல்யாணமாச்சு... அதனாலே வருஷம் முழுக்க நல்ல பலன்கள்தான். ஐ.ஐ.டி. சேரணும்னு வெறியா படிச்சேன். தொண்ணூறு சதவிகிதம் மதிப்பெண் வாங்கி, சேர்ந்துட்டேன். சங்கீதம்னா ரொம்பப் பிடிக்கும். பாம்பே ராமச்சந்திரன்கிட்டே இசை கத்துக்கிறேன். அடுத்த வருஷமாவது கச்சேரி லெவலுக்குத் தயாராகணும். வாழ்க்கையிலேயே, முதன் முறையா ஹாஸ்டலில் சேர்ந்து படிக்கிறேன். ஹாஸ்டல் லைஃப் பிடிச்சிருக்கு. படிப்பு, அரட்டை, விளையாட்டு, பாட்டுன்னு ஜாலிதான்!

புதுவருஷ உறுதிமொழி : 'ரோட்டராக்ட்' என்ற அமைப்பில் உறுப்பினராக இருக்கேன். சமூக சேவைகளில் இளைஞர்களை ஈடுபடுத்தணும்.

ஹர்ஷா : *(பிரின்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில் ப்ளஸ் டூ)*



• ஆதித்யா

சாதாரண வருஷம்தான்! பேரைக் கேட்டால் பேட்டையே நடுங்கும் கண்டிப்பு மிகுந்த பள்ளி எங்களுடையது. அதனால் படிப்பு.. படிப்பு... இது தவிர வேறு எதற்குமே நேரமில்லாதபடி பிஸி ஷெட்யூல். நடுவே ஒரு தடவை புட்டபர்த்தி ஸ்ரீ சாய்பாபா ஆசிரமத்துக்குப் போயிருந்தேன். அதுதான் ஒரே அவுட்டிங்... புது ஸ்கூட்டி வாங்கிக் கொடுத்தார்கள். சீக்கிரம் லைசென்ஸ் வாங்கிடுவேன்.

புது வருஷ ஆசை : சூப்பர் செலக்டர் இன்டர்நெட் விளையாட்டில், குறைந்த பட்சமாக ஒரு கைக் கடியாரமாவது பரிசு வாங்கணும்.



• ஸ்வேதா

தீப்தா : *(ஸ்ரீ சங்கரா சீனியர் செகன்ட்ரி ஸ்கூலில் ப்ளஸ் டூ)*

ப்ளஸ் ஒன்னில் ஜாலியா இருந்துட்டு, இந்த வருஷம் 'படிப்பு... படிப்பு'ன்னு ஒரே டென்ஷன்தான்! இருந்தாலும் பாட்டு, நடனம், நடிப்புன்னு பரிசு வாங்கிக் குவிச்சேன். என்னோட சித்தப்பா ஸ்விட்சர்லாந்திலே இருக்காங்க. அவங்க பொண்ணு ஐஸ்வர்யா, என்னோட பெட்! ப்ளஸ் டூ முடிச்சதும் ஸ்விட்சர்லாந்த் போறேன். (ஸ்விஸ் வங்கியில் அக்கவுண்ட் ஓபன் பண்ண இல்லே. சும்மா சுத்திப் பார்க்க.. ஹி..ஹி..)

உறுதிமொழி 2003 : டெல்லி, மும்பைன்னே அப்பாவுக்கு வேலை அமைஞ்சதாலே, எனக்குத் தமிழ் எழுத வரலை. இந்த வருஷம் தமிழ் எழுதிப் படிக்கணும்.

- ஐஸ்வர்யா


அட்டைப்படம், படங்கள் : **யோகா**

ஆண்டாள், அரியக்குடி ஆராவமுதன்



• ஆண்டாள்

‘‘துளசிச் செடியானது தோன்றும் போதே மணத்துடன் தோன்றுகிறது. அந்தத் துளசிச் செடிகளிடையே தோன்றிய ஆண்டாளும் பிறக்கிற போதே மனத்தில் பக்தி மணம் கமழப் பிறந்தாள்...’’



• அரியக்குடி

- கல்யாணபுரம் ஆராவமுதன் இவ்வாறு பேசக் கேட்கையில், அந்தத் துளசி மணத்தையும் பக்தி மணத்தையும் நம்மால் ஒரு சேர அனுபவிக்க முடிகிறது. இத்தனைக்கும் ஒலிப்பதிவு செய்யப்பட்ட குரல்தான்; ஆனால், அதன் கச்சிதமான ஏற்ற இறக்கங்கள், மிதமிஞ்சாத மெய்யான பாவம், உணர்ச்சி, தமிழ் உச்சரிப்பின் தூய்மை, நடுநடுவே எளிமையான, பொருத்தமான ராக சித்திரங்களில் அமைக்கப்பட்ட ஆண்டாள் பாசுரங்கள்... எல்லாமாகச் சேர்ந்து ஹரி கதையை நேரில் அனுபவிக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றன.



• ஆராவமுதன்

ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணம் என்கிற தலைப்பிலான இந்த ஹரிகதை காசெட் உருவான கதையும் சுவாரஸ்யமானது.

நெல்லை மாவட்டத்து கீழாம்பூரைச் சேர்ந்தவர் டாக்டர் கே. சங்கரநாராயணன். சென்னையில் மருத்துவம் பயின்றுவிட்டு, ஸ்ரீவில்லிபுத்தூரில் மருத்துவப் பணி மேற்கொண்டார். நோயாளிகளிடம் காட்டிய அன்பும் அரவணைப்பும், இந்த டாக்டரை வேறுபடுத்திக் காட்டின.

கர்னாடக சங்கீதத்தில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்த டாக்டர் சங்கரநாராயணன், திருப்பாவைப் பாடல்களைத் தாமே மெட்டமைத்து வைத்திருந்தார். இந்த மெட்டுகளை அங்கீகரித்து, ஏற்றுக் கொண்டு, மேலும் மெருகூட்டி மேடையேற்றினார் அரியக்குடி ராமானுஜ அய்யங்கார். டாக்டர் குடும்பத்தினர் தயாரித்து வழங்கியிருப்பதுதான், ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணம் டபுள் காஸெட் ஆல்பம். ஆர். ஹேமமாலினி வயலின், தஞ்சாவூர் டி.கே. ராமச்சந்திரன் மிருதங்கத்துடன் 'காஸ்மிக் மியூசிக்' நிறுவன வெளியீடாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது (விலை ரூ.80).



• டாக்டர் சங்கரநாராயணன்

கல்யாணபுரம் ஆராவமுதனுக்கு, சென்னை மியூசிக் அகாடமி இவ்வாண்டு டி.டி.கே விருது வழங்கியிருக்கிறது.

— சபரி

"நால்வர் பொற்றாள் நம் உயிர்த்துணை"

சலுகையும் உண்டு! இலவச நூலும் உண்டு !

தெய்வப்புலவர் சேக்கிழார் அருளிய

பெரியபுராணம்

மூலமும் தெளிவுரையும் 2390 பக்கங்கள் 6 தொகுதிகளில்

இச்சலுகைகள் **9.1.2003** வரை மட்டுமே !

விலை ரூ.600 சலுகை விலை ரூ.400 மட்டுமே !

பக்திநூல்களில் பண்டைக் காலத்து நீதி காணீர் !

இந்தியத் திருநாட்டில் தற்போது பல துறைகளில் சீர் கேட்டைப் பார்க்கிறோம். ஆனால் ஒரே ஒரு துறை மட்டும் தடம் புரளாமல் அசைக்க முடியாத தூணாக நின்று ஜனநாயகம் என்னும் மாபெரும்மாளிகையைத் தாங்கி நிற்கிறது. அந்தத் துறைதான் நீதித்துறை ! இந்த நீதி திடீரென இன்று நேற்றுத் தோன்றியதன்று. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்த நீதி எந்த அளவுக்குச் சிறந்திருந்தது என்பதனை இந்த பக்தி நூலிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பண்டையோர் எப்படியெல்லாம் ஆய்ந்து ஆய்ந்து உண்மையைக் கண்டு நீதி வழங்கியிருக்கிறார்கள் என்பதனைக் காண்போம்.

சோழர் காலத்து நீதி : தடுத்தாட் கொண்ட புராணம் அனை வருக்கும் தெரியும். பண்டை நியதிப்படி மண்ணில் மானிடனாய்ப் பிறந்த நம்பியாரூரரைச் சிவபெருமான் தடுத்து ஆட்கொண்ட நிகழ்ச்சி ஏதோ புராணக்கதை அல்ல. ஆழ்ந்து நோக்கினால் பண்டைக் காலத்தில் ஒரு வழக்கில் எப்படிச் சிறப்பாக ஆராய்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது என்பது புலனாகும்.

திருமண மேடையில் மாப்பிள்ளையாக ஆரூரர் அமர்ந்திருந்த போது, சிவபெருமான் தொண்டு கிழவனார் வேடம் தாங்கி வந்து, "உனக்கும் எனக்கும் முன் காலத்திலிருந்து வரும் வழக்கைத் தீர்த்த பின்தான் நீ திருமணம் செய்து கொள்ள முடியும்" என்று கூறினார். இந்த மாநிலத்தில் இதற்கு முன் இப்படி ஒரு வழக்கு இல்லையே என்று அனைவரும் திகைத்தனர்.

அவையோர் அனைவரும் ஆரூரர்க்கே ஆதர வாகப் பேசினர். வந்த கிழவனாரோ வழக்குக்குச் சான்றாக அடிமை ஓலையைக் காட்டினார். ஆத்திரம் அடைந்த ஆரூரர் அதனைப் பற்றி இழுத்துக் கிழித்து வீசி எறிந்தார்.

வழக்குத் தொடுத்த கிழவனார், ஆரூரர் விருப்பப் படி வழக்கைப் புத்தூரிலிருந்து திருவெண்ணெய் நல்லூருக்கு மாற்ற ஒப்புக் கொள்கிறார். (இப்போது கூட ஒரு நீதி மன்றத்திலிருந்து வழக்கை வேறொரு நீதி மன்றத்திற்கு மாற்றுவதைக் காண்கிறோம்.)

திருவெண்ணெய் நல்லூரில் வேதபாரகர் முன்னிலையில் வழக்கு வருகிறது. கிழவனாரிடம் "ஆட்சி (அனுபவ உரிமை), ஆவணம் (எழுத்து மூலமான ஆதாரம்), அயலார் காட்சி (கண்ணால் கண்டவர் சாட்சி) என மூன்றில் ஒன்று காட்டுவாய்" எனும் போது ஆவணத்தைக் காட்டுகிறார் (Documentary Evidence). மேலும், "இவன் புத்தூரில் ஆத்திரத்தில் கிழித் தெறிந்தது நகல் ஓலை; மூல ஓலை இதோ இருக்கிறது" என்றார். (இதிலிருந்து என்ன தெரிகிறது? எதற்கும் நகலைத் தான் அனுப்ப வேண்டும்; மூலத்தை உரிய நேரத்தில் தான் தர வேண்டும் என்பது தெரிகிறதல்லவா?)

அடிமை ஓலையாகிய ஆவணம் (ஆரூரரின் பாட்டனார் எழுதிக் கொடுத்த அடிமை ஓலை) வேதியர் அவைமுன் வைக்கப்பட்டது. அதிலுள்ள கையெழுத்து நம்பி ஆரூரரின் பாட்டனாருடையது தானா எனச் சரி பார்க்கப்பட்டது. இப்போதும் Comparison of Hand writing and signature என்னும் முறை உள்ளதை நாம் அறிவோம். பண்டைக் காலத்தில் சாட்சிக் கையெழுத்தும் ஆய்வு செய்யப்பட்டுத் தீர்ப்புக் கூறப்பட்டது. தற்போதும் இந்த முறை பின் பற்றப்படுவது கவனிக்கத்தக்கது.

இத்தகைய நீதி முறைகளோடு
சிவனடியார்களின் சிறப்பையும் புராணம்
என்ற பெயரில் அமைந்த
இந்நூலில் கண்டு இன்புறலாம்

இலவச நூல் **நாயன்மார் அவதாரத்தலங்கள்** **விலை ரூ.60**

சிவமெனும் செம்பொருளைச் சிந்தையில் இருத்தி, அச்செந்நெறியில் வாழ்ந்தவர்கள் நாயன்மார்கள். பிறப்பால்- இடத்தால் - இனத்தால்- தொண்டால் - தொழிலால் இவர்கள் வேறுபட்டிருந்தாலும், இறைவனருளால் ஒன்றுபட்டவர்கள். இந்நாயன்மார்கள் அவதரித்த- தொண்டு செய்து வழிபட்டுப் பேறு பெற்ற தலங்களை; யாத்திரையாகச் சென்று தரிசிப்பது சைவ உலகில் தலை சிறந்த பணியாகும். அதற்கு உதவும் பொருட்டே இந்நூல் வெளிவருகிறது. **ஒவ்வொரு நாயன்மார் வரலாற்றிலும், திருத்தொண்டர் புராணப் பாடல், சுருக்கமான வரலாறு, அவதரித்த தலம் ஆகிய விவரங்கள் தெளிவாக தரப்பட்டுள்ளன.**

இவற்றை தபாலில் பெற,9.1.2003 க்குள் கடிதம் எழுதுக. இருநூல்களையும் V.P.P. யில் அனுப்புகிறோம். சலுகை விலை ரூ.400+ தபால் மற்றும் கட்டுச் செலவு ரூ.50 சேர்த்து ரூ.450 மட்டும் தபால்காரரிடம் செலுத்தி நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம். நேரில்,9.1.2003க்குள் ரூ.400 மட்டும் செலுத்தி நூலினை உடனே பெறலாம். நேரம் : காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை. இடைவேளையின்றி. ஞாயிறு மற்றும் தமிழக அரசு விடுமுறை நாட்களில் விற்பனை இல்லை.

கடிதம் எழுத வேண்டிய முகவரி
வர்த்தமானன் பதிப்பகம்
15, சரோஜினி தெரு, தியாகராயநகர், சென்னை-17.
(உஸ்மான் சாலை - கீதாஞ்சலி ஹோட்டல் அருகில்)

கோயமுத்தூர் விஜயா பதிப்பகத்திலும் இதே சலுகை விலை ரூ.400 மட்டும் (நேரில் 9.1.2003க்குள்) ரொக்கமாகச் செலுத்தி நூலினைப் பெறலாம்.
விஜயா பதிப்பகம், கோவை. ✆: 394614, 382614.

சீதா ரவி

ஸரிகம

“சுந்தரி நீயும் சுந்தரன் ஞானும்..
சேர்ந்திருந்தால் திருவோணம்...”

தம்பூராவை மீட்டியபடி சுருதி சுத்தமாகப் பாடிக் கொண்டிருந்த பாஸ்கர் நிறுத்தி விட்டுக் கேட்டான்.

- “இது ‘கேதார’ ராகம்தானே...?”

“ஆமாம்” என்பது போல் ஜிமிக்கிகள் ஆட ஆடத் தலையசைத்த அமிர்தவர்ஷினி அலயஸ் பாப்பாவின் முகம் அன்பையும் ஆச்சர்யத்தையும் வர்ஷித்து, ஏமாற்றத்தைக் கஷ்டப்பட்டு மறைத்தது.

சினிமா, டி.வி., மாத நாவல் கதாநாயகிகளைப் போல், நமது பாப்பா ‘ருக்குமணி ருக்குமணி’ என்று மனது அதிர முதலிரவு அறைக்குள் நுழையவில்லைதான். எனினும் அந்த ஸரிகம பாப்பாவின் மனத்தில் சராசரியான எதிர்பார்ப்புகள் இருக்கவே செய்தன. இந்த பாஸ்கர் என்னடாவென்றால், தம்பூராவைத் தூக்கி வைத்துக் கொண்டு ஸோலோவாக ஒரு ஸப்த ஸ்வரங்கள் நிகழ்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறான்.

“எனக்குப் பாட்டே வராது - ஞான சூன்யம்; சங்கீத சைஃபர். இத்தியாதி இத்தியாதின்னு எங்கப்பா உங்கிட்டே சொல்லியிருப்பாரே...!” கோபமாக அவன் கேட்டபோது குரு கம் மாமனாரை விட்டுக் கொடுக்காமல் காக்க முயன்றாள் பாப்பா.

“சேச்சே! அப்படியெல்லாம் அவர் சொல்லவே இல்லே...”

“ஆங்... எனக்குத் தெரியும். அவனுக்கும் சங்கீதத்துக்கும் ஸ்நானப் பிராப்தி இல்லைன்னு சொல்லிருப்பார்...”

பாப்பா தலைகுனிந்தது வெட்கத்தில் இல்லை என்பது புரிய, பாஸ்கர் அவள் முகவாயை நிமிர்த்தி வைத்துக் கண்ணுக்குள் பார்த்தான்.

“பாப்பா! நம்ம இரண்டு பேரையும் சேர்த்து வைச்ச சாடிலைட் மேல சத்தியமாச் சொல்றேன்... எனக்குப் பாட வரும். உன் அளவுக்கு வரலைன்னாலும் சுருதி சுத்தமா பாட வரும்...”



சீஸன் சிரிப்புத் தொடர் 5

பாப்பா



ராகப் புதிர்களை நொடியில் அவிழ்த்த பாப்பா, பாஸ்கர் போட்ட புதிய புதிரால் சில கணங்கள் கட்டுண்டு நின்றாள். பிறகு, தன் மனக் கதவைத் தட்டித் தட்டித் தனியாவர்த்தனம் வாசித்த கேள்விகளை விழுங்கிவிட்டு, அறையின் ஓரத்தில் இருந்த தம்பூராவை எடுத்து அவன் கையில் கொடுத்து "இனிமே இது உங்களோடது. பாடுங்களேன்..." என்றாள்.

அவ்வளவுதான்! அந்த சரஸ்வதியே கட்டளையிட்ட பெருமிதத்தில் உருகிப் போய், அவளைக் கட்டில் மேல் அமரச் செய்துவிட்டு, தரையில் அமர்ந்து பாட ஆரம்பித்தான் பாஸ்கர். 'மன மோகனாங்க அணங்கே' வில் ஆரம்பித்து, 'ஏரிக் கரையின் மேலே', 'கொஞ்சம் நேரம் என்னை மறந்தேன்..' என்று மெள்ள முன்னேறி இப்போது 'சுந்தரி நீயும்' வரை வந்துவிட்டான்.

அவனுக்கிருக்கும் தீவிரத்தில் இனி வரவிருக்கும் திரைப்படங்களின் இன்னும் வரையப்படாத பாடல்களைக்கூட, ஞான திருஷ்டியில் கண்டு பாடிவிடுவான் போலிருந்தது!


பாப்பா சட்டென்று எழுந்து அவன் அருகே தரையில் வந்து உட்கார்ந்து தம்பூராவை வாங்கிக் கொண்டாள்.

"போதும்... நான் முழுக்க புகையிலே உட்கார்ந்திருந்துட்டு இப்படித் தொண்டையை வருத்திக்க வேண்டாம்... இவ்வளவு நாளா இத்தனை வித்தையையும் எப்படி மறைச்சு வைக்க முடிஞ்சுது...?"

"மறைக்கணும்னு தோணிப் போச்சு.. அந்த துர்வாச - விச்வாமித்ரர் இருக்காரே அதான் உன் மாமனார்... பஞ்சாபகேசன்.. நான் தம்பூராவைத் தொட்டாலே கருதி 'கலைஞ்சுபோச்சு'ன்னு ஆகாசத்துக்கும் பூமிக்கும் குதிப்பார்."

"ச்சுச்சு..."

"எங்க அம்மாவும் அவர் ரௌத்திரத்துக்குப் பயந்து



'வேண்டாண்டா' பாஸ்"ன்னு கெஞ்சுவா... சரி நமக்குச் சங்கீதம் வராது, ஸாஃப்ட் வேர் எழுதற வழியைப் பார்ப்போம்னு நானும் வேற திசையில திரும்பிட்டேன்."

"அப்புறம்...?"

"அப்புறம் பதினஞ்சு வயசுல குரல் உடைஞ்சப்போ ஒரு நாள், தனிமையும் தம்பூராவும் கிடைச்சுதா... கொஞ்சமா பாடிப் பார்த்தப்போ எனக்கே பிடிச் சிருந்தது..."

"ஆனா, அப்பா - அம்மா முன்னாடி பாடி சந்தோஷப்படுத்திடக் கூடாதுன்னு ஒரு வறட்டு வைராக்கியம்... அப்படித் தானே...?"

"அச்சோ! உனக்கெப்படித் தெரிஞ்சுது..?"

பாப்பாவின் முகத்தில் தோன்றிய கள்ளப் புன்னகை ஆயிரம் அர்த்தங்கள் ஜொலித்த 'ஃப்ளாஷ்பேக்' கதையை உணர்த்தியது பாஸ்கருக்கு.

பாஸ்கருக்கும் சங்கீதத்துக்கும் ஸ்நானப் ப்ராப்தி இல்லை என்று சொன்ன பஞ்சாபகேசன் ஸார், விஷயத்தைப் பாப்பாவின் பெற்றோரிடமும் சொல்லி, அடிக்கோடிட்டு விட்டுப் போய்விட்டார்.

சுந்தரியும் சத்தியமூர்த்தியும் பாப்பாவின் வாழ்வில் நிகழ்ந்த இந்த அபஸ்வர விபத்தை அங்கலாய்த்து மாய்ந்து முதலில் தங்களையே நொந்து கொண்டனர். விவகாரம் இத்தனை தூரத்துக்கு வளர்ந்தது தெரியாமல் தாங்கள் தூங்கியது எப்படி? சங்கீதச் சுவர் எழுப்பி பாப்பாவைச் சிறை வைத்ததாக அவர்கள் எண்ணியிருக்க, கல் இடுக்கையும் ஊடுருவும் சூரிய கிரணமாக இந்த பாஸ்கர் அவள் வாழ்க்கைக்குள் நுழைந்துவிட் டிருக்கிறான்.

பஞ்சாபகேசனின் பையனாக அவன் அமைந்தது தங்களைப் பிடித்த நல்ல காலம்! அவரே அவனுடைய தகுதிக் குறைவு குறித்து எச்சரித்துவிட்டார். பாப்பாவுக்குத் தடையுத்தரவு போடுவதைத் தவிர வேறு வழியில்லை.

அவன் அறையிலிருந்த கம்ப்யூட்டர் பறிமுதல் செய்யப்பட்டது. தொலைபேசி லைன்களின் லகான்கள் கைமாறின.

அவள் பாட்டையும் திறமையையும் வித்வத்தையும் விளங்கிக் கொள்ளும் வரன் கிடைக்கும்வரை காத்திருப்பது எவ்வளவு முக்கியம்; பாஸ்கரைப் போன்ற பதரை அடைய ஆசைப்படுவது எத்தனை முட் டாள்தனம், என்றெல்லாம் விஸ்தாரமாய்ப் பாப்பாவுக்கு விளக்கப்பட்டது.

பஞ்சாபகேசனோ மகன் தமக்கெதி ராகத் திட்டமிட்ட சதி செய்து தம்மை அவமானப்படுத்திவிட்டதாகத் தவித்தார். 'கௌரவம்' 'பாரத விலாஸ்', சிவாஜிகளின் சேர்க்கையாகித் துடித்தார்.

"இத்தனை நாளா சங்கீதத்துக்கும் உனக்கும்தான் ஸ்நானப் பிராப்தி இல்லாம இருந்தது. இன்னொரு தரம் அந்த குழந்தைகிட்டே நீ பேச்சு கீச்சு வைச் சுண்டே... உனக்கும் எனக்குமே ஸ்நானப் பிராப்தி இருக்காது தெரிஞ்சுக்கோ!" என்று குதித்தார்.

இதுநாள்வரை ஸாஃப்ட் வேரையே கட்டிக் கொண்டு அழுத பாஸ்கரின் இதயம் இறுகிப் பாறையாகி, முரண்டு பிடித்துப் பதிலுக்குச் சவால் விட்டது :

"உங்களை வெறுப்பேத்தறத்துக்காக நான் பாப்பாவைக் காதலிக்கல்லை... அவ முகம் எனக்கு நிஜமாவே பிடிச்சிருந்தது. அதைத் தான் முதல்ல எழுதினேன். இப்போ அந்த கடவுளே பிடிச்சு இழுத்தாலும் எங்களைப் பிரிக்க முடியாது... மனசு சேர்ந்து போச்சு, ராகமும் பாவமும் போல சேர்ந்து போச்சு..."

திகைப்புடன் பார்த்தார் பஞ்சாபகேசன்.

"என்ன அப்படிப் பார்க்கறது? பாப்பா வுக்கும் எனக்கும் கல்யாணம் நடக்கத்தான் போகுது... உங்களோட சம்மதத்தோட..."

சபதம் செய்துவிட்டானேயொழிய, பாஸ்



கருக்குப் பயமாய்த்தான் இருந்தது. சங்கீத சீஸன் உச்சத்தை எட்டிய டிசம்பர் மூன்றாவது வாரம் தொடங்கி, பாப்பாவின் கச்சேரிகள் அனைத்தும் ரத்தானதாக பேப்பரில் பார்க்கப் பார்க்க, பீதியே பிடித்துக் கொண்டது. 'ஸரிகம பாப்பா; சங்கீதத்துக்கு ஃபுல்ஸ்டாப்பா!' என்று பத்திரிகைகளில் வம்புச் செய்திகள் வெளிவரக் கண்டு, அழுகையே வந்துவிட்டது.

தொண்டை-மூக்கு-காது நிபுணர் திரிகுணமூர்த்தி தீர நோக்கிச் சொல்லிவிட்டார்.

"எல்லாம் நார்மலா இருக்கு. தொண்டையில இலேசா புண்ணு. ஆனா பாட முடியாத அளவுக்கு எதுவுமில்லை!"

சத்தியமூர்த்தியும் சுந்தரியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பாப்பா தன் வாழ்வின் முதல் மூன்றாண்டுகளை நினைவூட்டிய மௌன மோனத்தில் இருந்தாள்..

வேணு கான சபா கச்சேரிக்கு முந்தைய தினம் தம்பூராவை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

சங்கராபரணம் ஆலாபனை செய்ய, அது நாள்வரை ஆயிரமாயிரம் உள்ளங்களை மயக்கிய மோகனக் குரல், மேல் 'ஸ'வைத் தொட மறுத்து கீழேயே உட்கார்ந்து கொண்டு அடம் பிடித்தது.

பதறி ஓடி வந்த பெற்றோரிடம் கை விரித்தாள், பாப்பா! இல்லை; பாட வரவில்லை...; முடியாது! பஞ்சு ஸாரிடம் சொல்லிவிடலாம்; சபா செயலர்களிடமும் போன் பண்ணிவிடலாம். அமரன் சில்க்ஸில் வாங்கிய அரை டஜன் பட்டுப் புடைவைகள் வீணாகும், அவற்றைக் கிடைத்த விலைக்கு விற்றுவிடலாம். இனி தன்னால் மேடை ஏற முடியாது. சரஸ்வதி கொடுத்த சங்கீதத்தை அவளே திரும்ப வாங்கிக் கொண்டாயிற்று. மேல் நாட்டில் மேல் படிப்பு - பொருளாதாரம்தான் - தொடர்வதற்கு ஏதேனும் ஸ்காலர்ஷிப் கிடைக்குமா என முயன்று பார்க்கலாம். பாட்டு இல்லாவிட்டால் வாழ்க்கை படுத்துவிடாது...



வேறு வழியின்றி அடுத்த மூன்று கச்சேரிகள் ரத்து செய்யப்பட்டன. திரிகுணமூர்த்தி தீர்ப்பு வழங்கியும் பாப்பாவின் தொண்டை திறக்காதபோதுதான், அவள் பெற்றோரின் சந்தேகம் வலுத்தது.

பஞ்சு ஸாரை அழைத்துப் பேசினார்கள். பாஸ்கரின் சகாயமில்லாமல் பாப்பாவின் நோய் தீரப்போவதில்லை என்று இரு தரப்புப் பேச்சுவார்த்தையின் இறுதியில் ஏற்று, மேற்கொண்டு ஆக வேண்டியதைக் கவனித்தார்கள்.

"பஞ்சு ஸார் போகக் கூடாது" என்று பத்து வயதில் பாப்பா அழுது அடம் பிடித்தது நினைவுக்கு வர, அந்த அசரீரி வாக்கின் அர்த்தம் இப்போது புரிவதுபோல் இருந்தது பஞ்சாபகேசனுக்கு!

மூன்று பேரின் முரட்டுப் பிடிவாதம் தளர்ந்ததன் விளைவாய், பாப்பாவுக்கும் பாஸ்கருக்கும் குறுக்கே நின்ற தடைகள் யாவும் தகர்ந்து, இப்போது இடையே இருக்கும் தம்பூரா மட்டுமே அவர்களிருவரையும் பிரிக்கிறது... இல்லையில்லை.. அவர்களைச் சேர்க்கிறது.

பாஸ்கர் பத்து வயதில் மேற்கொண்ட அதே வரட்டு வைராக்கியத்தை இந்த இருபத்தொரு வயதில் தான் கொஞ்சம் காலம் கடைப்பிடித்ததை விளக்குகிறான் பாப்பா. அவள் தளிர் விரல்களால் தம்பூராவை ஒரு மீட்டு மீட்டுகிறாள்.

"அச்சச்சோ..! இப்போ நீ பாட ஆரம்பிக்கப்போறியா...?"

பாஸ்கர் பாப்பாவைப் பார்த்துக் கண் சிமிட்டிக் கேட்கிறான்.

இருவரும் இணைந்து சிரிக்க, உலகின் மிக இனிய சங்கீதத்தையும் வென்று சிறக்கிறது அவர்களின் ஆனந்தம்.

(மங்களம்)

தமிழ் இசைச் சங்கத்துக்கு மணிவிழா. 'இசைப் பேரறிஞர்' பட்டம் டாக்டர் பாலமுரளி கிருஷ்ணாவுக்கு வழங்கப்பட்டது. விழாவைத் தொடங்கி வைத்தவர் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம்.

கலாமுக்கும் பாலமுரளிக்கும் பார்வையாளர்களிடையே வரவேற்போ வரவேற்பு. பார்வையாளர்களின் பக்கம் அவர்கள் புன்னகைத்தாலே, தொடர்ந்து சில நிமிடங்களுக்குக் கரவொலி.

வீரப்பன் மரியாதையுடன் வரவேற்கப்பட்டார். அதாவது முன்னாள் அமைச்சர் இராம. வீரப்பன்! வந்திருந்த மற்றொரு முன்னாள் அமைச்சர் ராசாராம். நீதித்துறையின் பல 'முன்னாள்'களைப் பார்க்க முடிந்தது.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டது. சிறப்பாகப் பாடிய மாணவிக்கு தம்புரா பரிசு என்றறிவித்து, தம்புராவை வழங்கினார்கள். மற்றொரு மாணவருக்கு நாதஸ்வரம் பரிசு என்று அறிவித்தார்கள். வழங்கப்பட்டது சான்றிதழ்தான். அப்புறம் அளிப்பார்களாயிருக்கும்.

• இசைப் பேரறிஞர் விருது–



இருவருமே திருமணமாகாதவர்கள் என்பது தவிர, இந்தியாவின் பிரதமருக்கும் குடியரசுத் தலைவருக்கும் இன்னொரு ஒற்றுமையும் உண்டு போலும்! ''வளமான நாடாக்குவோம்'' என்று தொடங்கும் ஒரு தேசபக்திப் பாடலைத் தாமே எழுதி, தமது நண்பரைக் கொண்டு குமாராகப் பாட வைத்தார் அப்துல் கலாம். தொடர்ந்து நடைபெற்ற இன்னிசைக் கச்சேரியில், சீர்காழி சிவசிதம்பரம் இதையே தமது நிகழ்ச்சியின் முதல் பாடலாகப் பாடியது சாதுர்யம்.

பொதுவாக, குடியரசுத் தலைவர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் என்றாலே ஓர் இறுக்கம் இருக்கும். ஆனால் அப்துல்கலாம் விதிவிலக்கு. அங்கும் இங்கும் வேகமாகச் செல்கிறார். எதிர்பாராத ஆனந்தங்களைக் கொடுக்கிறார். (உதாரணம் தேசிய கீதம் இசைத்த நாதஸ்வர மாணவர்களோடு தாமாகச் சென்று புகைப்படம் எடுத்துக் கொண்டது). பாதுகாப்புப் பிரிவினர்பாடுதான் திண்டாட்டம்!

தமிழ் மணிவிழாவில் இசைக் 'கலாம்!'

பழுப்பு நிற பட்டு ஜிப்பாவின் மேல் நீண்ட சிவப்பு ஜரிகை ததும்பிய அங்கவஸ்திரத்தோடு வந்திருந்த பாலமுரளி கிருஷ்ணா, பட்டத்தைப் பெற்றுக்கொண்டு, தாம் விஜயவாடாவிலேயே முழு தமிழிசைக் கச்சேரி செய்ததைக் குறிப்பிட்டார். இசைக் கலைஞர்களான தமது பெற்றோருக்கும், குருவுக்கும் விருதைச் சமர்ப்பித்தார். தாம் தமிழில் கச்சேரி செய்யத் தொடங்கி அறுபது வருடங்கள் நிறைவானதைக் குறிப்பிட்டு, அந்த விதத்தில் இது தமிழிசைச் சங்கத்துக்கு மட்டுமல்ல, தமக்கும் மணி விழாதான் என்றார்.


தமிழிசைச் சங்கத்தின் செயலாளரான ஏ.சி. முத்தையா, "சங்கத்தின் ஐம்பத்து எட்டாவது ஆண்டு நிறைவு விழாவுக்கே டாக்டர் அப்துல் கலாமைத் தலைமை ஏற்கச் சொன்னோம். அப்போது அவரால் நேரம் ஒதுக்கமுடியாத நிலை. நாட்டின் முதல் குடிமகன் எனும் வகையில்தான் அவர் இந்த விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என்றிருக்கிறது" என்றார்.

ஒரு சிறந்த விஞ்ஞானியை விட, ஒரு குடியரசுத் தலைவருக்கு நேரம் ஒதுக்குவது எளிது போலும்!

— ஜி.எஸ்.எஸ்



அட்டையில் பாலமுரளி கிருஷ்ணா படம் யோகா





கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
- பாரதியார்.

அபாயகர வாஜ்பாய்


தமிழக தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று 1967ல் தி.மு.க. முதல் முறையாக ஆட்சி அமைத்த போது, 'அடங்கெழில் சம்பத்து' என்று தலைப்பிட்டு ராஜாஜி எழுதினார் :

'வந்து சேர்ந்திருக்கும் சம்பத்து, ஈசன் சம்பத்தும் அருளும் ஆகும். அதை வெளியில் சொல்லாமல், உள்ளத்தில் ஈசனுக்கு அர்ப்பணமாக்கி அடக்கத்துடன் அனுபவிக்க வேண்டும். இல்லாவிடில் இரவில் தூங்கி, காலை எழுந்ததும் எங்கேயோ மறைந்துவிடும்...'


கடவுள் பற்றை மிகுதியாக வெளிப்படுத்திக் கொள்ளும் பாரதிய ஜனதா கட்சி, குஜராத் தேர்தலில் பெற்ற வெற்றிக்கும் இந்த வாசகங்கள் பொருந்தும்.

1967 தமிழக தேர்தலின் அரசியல் களமும் இன்றைய குஜராத் அரசியல் களமும் முற்றிலும் வேறானவைதான். எனினும் வெற்றியின் போதை குறித்த மூதறிஞரின் எச்சரிக்கை, காலத்தால் அழியாதது, என்பதற்கான சான்றுகளை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

குஜராத் வெற்றியைத் தொடர்ந்து பா.ஜ.க. தரப்பிலும், அதன் மூல சக்தியான விஸ்வ ஹிந்து பரிஷத் தரப்பிலும் எழுந்துள்ள அகந்தை மிக்க பறைசாற்றல்கள்,



2002 டிசம்பர் 29
சித்ரபானு மார்கழி 14
மலர் : 61
இதழ் : 22



அதிர்ச்சி யூட்டுகின்றன.

வெற்றி பெற்றவுடனேயே நரேந்திர மோடி பெருந்தன்மையுடன் பேசியதாகத்தான் தோன்றியது. 'எங்களுக்கு எதிராக வாக்களித்தவர்களையும் நாங்கள் பாதுகாத்து மதிப்போம்' என்றார். ஆனால், இதற்கு நேர் மாறாகப் பிரதமரே மறு நாள் பேசியிருக்கிறார் : 'ஹிந்துக்கள் கொலை செய்யப்பட்ட கோத்ரா சம்பவம் குறித்து முஸ்லிம்களிடையே நாடெங்கும் போதுமான அளவில் கண்டனங்கள் எழவில்லை; அதனால்தான் குஜராத் தேர்தலில் ஹிந்து வாக்குகள் பா.ஜ.க.வுக்கு ஆதரவாகப் பதிவாகி வெற்றி தேடித் தந்துள்ளன' என்பதாகக் கூறியிருக்கிறார்.

இது முற்றிலும் தவறான கணிப்பாகும். கோத்ரா படுகொலையை ஹிந்துக்கள் - முஸ்லிம்கள் என்ற பாகுபாடின்றி நாடே ஒட்டு மொத்தமாகக் கண்டனம் செய்தது. ஆனால் அதன் கடுமையை உணர முடியாதபடிக்கு, அடுத்தடுத்து நடந்த பழிவாங்கும் சம்பவங்கள் தடுத்துவிட்டன. மாநில அரசின் ஆதரவுடன் நடந்த இந்தப் பழிவாங்கல் சம்பவங்களின் பக்கம் கவனமும் கண்டனமும் திரும்பியதால் கோத்ரா கண்டனம் நீர்த்துப் போயிற்று. அல்லாது போனால் அதன் கொடுமையை எல்லோரும் நன்கு உணர்ந்திருப்போம். எனவே, பிரதமரின் அறிக்கை தவறானது; அதனினும் முக்கியமாக ஆபத்தானது!

கோத்ராவையும் அதன் பின் விளைவுகளையும் ஒரு கொடிய பாடமாக மட்டுமே கொண்டு எச்சரிக்கையாக இருப்பதற்குப் பதிலாக, மத வேற்றுமைகளைத் தூண்டி மக்களைப் பிரித்து, தேர்தல்களில் வெற்றி பெறும் குறுக்கு வழியை பா.ஜ.க. நிலைபெறச் செய்து கொண்டிருக்கிறது.

இந்த முயற்சிக்குக் கை கொடுத்து, தோள் கொடுத்து, குரல் கொடுத்து உதவுகிறது விச்வ ஹிந்து பரிஷத். அதன் செக்ரடரி ஜெனரல் பிரவீண் தொகாடியா பேசியிருப்பவை, நமது அரசியல் சாசனத்துக்கு முற்றிலும் விரோதமான கருத்துக்கள்.

அடுத்த கட்டமாக, மேலும் ஐந்து மாநிலங்களில் ஹிந்துத்வ கொள்கைகளைப் பரப்பப் போவதாகவும், இந்த மாநிலங்களில் இனி இஸ்லாமியர்களுக்குச் சம அந்தஸ்து கிடைக்காது என்றும் தெளிவாகச் சொல்கிறார். ஹிந்துத்வத்தை எதிர்ப்பவர் யாராயினும் அவர் மரண தண்டனையைச் சந்திக்க வேண்டும் என்று மிரட்டுகிறார்.

இத்தகைய பேச்சுக்கள் தேச விரோதம், அரசியல் சாசன விரோதம் மட்டும் அல்ல; அவை ஹிந்து கோட்பாடுகளுக்கே விரோதமானவை.



பிற மதங்களை அழிக்கும், ஒழிக்கும் உரிமையை ஹிந்து மதமும் வழங்கவில்லை; நமது அரசியல் சாசனமும் வழங்கவில்லை. ஹிந்து மதம் பிற மதங்களை அரவணைக்கிறது. இந்திய அரசியல் சாசனம் அனைத்து மதங்களுக்கும் சம அந்தஸ்து அளிக்க முற்படுகிறது.

'மதச்சார்பற்ற' என்ற சொல்லே ஹிந்து விரோதத்தைக் குறிப்பதாக ஒரு மாயையை பா.ஜ.க. உருவாக்கி உலவவிட்டிருப்பதுடன், இப்போது இஸ்லாம் விரோதத்தை வெளிப்படையாக வளர்த்தும் வருகிறது.

இந்த தந்திரம் பா.ஜ.க.வுக்குத் தேர்தல் வெற்றிகளைப் பெற்றுத் தரலாம். ஆனால் நாட்டு மக்களை இரண்டாகப் பிளவுபடச் செய்துவிடும். மதவாத சக்திகள், அவற்றுக்கு எதிரானவை என்று பிளவுபட்டு நிற்கும் நாட்டினுள், அன்னிய ஊடுருவல் மிக எளிதாக நடைபெறும். உள்நாட்டுக் கலவரங்களும் அதிகரிக்கும்.

பாரதிய ஜனதா கட்சியின் சூழ்ச்சியைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு நம் நாட்டின் பெரும்பாலான வாக்காளர்களுக்குச் சூட்சும அறிவு கிடையாது. பசப்பு வார்த்தைகளில் மயங்கிவிடுகிறார்கள். அவர்களைத் தெளிவிப்பதுடன், நாட்டை இந்தக் கொடிய வியாதியிலிருந்து காக்கும் பெரும் பொறுப்பு எதிர்க்கட்சியான காங்கிரஸின் தோள்களில் இறங்கியிருக்கிறது.

குஜராத் தேர்தலின்போது, ஹிந்துக்களை விரோதித்துக் கொள்ள அஞ்சி, காங்கிரஸ் ஒரு விளக்கெண்ணெய்ப் பிரசாரத்துடன் நிறுத்திக் கொண்டுவிட்டது. மதவாதத்தைப் பலமாகத் தாக்குவதற்குப் பதில், ஜாதி அடிப்படையில் வேட்பாளர்களை நிறுத்தி, பிரசாரம் செய்யவும் வெற்றி பெறவும் முயன்றது. இவையெதுவும் பலனளிக்கவில்லை.

இனி வரும் தேர்தல்களுக்குள் காங்கிரஸின் செயல்திட்டம் மாறியாக வேண்டும். மதவாதத்தின் பயங்கரத்தை மக்களுக்கு வலுவாக, அறிவுபூர்வமாக எடுத்துச் சொல்வதுடன், மதச்சார்பின்மையை ஆதரிப்பதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்திப் பிரசாரத்தை வடிவமைக்க வேண்டும். ஹிந்து பெரும்பான்மையினரின் ஆதரவை இழந்து விடுவோம் என்று அஞ்சாமல் மதச்சார்பின்மையின் உண்மையான கருத்தை விளக்கி, அவர்களை அரவணைத்துச் செல்லும்விதமாகப் பிரசாரத்தை வடிவமைக்கலாம்.

உட்பூசல்களை மறந்து, ஒன்றுபட்டு ஊக்கத்துடன் உடனே செயல்படாமல் காங்கிரஸ் தூங்குமானால், நாட்டை மீளாத் துயரில் ஆழ்த்தியதற்கான அவப் பெயர் பா.ஜ.க.வை மட்டுமின்றி காங்கிரஸையும் பற்றிக் கொள்ளும். ●



தாரை வார்க்கப்படும் தரிசு நிலங்கள்!

"தமிழ்நாட்டிலுள்ள சுமார் ஆறு லட்சம் ஏக்கர் தரிசு நிலங்களைத் தனியார் தொழில் நிறுவனங்களுக்குத் தாரைவார்த்து, ஒழிக்கப்பட்ட ஜமீன்தார் ஆட்சி முறைக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் ஜெயலலிதா" குற்றம் சாட்டுகிறார் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் பீட்டர் அல்போன்ஸ்.

இந்தத் திட்டம் சரியான உதாரணம். தரிசு நிலங்கள் எதற்காக கிராமப்புறங்களில் அப்படியே விடப்பட்டிருக்கின்றன, என்று தெரியாமல் (தெரிந்தும் கண்டு கொள்ளாமல்?) தாரை வார்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது தமிழக அரசு.

"இந்தத் தரிசு நிலங்கள் அல்லது, திறந்த வெளி இடங்கள், ஆடு மாடு புல் மேயும் இடங்களாகவும், மந்தை, புறம்போக்கு என்று மாடுகளைக் கட்டி வைக்கும் இடமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதுதவிர, கிராம மக்கள் அடுப்பெரிப்பதற்காக சுள்ளி, விறகு எடுப்பது அந்தப் பகுதியில்தான். மேலும் தமிழ்நாட்டிலுள்ள தொண்ணூறு சதவிகித கண்மாய்கள், ஏரிகளுக்கு மழை பிடிப்புப் பகுதியாக விளங்குவது இந்த தரிசு நிலப்பகுதிகள்தான். பெரும்பாலான கிராமங்களில் இந்தத் திறந்தவெளி இடங்களின் வழியாகத் தான் பாதை போகிறது. மொத்தத்தில் சொல்லப்போனால், இந்த நிலங்கள் சமுதாயத்தின் ஒட்டு மொத்தத் தேவை. நாளை தனியார் வேலி கட்டிவிட்டால், மக்கள் என்ன செய்ய முடியும்? எத்தனையோ மன்னர்கள், ஜமீன்தார்கள் ஆண்டு வந்தாலும், தரிசு நிலங்களை அப்படியே விட்டுத் தான் வைத்தார்கள். இப்போது ஜெயலலிதா அரசு, இந்த நிலங்களைத் தொண்ணூற்றியொன்பது ஆண்டுக் கால குத்தகையாக, தனியார் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப் பார்க்கிறது. 224 பெரிய நிறுவனங்கள் உட்பட, 1300 நபர்கள் இந்தத் தரிசு நிலங்களைப் பெறப் போட்டி போடுகிறார்கள். இந்த நிலங்கள் தனியார் கைக்குச் சென்றுவிட்டால், அதை மீட்பது கடினம். பின்னர் கோயில் நிலங்களுக்கு ஆன கதிதான். இதில் விசித்திரம் என்னவென்றால், தங்களுக்கு எந்தப் பகுதியில் உள்ள தரிசு நிலம் தேவை என்பதை, நிறுவனங்களே தேர்ந்தெடுத்துச் சொல்ல வேண்டுமாம். அடிப்படைத் தேவைகள் உள்ள பகுதிகளைத்தான் இந்த நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கும். அதற்குப் போட்டி இருக்கும். போட்டி இருந்தால் அரசியல்வாதிகள் பாடு கொண்டாட்டம்தான்."

"தரிசு நிலங்களின் மேம்பாடு நல்ல தொலைநோக்குத் திட்டம்தானே!"

"எதை எதை தனியார் கையில் விட வேண்டும் என்பதற்கு ஓர் எல்லை இருக்கிறது. இன்று தரிசு நிலங்களை விடுவார்கள், நாளை ஏரிகள், குளங்கள் ஆகியவற்றையும் விட்டு விடுவார்கள். முதலில் இந்த அரசு, உள்ளாட்சிகள் மற்றும் உள்ளூர்ப் பிரமுகர்களுடன் கலந்து ஆலோசித்து, எந்தெந்தப் பகுதி சமுதாயத்துக்குத் தேவைப்படாதது என்று அடையாளம் கண்டு, பின்னர் செயல்படட்டும்"

- ப்ரியன்

தேவ மருந்து 21

“சாத்வீக வாழ்க்கை வாழ்பவர்கள் பூண்டு சேர்த்துக் கொள்வதில்லை. ஆனால் பூண்டு, அமிர்தத்துக்கு ஒப்பான அரிய மூலிகை என்று சொல்கிறார்களே டாக்டர். பூண்டு உபயோகிக் கலாமா?” என்று கேள்வி கேட்டிருக்கிறார் மதுரை, வி. சியாமளா நாதன்.

பூண்டு பற்றிச் சொல்லும்போது, ஒரு சின்ன கதை ஞாபகத்துக்கு வருகின்றது.

அமிர்தம் எடுப்பதற்காக, தேவர்களும், அசுரர் களும் பாற் கடலைக் கடைந்த புராணக் கதை, உங்களுக்குத் தெரிந்ததுதான். அப்போது, மகாலக்ஷ்மி, ஐராவதம், காமதேனு, கற்பக விருட்சம் போன்ற அபூர்வ வஸ்துகள் தோன்றின. பகவான் தன்வந்தரியும்

பூண்டு சாப்பிடலாமா?



அவ்வாறே தோன்றினார். அமிர்தமும், தோன்றி யது. ஆலகால விஷமும் தோன்றியது.

அமிர்தத்தை, திருட் டுத்தனமாகப் பெற்ற ராகு, அதை அருந்தவே, ராகுவின் கழுத்து அறுபட்டுப் போனது. அப்பொழுது ராகுவின் தொண்டையிலிருந்து ஒரு சில அமிர்தத் துளிகள் கீழே விழுந்தன. அந்த அமிர்தத் துளிகளே, வெள்ளைப் பூண்டாக மாறின என்பது ஐதீகம்!

இது அமிர்தமாகவே இருந்தாலும், அசுரத் தன்மை கொண்ட உடலிலிருந்து தோன்றிய தால், இறைத் தன்மை விரும்புபவர்கள் இதைச் சாப்பிடுவதில்லை.

வெள்ளைப் பூண்டானது, மனோ குணங்

டாக்டர் எல்.மகாதேவன்

களில், 'ரஜஸ்' எனப்படும் உணர்வுகளைத் தூண்டும் தன்மையுடையது என்பதால், ஆசாரப் பெரியவர்கள் இதை ஒதுக்கி விடுகிறார்கள். ஆனால் மருந்தாகப் பயன்படுத்தும்போது, இந்த சித்தாந்தம் பொருந்தாது.

வெள்ளைப் பூண்டை, கபம் அதிகரித்தவர்கள் கட்டாயம் பயன்படுத்த வேண்டும். உஷ்ண வீரியத்தைச் சேர்ந்த பூண்டானது, வாத நோய், கப நோய் மற்றும் எலும்பு சம்பந்தமான நோய்களுக்கு மிகச் சிறந்த மருந்து.

சுத்தமான வெள்ளைப் பூண்டின் மேற்குருணிகளைக் களைந்து, 'மதுரை' எனப்படும் 'ஒயினி'ல் இரவு முழுக்க ஊற வைத்து, மறுநாள் காலை நசுக்கிப் பிழிந்துச் சாறெடுத்து, 1 : 3 என்ற அளவுக்கு வெள்ளைப் பூண்டுச் சாறும், மத்ய ரசமும் சேர்த்துச் சாப்பிடும் வழக்கமுண்டு. மத்ய ரசத்துக்குப் பதிலாக மோரிலும் சாப்பிடுவார்கள். இவ்வாறு உபயோகிக்கும் மருந்துக்கு, வெள்ளைப் பூண்டு ரசாயனம் அல்லது லசுன ரசாயனம் என்று பெயர். வாத கப நோய்கள், நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்னைகள், கழுத்துவலி, இடுப்புப் பிடிப்பு மற்றும் யோனி நோய்களுக்கு பூண்டு ரசாயனம் மிகச் சிறந்தது.

வெள்ளைப் பூண்டு சாப்பிடுகிற அன்று சம்பா அன்னத்தில் செய்த உணவையோ, கஞ்சியையோ, பால் சேர்த்துச் சாப்பிடுவது வழக்கம்.

வெள்ளைப் பூண்டும், பாலும் பொதுவாகச் சேராது. இதற்கு 'விருத்தம்' என்று பெயர். ஆனால் மருந்தாக உபயோகிக்கும் பொழுது, வெள்ளைப் பூண்டை, பாலில் காய்ச்சிக் கொடுக்கலாம். இதனால் வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள், குன்ம நோய்களுக்கு, பூண்டு நல்ல பலன் தரும். கொழுப்புச் சத்து சேராது தடுக்கும் என்பதால், உடல் சீராக இருக்கும்.

பூண்டுக்கு காரத் தன்மை இருப்பதால், பித்தம் மற்றும் ரத்த சம்பந்தமான நோய் உள்ளவர்கள் அதிகம் சாப்பிடக் கூடாது.

துவையல், ரசம் போன்றவற்றில் வெள்ளைப் பூண்டைப் பயன்படுத்தி, மிதமாகச் சாப்பிட்டால், ஆரோக்கியம் என்றும் உங்கள் பக்கம்.

(அடுத்த வாரம்)



• 'சந்தோஷ வானிலே' ஸ்ரீயா

சிம்ரனுக்குப் போட்டி!


அதிக வசூல், ஆஸ்கார் தேர்வென்று பேசப்பட்ட 'லகான்' படத்தின் நாயகி கிரேசி சிங்குக்கு பாலிவுட்டில் பெரிய வரவேற்பில்லை. ஆனால் தெலுங்கில் இவர் நாயகியாக நடித்து கடந்த ஆண்டு வெளிவந்த 'சந்தோஷம்' நூறு திரையரங்குகளில் இரு நாட்களைக் கடந்து ஓடிக் கொண்டிருக்கிறதாம். விடுவார்களா நம்மவர்கள்? சந்தோஷத்தை 'சந்தோஷ வானிலே' என்று சின்ன வால் ஒட்டி, தமிழ்ப்படுத்தி வெளியிடுகிறார்கள். நாகர்ஜுன், பிரபு தேவா நாயகர்களாக நடித்திருக்கும் இந்தப் படத்தின் மற்றொரு நாயகி ஸ்ரீயா. கடந்த ஆண்டு மிஸ் இந்தியா போட்டியில் ரன்னர் அப் இந்த ஸ்ரீயா.

பளிங்குக் கண்களும், பளீர்ச் சிரிப்புமாக இருக்கும் இந்தப் பெண்ணைப் பார்த்து சிம்ரன், ஷெரீன் வகையறாவே பயப்படுவதாகக் கேள்வி.

- ஸ்ரீ




லால்குடி ஜி.ஜே.ஆர். கிருஷ்ணன்-விஜயலக்ஷ்மி





'அப்பாவே குருவாக அமைவது தடைக்கல்லா, படிக்கல்லா...?' அனுபவபூர்வமாக அலசுகிறார்கள்... லால்குடி ஜெயராமனின் வாரிசுகள்...

எங்கள் அப்பாவும் குருவும், லால்குடி ஸ்ரீ ஜெயராமன் என்பது உலகறிந்த விஷயம். அவர் வயலினில் ஒரு சாஸ்திரிய நித்ய யௌவன பாணியை உருவாக்கியவர். உலகெங்கும் கொடி கட்டிப் பறக்கும் மேதை, கம்போஸர், நேர்மையாளர், ஒழுக்கம் போற்றுபவர், உழைப்பாளர், சிந்தனையாளர்.



• லால்குடி கிருஷ்ணன் – விஜயலக்ஷ்மி



• அப்பாவே குரு...

நாங்கள் இருவருமே சில வருடங்கள் எங்கள் தாத்தா அமரர் லால்குடி வி.ஆர். கோபாலய்யரிடம் வாய்ப்பாட்டு, வயலின் கற்றுக் கொண்டு, பிறகு அப்பாவின் கவனத்துக்கு வந்தோம்.

குரு கூறும் விஷயங்கள் கொஞ்சம் காட்டமாக, அனல் காற்றாக வந்தாலும் "என்ன, நம்ப அப்பா தானே சொல்றார்" என்று எதையும் நல்ல முறையில் எடுத்துக் கொள்ள முடிந்தது. வீட்டிலேயே கண்டிப்பான குரு இருப்பதால் நெளிவு எடுக்க முடியாது. 'இப்போ ஹோம் ஒர்க் இருக்கு', கொஞ்சம் விளையாடிட்டு அப்புறம் வரேன்' என்ற பேச்சுக்கே இடமில்லை. பள்ளி விடுமுறைகளில் நந்தி ஹில்ஸ் போவோம். அப்பா அம்மா, மற்ற சில மாணவர்களுடன் செல்வோம். அங்கு தினமும் பன்னிரண்டு மணி நேரம் சாதகம் தான்! நடுநடுவே இன்னும் தெம்புடன் உழைக்க, கொஞ்சம் விளையாட்டும் உண்டு. வருஷத்தில் ஒரு மாதம் இப்படித்தான். முதலில் கொஞ்சம் கஷ்டம். ஆனால் போகப் போக இந்த அனுபவத்தையே அனுபவிக்க ஆரம்





பித்தோம்.

குருகுல வாசம் எங்களுக்கு முந்தைய தலைமுறையில்தான் இருந்தது. ஆனால் எங்களுக்கு முதலில் இருந்தே குருகுல வாசம்தான். இங்குதான் குருவின் தன்மை அதிக முக்கியமாகிறது. எங்கள் விஷயத்தில் குரு எப்போ

சீண்டி விட்டு, சண்டை போடப் பழக்கி பிறகு தன் காலிலேயே நின்று, தானே இரை தேடத் தயார் செய்வது போலத்தான் இதுவும். மேடைகளில் மேதை பாலக்காடு மணி அய்யர், போன்றவர்களுடன்

சூப்பர் ஸ்டாரின் யு.பி.எஸ். ஆசி!

தும் சங்கீதத்தையே பேச்சாக, மூச்சாக, சிந்தனையாகக் கொண்டவர். மற்ற விற்பன்னர்களோடு, வித்வான்களோடு சங்கீத சம்பந்தமான உரையாடல்கள், அவர் புதுவிதமான கச்சேரி முயற்சிகள் செய்தபோது, அதற்காக வீட்டில் நடந்த பயிற்சி, அவருடைய ஸோலோக்களையும், பக்கவாத்தியமாக வாசித்த கச்சேரிகளையும் கேட்கும் வாய்ப்பு, இதைவிட முக்கியமாக எல்லாவற்றையும் விமர்சனம் செய்வது, என்று எங்களுக்கு ஏகப்பட்ட சந்தர்ப்பங்கள்.

வாசிக்கும் வாய்ப்பு மூத்தவனான எனக்குக் கிடைத்தது. எங்கள் இருவருக்கும் மேடையில் சவால்

• "பேஷ்...பலே!"



ஒரு மாணவனுக்கு சந்தேகம் வருவது சகஜம். சில சமயம் குரு வீட்டுக்குப் போகும் முன் என்ன சந்தேகமென்பதே மறந்து விடும். இந்தக் கோளாறு நமக்குக் கிடையாது. உடனுக்குடன் சந்தேக நிவர்த்தி. அத்துடன் அவர் நடமாடும் கலைக் களஞ்சியம். அதனால் பிரச்னையே கிடையாது. குருவும் சிஷ்யனும் சேர்ந்து மேடைக் கச்சேரி செய்வது ஒன்றும் புதிது இல்லை. ஆனால் ஒரு காலகட்டத்தில் தொய்வு ஆகிவிடும். அப்பாவே குருவானதால், எங்களுக்கு இந்தப் பிரச்னை இல்லை. ஒரு சிங்கம் தன் குட்டியை விளையாட்டாகச்



• "அப்பா, யாரோ சபா செக்ரட்டரியாம்!"

களையும், ஆச்சர்யத்தையும் கொடுத்துவிட்டு, அப்பா செய்யும் விஷமத்தனமான, புன்முறுவல் மறக்க முடியாத ஒன்று.

குரு ஸாதகம் செய்வதை ஒளிவு மறைவு இல்லாமல் பார்க்க, கேட்க, சந்தர்ப்பம் நிறையக் கிடைத்தது. அவரின் வர்ணங்கள், தில்லானாக்கள் முதலில் எப்படி பிறப்பிக்கப்பட்டு, பிறகு சத்துணவு, செதுக்கல், ஒதுக்கல் கொடுத்து, எப்படி சிரஞ்சீவியான படைப்புகளாக மாற்றப் படும்! இதையெல்லாம் அருகிருந்து பார்க்கும் அனுபவமே தனி அனுபவம்தான்.

சுய விமர்சனம், சங்கீதத்தை எப்படி தொழிலாக பாவிக்காமல் தெய்வமாகக் கருத வேணுமென்ற விலை மதிக்க முடியாத நல்ல நோக்கம் நாங்கள் கற்றுணர்ந்து, மனமுவந்து செயல் படுத்தும் பலப்பல நல்லொழுக்கத்தில் சில.

கடைக்குட்டியான நான், அப்பாவுடன் ஆரம்பக் காலத்தில் வாணிமஹாலில் சேர்ந்து வாசித்தேன். அன்று நான் எதிர்பார்த்த அளவுக்கு வாசிக்கவில்லை. அன்று வீட்டுக்கு வந்து 'அர்ச்சனை'க்கு ரெடியானேன். ஆனால் அப்பாவோ கப்சிப்! ஒன்றுமே நடக்காதது போலிருந்தார். விளைவு...? நானே என்னைக் கடிந்து கொண்டேன்.

அவர் பாரபட்சமற்ற குரு. எல்லா சிஷ்யருக்கும் சமபந்தி போஜனம் தான். ஒரே விருந்துதான். தப்பு செய்தால், யார் கூட இருப்பது என்று பார்க்காமல் நறுக்கென்று கண்டிப்பார். நன்கு வாசித்திருந்தால் 'நல்லது மனசளவிலே' என்று அமைதியாக இருந்து விடுவார்.

அப்பாவுக்குத் தன் அப்பாவிடம் தான் சிக்ஷை. அந்தத் தலைமுறை குரு – சிஷ்ய உறவை விட, எங்கள் தலைமுறை உறவு கொஞ்சம் தாராளம். ஆனால் அந்தந்தக் காலகட்டத்துக்கு அது கொஞ்சம் அதிகம். இப்போது அவரிடம் பேத்தியும் பேரனும் உரிமையோடு கற்றுக் கொள்வதையும் விளையாடுவதையும் பார்த்தால், நாங்களும் சிறுவராக மாறிவிட்டால் என்ன என்று தோன்றுகிறது.

அப்பாவை முதலில் ஒரு குருவாகத்தான் பார்க்கிறோம். ஒரு மரியாதை மேலிட்ட பிரியம் கலந்த கண்ணோட்டம் தான் எங்களுக்கு அவரிடம்.

குரு சிஷ்யன் ஒரே குடும்ப பரம்பரையில் வந்தால் ஒப்பீடுகள் கழுத்தை நீட்டிக் கொண்டு வந்துவிடும். 'என்ன இருந்தாலும் அப்பா மாதிரி இல்லை.' 'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி' என்ற இருவித அபிப்ராயங்களையும் சமநோக்குடன் எடுத்துக் கொள்ளும் மனப் பக்குவம், எங்களுக்கு இயற்கையிலேயே அமைந்தது.

ஒரு மகோன்னதமான ஸ்தானத்தை வகிக்கும் சூப்பர் ஸ்டார் என்பதால், வீட்டில் பார்வையாளர்கள் வந்தால், கவனம் முழுக்க அப்பா பக்கமே, நாங்களும் பாதிக் குரலில் அரைகுறை வார்த்தையே பேசுவோம்.

தாமே ஒரு பிஸி ஆர்டிஸ்டாக இருப்பதாலும், சில மரபுகளைக் கடைபிடிப்பதாலும், மற்ற சில குரு – தந்தை குழந்தைகளை மேம்படுத்தச் செய்வது போல் செய்ய மாட்டார். அப்பா, எங்கள் கச்சேரிக்கு வந்து உட்கார்ந்து கேட்பதும் கிடையவே கிடையாது. ஆனால் டேப்-ஐ ஸ்கேன் பண்ணி விடுவார்.

இந்தப் பரம்பரையில் வருவதாலும், அதே வாத்தியத்தை நாங்கள் எடுத்துக் கொண்டதாலும், எங்களுக்கு மகத்தான பொறுப்பு, எதிர்பார்ப்பு. இதை ஓரளவு நல்ல முறையில் ஈடு கட்டி வருகிறோமென்று சொல்ல வேண்டும்.

ஒருவர் வாழ்க்கையில் மேம்பட, குருவின் ஆசி மிக அத்யாவசியம். குருவே அப்பாவாக இருக்கும்போது, குளோஸ் சர்க்யூட் ஆசிகள் இரட்டிப்பு ஊக்கமாக யு.பி.எஸ். இணைப்புடன் கிடைக்கிறது. இது பெரும் பேறல்லவா!

ஆனந்த் ராகவ்

பச்சை குத்தும் நாரதர்!

தாய்லாந்தவர்கள் பேய்க்கு வாழ்க்கைப்பட்டவர்கள். வீட்டில் தாங்கள் இருப்பது போதாதென்று கூடவே ஆவிகளையும் தங்க வைக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் வீட்டுக்கு வெளியே துளசி மாடம் அளவில் ஒரு சின்ன மண்டபம் இருக்கும். அது ஆவிகள் குடியிருக்க வீடு. ஒவ்வொரு இடத்திலும் ஆவிகள் உலவுவதாய் ஒரு நம்பிக்கை. ஆவிகள் உலவும் அந்த வெற்றிடத்தில் வீடு கட்டினால், அந்த ஆவிகள் தங்கள் இடத்தை அபகரித்துக் கொண்ட கோபத்தில் கெடுதல் செய்யும், என்று வீட்டில் இந்த ஆவி அவுட் ஹவுஸ்! அந்த இடத்து ஆஸ்தான ஆவிகள் அந்த மண்டபத்தில் தங்கிக் கொள்ளுமாம். தினமும் காலையில் ஆவி மண்டபத்துக்கு, பூ, பழம் வைத்து பூஜை வேறு. தாய்லாந்தில் சக்கைப் போடு போடும் பாதிப் படங்களின் கதாநாயகி பேய்தான். இது தவிர பேய் ஓட்டுதல், தாயத்து என்று ஆவி உலக சமாசாரங்கள் ஏராளமாய் உள்ளன. இவை அத்தனையும் நம் கடவுள்கள் பெயரால்தான் நடக்கின்றன. 'வான்சாய்' என்பவர் வருடம் இருமுறை நடத்தும் ஊர்வலத்தில், மக்கள் பயபக்தியுடன் அவரைத் தொடர்ந்து சென்று காலில் விழுந்து சேவித்து, ஆசீர்வாதம் வாங்கிக் கொள்கிறார்கள். வான்சாய் உடம்பில் 'சிவனும்' 'காளியும்' வருவதாக நம்பிக்கை!



• கத்தி பட்டாலும் வெட்டுப்படாது!

அதிர்ஷ்ட தாயத்து

தாய்லாந்தவர்கள் அதிர்ஷ்டத்தில் ஏராளமாய் நம்பிக்கை உள்ளவர்கள். அரசு நடத்தும் லாட்டரி, அங்கிகரிக்கப்படாத தனியார் லாட்டரி என்று லாட்டரிப் பித்தாய் பாதி ஜனங்கள் தூக்கத்தில் கூட நம்பர் எண்ணிக் கொண்டிருப்பார்கள். கால்பந்தாட்டப் போட்டிகளின்



• சுருட்டு நாரதர்



• கோல்ட் ஹவுஸ்!

போது, பந்தயப் பணத்தில் பாதி தாய்லாந்தில்தான் புரளுகிறது. பாங்காக்கில் உள்ள ஒரு புத்தர் கோயிலில் உள்ள மரத்தில் பூக்கும் பூக்கள், கீழே உதிர்ந்த பின் அதை எடுத்துப் பார்த்தால், அதில் லாட்டரியில் பரிசு விழப் போகும் எண் தோராயமாய்த் தெரியும் என்று பூப் பொறுக்குகிற புண்ணியவான்கள் இருக்கிறார்கள். இதைத் தவிர, கோயில் மரத்தைப் பூஜை செய்து, அதன் பட்டையில் சுரண்டி சுரண்டிப் பார்க்கும் விநோத பழக்கம் இங்குண்டு. அப்படி சுரண்டிப் பார்த்தால், அதில் பரிசு விழப் போகும் நம்பர் எந்த வடிவத்திலாவது தெரியும் என்று, பாயைப் பிராண்டும் நம்மூர் பிராண்டலுக்கு இணையாக, தேமே என்று நிற்கும் மரத்தைச் சுரண்டும் கோஷ்டி இருக்கிறது. இந்த அதிர்ஷ்டம் அடிக்க இவர்கள் அணிவது தாயத்து.

தாயத்து கட்டாதவரே இந்த ஊரில் இல்லை. புத்தர் சிலை, மந்திரிக்கப்பட்ட சாம்பல், சில மூலிகைகள், மிருகங்களின் நகம், பல் போன்ற பாகங்கள் இது மாதிரி சூன்யக் கிழவி சமாசாரங்களையெல்லாம் தாயத்து ஆக்கி அணிந்து கொள்கிறார்கள். நடுவர்களை மயக்கிப் பரிசு வாங்க, இந்த மாதிரி தாயத்து ஒன்றைத் தலையில் ஒளித்து வைத்துக் கொண்டு வந்ததாய், தாய்லாந்து அழகிப் போட்டியில் ஒரு பெண்மணி விலக்கப்பட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

பச்சை

தாய்லாந்தில் நிலவும் இன்னொரு வெறி பிடித்த பழக்கம் பச்சை குத்துதல். இது இந்தியாவில் இல்லாத அளவுக்குப் பக்தியுடனும் தீவிரத்துடனும் செய்யப்படுகிறது. காரணம், பச்சை குத்தப்பட்ட ஒருவன் கத்தியால் வெட்டுப்பட்டோ, குண்டு துளைத்தோ சாக மாட்டான் என்கிற தீவிரமான நம்பிக்கைதான். இதனால் கழுகு, ரஜினி என்று நாம் சின்னதாய் புஜத்தில் போடும் படம் போல இல்லாமல், இவர்கள் உடம்பு முழுவதும் பச்சை குத்திக் கொள்கிறார்கள். அப்போதுதானே உடம்பில் எங்கே கத்தி பட்டாலும் வெட்டுப்படாது!



• ஆவிக்குப் படையல்!

இவர்கள் பச்சை குத்திக் கொள்ளும் உருவங்கள் பல இந்திய சமாசாரம்தான். கருடன், ஐந்து தலை நாகம், ஆஞ்சநேயர், ராமர், சிவன், பிரம்மா, பிள்ளையார் என்று நம் புராண நாயகர்கள் இவர்கள் உடம்பில் பச்சை பவனி வருகிறார்கள். அதுவும் தாய்லாந்தில் பிரபலமான விளையாட்டான குத்துச்சண்டை பழகும் வீரர்கள் நிறையப் பேருக்கு ஒரு சூப்பர் ஸ்டார்

இருக்கிறார். வேறு யாருமில்லை. நம்ம அனுமார்தான். தாவித் தாவிக் குதித்து எதிரியை எட்டி உதைக்க வேண்டியிருக்கிறதே. அது தவிர, 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தின் அடிப்படையில் உருவான ஒரு குறியீடு ஒன்றும் பச்சை குத்தப்படுகிறது.

பாஸ்வோர்ட்

தவிர, இன்னொரு முக்கியச் சங்கதி இருக்கிறது. பச்சை குத்தும் உருவத்திலோ, சொற்களிலோ சங்கேத மொழியில் மந்திரங்கள் எழுதப்படுகின்றன. (கம்போடியாவின் கெமர் மொழி). அந்த மொழியை அறிந்தவர்கள் அந்த மந்திரத்தைப் படித்து விட்டால், அந்த மந்திரத்தின் வீரியம் தொலைந்து விடும் என்று நம்பிக்கை. அதனால் பச்சை குத்துபவர் அந்த மந்திரங்களை எழுதும் போது மற்றவர் அதைப் படிக்காத வண்ணம் நுணுக்கி நுணுக்கி எழுதியோ, அல்லது தலைகீழாய் எழுதியோ, அதை ஒளித்து விடுகிறார்கள். கம்ப்யூட்டர் பாஸ்வோர்ட் மாதிரி இந்தப் பிரத்யேக முத்திரை மற்றவர்களுக்குத் தெரியாது. குத்தின ஆளுக்குத்தான் தெரியும். பச்சை குத்தப்பட்ட ஆள் இது மாதிரி விசேஷ பச்சையினால் பெற்ற சக்தியின் மூலமாய் ரொம்ப அட்டகாசம் செய்கிறான் என்று வைத்துக் கொள்வோமே! பச்சை குத்தின புத்த பிட்சு அவனை வரவழைத்து பாஸ்வோர்டைப் படித்து அவனின் சக்தியைக் கழற்றி விடலாம். இதனால் பச்சை குத்தும் பூசாரி தன்னிடம் வரும் ஆள் இதற்கு லாயக்கானவனா, என்று கணித்து இதைச் செய்வாராம். இல்லாவிட்டால் மாறுவேடத்தில் பின்லாடன் வந்து பச்சை குத்திக் கொண்டு போய் விட்டால்?

பச்சை குத்தும் இந்த ஊர் சாஸ்திரிகள் இந்த வைபவத்துக்கு பூஜை செய்வது யாரைத் தெரியுமா? நம் ரிஷிகளை. (தாயில் ருயிசி) பிரதானமாய் பூஜிக்கப்படுவது நம் புராணங் களில் கலகம் செய்யும் நாரதர் (ருயிசி நாரோட்). பச்சை குத்தும் ஊசியைச் சுமந்தபடி ஒரு ரிஷி பொம்மையை, ரிஷி நாரோட் என்று இவர்களாகவே சிருஷ்டி செய்து வைத்திருக்கிறார்கள்! ரிஷிகள் என்று சில முகமூடிகள் செய்து வைத்து, அந்த முகமூடி அணிந்து, அந்த ரிஷியை உடம்பில் வரவழைத்துக் கொண்டு, இந்தப் பச்சை குத்துதல் நடக்கிறது.

அவர் கனவில் அன்று ஆயிரம் பேய்கள் வந்திருந்தன. ஒரு பேய்க்கு மட்டும் உடல் முழுதும் கண்கள் இருந்தன. "என் பெயர் இந்திரன், என் பெயர் இந்திரன்" என அது எக்காளமிட்டது. இன்னொரு பேய் அதன் பக்கத்தில் இருந்தது. அதற்கு முகம் இல்லை. அந்த இடத்தில் ஒரு குழாய் ஒலி பெருக்கி



போல வாய் மட்டும் இருந்தது. "ஓடப்பர், உதயப்பர், ஒப்பப்பர்" என்று அது விடாமல் கத்தியது. "பர்... பர்" என்ற விகுதிகள் விடாமல் எதிரொலித்தன.

ஆழமான கரும் பாதாளத்திலிருந்து விழித்

ரெ.கார்த்திகேசு

துக் கொண்டார்.

"பர்...பர்.... பர்... பர்..."

இன்டர்கோம், விடாமல் "பர்...பர்..." என்றது. படுக்கையின் பக்கத்தில் இருந்த அலாரத்தை எடுத்து மணி பார்த்தார். இரவு 1.10. இந்த நேரத்தில் யார்? தூக்கம் கண்களிலும் மூளையிலும் கவிந்திருக்க, போர்வை காலில் பின்னி இழுத்துக் கொண்டிருக்கத் தடுமாறி வந்து இன்டர்கோமை எடுத்து "யெஸ்" என்றார்.

"துவான் சுந்தரம்?" பாதுகாப்பு போஸ்டில் கடமையில் இருந்த காவலர், மலாயில் பேசினார்.

"யா..."

"கார்டு பேசுகிறேன். உங்களை எழுப்புவதற்கு மன்னிக்க வேண்டும். உங்களைப்

பார்க்க ஒரு வருகையாளர் வந்திருக்கிறார்."

"யார்?"

"இதோ பேசுங்கள்!"

பாதுகாப்பு நிறைந்த இந்த அப்பார்ட்மெண்ட் புளோக்கில் யாரும் அவ்வளவு சுலபமாக நுழைய முடியாது. ஏற்கெனவே போன் செய்துவிட்டு, வீட்டின் சொந்தக்காரரிடம் ஏற்பாடு செய்து கொண்டு, செக்யூரிட்டியிடம் சொல்லி வைத்துத்தான் வர முடியும். யார் இப்படி...?

"மாமா! நாந்தான் கேசவன்...!"

"கேசவனா?.... என்னப்பா இப்படி நட்ட நடு ராத்திரியில...?"

"வரக்கூடாதா? அப்ப அப்பார்ட்மென்ட்டுக்குள்ள அனுமதிக்க மாட்டாங்களா?"

"சீச்சீ.. வா! கார்டுகிட்ட குடு. நான் சொல்றேன். தெரியுமில்ல? 18-ஆவது மாடி.. அப்பார்ட்மென்ட் எண் 3."



உனக்குக் கிடைத்தது!

காவலரிடம் சொல்லிவிட்டுப் போனை வைத்தார். அவன் கேட்டுக்கு உள்ளே வந்து வருகையாளர் பார்க்கில் காரை நிறுத்தி விட்டு, லிஃப்ட் பிடித்து மேலே வந்து சேர இன்னும் பத்து நிமிஷமாகும்.

ஃப்ரிட்ஜைத் திறந்து போத்தலிலிருந்து கொஞ்சம் சில்லென்ற நீரைக் குடித்து விட்டு, திரையை விலக்கி பால்கனியின் கதவுகளைத் திறந்து விட்டார். பினாங்கின் காற்று சிலீரென்று வீசி கடலின் மணத்தைக் கொண்டு வந்தது. தூரத்தே கடலின் மீது பினாங்குப் பாலம், மின்சார விளக்குகளை முதுகின் மீது அணிந்து கொண்ட சீன நாகம் போல் நீண்டு கிடந்தது.

அழைப்பு மணி அடிக்க, சென்று கதவைத் திறந்தார். கேசவன் ஒரு சிறிய பையுடன் நின்றிருந்தான். மாற்று உடுப்பும் காலைக் கடன்களுக்கான கருவிகளும் இருக்க வேண்டும். தயாராகத்தான் வந்திருக்கிறான்.

"குட்மார்னிங் மாமா!" என்றான்.

"என்னைத் தூங்க விட்டிருந்தால் நல்ல காலைதான்" என்றார்.

"மன்னிச்சிக்குங்க மாமா! உங்களுக்குப் போன் பண்ணியிருக்கணும். ஆனா அவசரத்தில உங்க போன் நம்பர் நான் எடுத்துக்கல. அதனால நேரா வந்திட்டேன்...!"

"உக்காரு. எத்தனை மணிக்கு குவாலலூம்பூர விட்டுப் புறப்பட்ட...?"

ஆழமான தோல் சோபாவில் புதைந்தான். "பதினொண்ணு இருக்கலாம்..."

"மை கோட்! மூணரை மணி பயணத்த, ரெண்டர மணி நேரத்தில முடிச்சிருக்க. போலீஸ்காரன் பிடிக்கல...?"

"ஹூ கேர்ஸ்?" என்றான்.

"சாப்பிட்டியா?"

"தேவையில்ல. பிராந்தி இருக்கா?"

"அதெல்லாம் வச்சிக்கிறதில்ல. பியர் வேணுமானா தரேன்!"

பிரிட்ஜிலிருந்து ஒரு கேன் எடுத்துக் கொடுத்தார். அதன் கொக்கித் திறப்பானை உஸ்ஸென்று திறந்து ஆழப் பருகினான். பால்கனி

வழியாகத் தெரியும் இருண்ட வானத்தையும், தூரத்தே மலையில் கட்டப்பட்ட அடுக்கு மாடிக் கட்டடங்களையும் வெறித்துப் பார்த்தான்.

"அப்புறம்...? இப்பவே சொல்றியா? இல்ல காலையில எந்திரிச்சி சொல்றியா?" என்று கேட்டார்.

"என்ன சொல்றது?" புரியாதவன் போல் கேட்டான்.

"அதான் உன் பெண்டாட்டியோட சண்டை போட்டு, நீ ஆத்திரத்தோடு ராவோடு ராவா கே.எல்.லில இருந்து உன் மாமானைத் தேடி, பினாங்குக்கு 150 கிலோ மீட்டர் வேகத்தில காரோட்டி வந்த கதை...!"

"ஷீ இஸ் அ பிளடி பிட்ச்" என்றான். கோரமாகத் திட்டித் தீர்ப்பதற்கு ஆங்கிலம்தான் வசதியாக அவன் வாயில் வந்தது. பியரை மீண்டும் ஆழ்ந்து பருகினான்.

"இப்ப என்ன பண்ணிடிச்சி?"

"மரியாதை இல்ல மாமா... புருஷன்கிற மரியாத இல்ல. ரொம்ப மட்டமா பேசிறா. இஷ்டத்துக்கு வீட்ட விட்டு வெளியே போறது, வர்றது. "எங்கடி போன பிளடி பிச்"ன்னு கேட்டேன். "நீதாண்டா பிளடி பாஸ்டர்ட்" அப்படிங்கிறா. "டா" போட்டு பேசிறா மாமா!"

"அறைஞ்சியா இல்லியா...?"

"இல்ல... அதுவரைக்கும் போகல!"

"அறைஞ்சிருக்கணும் வாயிலியே!"

"ஆமாம் மாமா! அப்படி செஞ்சிருக்கணும். ரொம்ப பாவம் பாத்து விட்டுக் கொடுத்திட்டேன்! என்னால பொறுக்க முடியில மாமா!" என்றான். கொஞ்சம் கண்ணில் நீர்...! பியரைப் பருகினான்.

"விவாகரத்து பண்ணிடு கேசவா? வெட்டிடு. எல்லாம் சரியாப் போயிடும்."

நிமிர்ந்து பார்த்தான். "புள்ளங்களப் பத்திதான் யோசிக்க வேண்டியிருக்கு மாமா!" என்றான்.

"அதெல்லாம் யோசிக்காத. எதுக்கு யோசிக்கணும்? இப்படியெல்லாம் யோசிச்சியான்னா, உன்னோட பிரச்சினை எப்பவும் தீராது. புள்ளங்க எப்படியாவது வளருவாங்க! என்ன பெரிய விஷயம்?"

பியரைப் பருகியவாறு யோசித்தான்.

சுந்தரம் கொட்டாவி விட்டார். "சரி கேசவா! அந்த ஸ்பேர் ரூம்ல படுத்துக்க! வேணும்னா ஃபிரிஜ்ல இன்னும் பியர் இருக்கு. எடுத்துக்க. காலையில நான் அஞ்சு மணிக்கு எந்திரிச்சி வாக்கிங் போவேன். நீயும் எங்கூட வா! என்ன?"

பதில் சொல்லாமல் யோசித்துக் கொண்டிருந்தான். "குட் நைட்" என்றவாறு எழுந்தார்.

அவர் அறைக்குள் நுழையும்போது சொன்னான். "நான் உங்க மாதிரி இருந்திருக்கணும் மாமா!"

"அதுக்கு என்ன அர்த்தம்?" என்று கேட்டார்.

"கல்யாணம் பண்ணிக்காம, பிரம்மச்சாரியாக! அம்பது வயசில பெண்டாட்டி பிள்ளைகள்னு பிக்கல் பிடுங்கல் இல்லாம! பாருங்க எவ்வளவு உல்லாசமா வாழறீங்க! சம்பாதிக்கிறது முழுக்க உங்களுக்கு. இப்படி ஒரு சொகுசு அப்பார்ட்மென்ட் வாங்கி அலங்காரப் படுத்தி...!"

"யெஸ்... யெஸ். நீ இப்ப சொல்லி என்ன பண்றது? காலங் கடந்து போச்சி! போய்ப் படு. காலையில அஞ்சு மணிக்கு எழுப்புறேன்!" என்று உள்ளே போனார். அறைக் கதவைச் சாத்தினார். ஏர்கண்டிஷன் ஹம்மித்துக் கொண்டிருந்தது.

படுப்பதற்கு முன் படுக்கை அறை ஜன்னலிலிருந்து மீண்டும் ஒருமுறை வெளியே பார்த்தார். மரங்கள் அணிவகுத்திருந்த நெடுஞ்சாலையில், கார்கள் ஓய்ந்திருந்த அந்த நிசியில்,



ஒரு கன்டெய்னர் லாரி தன் பாரத்தை இழுக்க முடியாமல், எஞ்சின் கதற தனியாக ஓடிக் கொண்டிருந்தது.

ஐந்து மணிக்கு அவனை எழுப்புவது பெரும் பாடாக இருந்தது. பிணம் போலத் தூங்கிக் கிடந்தான். புரட்டிப் புரட்டி எழுப்பியவுடன் மிரண்டு எழுந்தான். "ம்... என்ன... என்ன... எங்கே...?" என்று குழறினான்.

"கேசவா! எங்க இருக்கோம்னு பாக்கிறியா? என் அப்பார்ட்மென்டிலதான்! எழுந்து பாத்ரூமுக்குப் போய் வா. நடக்கப் போகலாம்!"

ஒன்றும் சொல்லாமல் புரண்டு படுத்தான். உலுக்கி எழுப்பினார். "நான் வரலை மாமா. ஹேங்ஓவர் இருக்கு. தலை சுத்துத்து. நீங்க போங்க!" என்றான்.

"ஊஹூம். அதெல்லாம் சரியாயிடும். எந்திரி. என்னோட வா!" என்றார்.

முனகி எழுந்து தடுமாறி குளியலறைக்குப் போனான்.

பினாங்குத் தீவின் வடகிழக்குப் பகுதியில் அதன் பெரிய துறைமுகம் இருந்தது. அதை விட்டு இறங்கிய கடற்கரையிலிருந்து ஆரம்பிக்கும் பினாங்குப் பாலம், கடலைத் தாண்டி எதிர்முனையில் தலை நிலத்தைத் தொட்டுக் கொண்டு கம்பீரமாக இருந்தது. கடற்கரை நெடுஞ்சாலைக்கு அடிக்கோடு போட்டாற் போல, கடற்கரையை ஒட்டி காங்கிரீட்டில் அந்த நடைபாதை போடப்பட்டிருந்தது. நடக்க, ஓட, உடற்பயிற்சி செய்ய வசதியான பகுதி.

ஆறு மணிக்கு அவர்கள் அங்கு வந்து சேர்ந்த போது, நெடுஞ்சாலையில் கார்கள் ஓடிக் கொண்டிருந்தாலும், நடைபாதை வெறிச்சோடிக் கிடந்தது. ஒன்றிரண்டு சீனர்கள் தை சீயில் ஈடுபட்டிருந்தார்கள். சாலை விளக்குகள் இன்னமும் எரிந்து கொண்டிருந்தன. தூரத்தில் பினாங்குப் பாலத்தில் இரவு விளக்குகள் இன்னமும் அணைக்கப்படவில்லை.

மாமா வெகு வேகமாக சீரியசாக நடந்தார். கேசவனால் அவரோடு ஒத்து நடக்க முடியவில்லை. "கொஞ்சம் மெதுவா மாமா!" என்று கெஞ்சிப் பார்த்து விட்டான்.

> ''நம்ம பயலின் டைரியில் இ.வி.பா., இ.ப.பா., இ.ர.பா. என்றெல்லாம் எழுதியிருக்கே! என்ன அர்த்தம்?''
>
> ''இதுகூடத் தெரியலையா? இன்று வில்லன் பார்த்தேன். இன்று பகவதி பார்த்தேன். இன்று ரமணா பார்த்தேன்..!''
>
> — உ. ராஜாஜி

"ஊஹூம், உன்னோட வேகத்துக்கு நீ வா. நான் இனிப்பு நீர் நோயாளி. எனக்கு வேகநடை ரொம்ப முக்கியம். நான் நேரே போய் உனக்காக அங்கக் காத்திருக்கிறேன்!" மாமா விறு விறுப்பு சற்றும் குறையாமல் தூரத்துக்குப் போய் விட்டார்.

கேசவன் வேடிக்கை பார்த்துக் கொண்டே மெதுவாக நடந்தான். கடல் கருத்துக் கிடந்தது. போலீஸ் படகுகள் கட்டி வைக்கப்பட்டு, அலைகளில் மிதந்து கொண்டிருந்தன. எங்கிருந்து வருகிறது என்று தெரியாத பின் ஒளியில், அந்தப் படகுகள் சிலுவெட்டில் தோன்றின.

அந்த அமைதி அவனுக்கு அசாதாரணமாக இருந்தது. இந்தக் காலையே அசாதாரணமாக இருந்தது. இவ்வளவு காலையில் என்றும் எழுந்ததில்லை. கே.எல். – இல் ஏழு மணி போல் எழுந்து, முதலில் விழிப்பது குளியலறைக் கண்ணாடியில். அப்புறம் காலைக் கடன்களை முடித்து பசியாறிக் காரில் ஏறினால், வேலைக்கு டிராஃபிக் ஜாமில் ஒரு மணி நேரப் பயணம். காரில் ரேடியோ. திறந்தால் இசை: "கட்ட கட்ட கட்ட கட்ட நாட்டுக் கட்ட..." விளம்பரம்: "இந்த சிவப்பும் அழகும்" முத்திரை பொறிக்கப்பட்ட கிரீமை வாங்கிப் பூசு; அடுத்த மாசமே மாப்பிள்ளை உன்னைத் தேடி வருவார்!" காலையிலேயே ஆரம்பித்து விடுவார்கள். எரிச்சலுடன் பொத்தானை அழுத்த அடுத்த ஸ்டேஷன்; "ஜாலான் துன் ரஜாக்கிலிருந்து ஜாலன் டூத்தாவரை டிராஃபிக் ஜாம் இருக்கிறது. மெதுவாகப் போங்கள். இதற்கிடையே இதோ "தமிழின் பெருமை" என்ற படத்திலிருந்து ஜுஹ்சாவாலா இசையில் சந்தனா சர்கம் பாடிய "ஐ ஹேட் யூ, ஹேட் யூ" என்னும் பாடல்."

இங்கு நின்றவாறு யோசித்துப் பார்க்கும் போது எல்லாம் செயற்கையும், போலிகளும், பொய்யும் நிறைந்த வாழ்க்கை என்றே தோன்றியது.

அரைமணி நேரம் நடந்ததில் பினாங்குப் பாலத்தின் கீழே வந்து விட்டான். அந்த நடைபாதை பாலத்தின் கீழாகப் போய், அந்தப் பக்கம் இன்னும் நீண்டு கொண்டிருந்தது. மாமா பாலத்தின் கீழ்ப்பகுதியைத் தாண்டி ஒரு மரத்தை அடைந்து, அதன் கீழ் நின்றவாறு கடலைப் பார்த்துக் கொண்டிருந்தார். மேலே நகரின் வடக்கு, தெற்கு ஆகிய இரு பகுதிகளிலுமிருந்து வந்து இணையும் இணை மேம்பாலங்களில், வாகனங்கள் வழிந்து வந்து, பாலத்தில் இணைந்து, கடலைக் கடந்தவாறு இருந்தன.

மாமாவை நெருங்கியதும் சொன்னான்: "பினாங்குப் பாலத்தில எத்தனையோ முறை போயிருக்கேன். இப்படி அதன் அடியில நின்னு இந்தப் போக்குவரத்தப் பாக்கிறது ரொம்ப வித்தியாசமா இருக்கு! ஏதோ ஒரு டெலிவிஷன் திரையில பாக்கிற மாதிரி! அமைதியா பாக்க முடியுது; ரசிக்க முடியுது."

"எல்லாம் பாக்கிற கோணத்தப் பொறுத்ததுதான்!" என்றார் மாமா.

"அங்கே பார்" காட்டினார். பாலத்தின் குறுக்காகக் கடலைத் தாண்டி, அக்கரையில் தலை நிலத்தின் பகுதியில், இரண்டு குன்றுகளுக்கு ஊடே செஞ்சிவப்புப் பூச்சு தெரிந்தது.

"சூரிய உதயமா?" என்று கேட்டான் கேசவன். குரலில் உற்சாகமும் ஆர்வமும் இருந்தன.

"கடைசியா எப்ப பாத்திருக்கிற?"

யோசித்தான். "தெரியில மாமா! சின்ன வயசில... அம்மா காட்டியிருக்காங்கன்னு நெனைக்கிறேன்."

பொறுத்திருந்தார்கள். பினாங்குப் பாலத்தின் நடுப்பகுதியைத் தாங்கியிருந்த கோபுரத் தூண்கள், அவர்கள் பார்வைக்குக் கட்டம் கட்டியிருக்க, அதன் பின்னால் ஒரு கவிழ்ந்த அரைவட்டம் மெதுவாக எழுந்தது. சில பறவைகள் உற்சாகமாகக் கத்திச் சுற்றிச் சுற்றிப் பறந்தன. உலகு உயிர்த்தெழும் வேளை.

மெதுவாக, அங்குலம் அங்குலமாக சூரியன் எழுந்தது. அதன் பிரதிபலிப்பு கடலில் சிவந்த செங்குத்துத் தூணாக இறங்கியிருந்தது. அலைகளில் சலசலத்து ஆடும் தூண். அதை வருணிக்கவோ பாராட்டவோ, அதைப் பற்றிக் கருத்துக் கூறவோ, ஒன்றும் தோன்றாமல் ஒன்றியிருந்தான் கேசவன்.

கொஞ்ச நேரம் கழித்து, "பியூட்டிஃபுல்" என்றான்.

"150 மில்லியன் கிலோ மீட்டர் தூரத்தில இருக்கு. நம்ம பூமிய விட 330 ஆயிரம் மடங்கு பெரிசு. ஒப்பிட்டுப் பார்த்தா நம்ம பூமி ஒரு எலிப் புழுக்கைக்காகாது. 23 மில்லியன் டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம். இப்ப இருக்கிற இடத்திலிருந்து பூமிக்கு ஒரு சில ஆயிரம் கிலோ மீட்டர் கிட்டத்துக்கு வந்தா, பூமி வெப்பத்தில கருகிக் கருவாடா யிடும். ஒரு ஆயிரம் கிலோ மீட்டர் தூரமாப் போனா, இந்தப் பூமி ஒரு பிரம்மாண்டமான ஐஸ் உருண்டையா இறுகிப் போகும். ஆகவே இந்த உலகம் இயங்க வேணுமானா, இப்ப இருக்கிற இதே நிலையில அது சுத்திக்கிட்டே இருக்கணும்."

"வண்டர்புல்" என்றான் கேசவன்.

"பூமியத்தான் பாரேன். சுத்துற கதியிலிருந்து மாறக் கூடாது. சுத்துற வேகத்தில இருந்து மாறக் கூடாது. தயங்கி நிக்கக் கூடாது. சுத்துற திசைய மாத்திக்கக் கூடாது. அப்பதான் உயிர் அதனதன் போக்கில நடக்கும். எல்லாத்துக்கும் ஒரு கடமை இருக்கு. ஒரு தானகதி இருக்கு. எல்லாம் முன்னோக்கிப் போகணும். தயக்கம், மயக்கம் எல்லாம் இருந்தா, இயற்கை நாசமாப் போகும்; உயிர்கள் நாசமாப் போகும்."

இதில் ஏதோ செய்தி இருப்பது போல இருந்தது. "என்ன சொல்றீங்க மாமா?" என்றான்.

"இந்தப் பிரம்மாண்டமான நியதிகளுக்கு முன்னால் எதுடா முக்கியம்? பொண்டாட்டி மதிக்கிலேங்கிறதா முக்கியம்? மதிக்காமப் போனா போறா! சுண்டைக்காய் விஷயம். அது முக்கியமில்லேன்னு நெனைச்சுக்க!"

"அதெப்படி?"

"பூமி தன்ன மதிக்கிலேன்னு சூரியன் கோவிச்சிக்குமா? ராவோட ராவா எங்கியேனும் ஓடிப் போய் ஒளிஞ்சிக்குமா? அப்படிப் போய் மறைஞ்சா என்ன ஆவும்? இயக்கம் நின்னு போகும். வாழ்வு ஸ்தம்பிச்சுப் போவுண்டா கேசவா..!"

"மாமா, நான் வந்து..."

"எது தெரியுமாடா முக்கியம்? பெத்து வச்சிருக்கிற பாரு ரெண்டு குழந்தைகள். அது முக்கியம். அதுகள்தாண்டா, எதிர்காலம்கிறது. அதை நோக்கித்தான். உன்னோட கௌரவத்த நெலநாட்டினா சரியாப் போச்சா? என்ன லாபம்? குழந்தைகளோட நல்வாழ்வச் சாகடிச்சிட்டு என்னடா கௌரவம் வேண்டிக் கிடக்கு? பொண்டாட்டியத் திருத்த முடியாதுன்னு தெரியிதில்ல! அப்ப ஒண்ணுதான் வழி. நீ திருந்து!"

"அவளுக்குப் பொறுப்பு வேண்டாமா?"

"இல்லன்னு தெரியிதில்ல? இனி போய்ப் போய்ச் சரண்டிப் பாக்க வேணாம். அவள அப்படியே விட்டுடு. எல்லாம் சரியாயிடும்!"

"நேத்து வேற விதமாப் பேசினீங்களே?"

"குடிகாரங்கிட்ட நட்ட நடு ராத்திரியில பேச வேண்டிய பேச்சு அது. இது தெளிஞ்சப்புறம் இந்தப் புதிய நாள் பூக்கிற நேரத்தில, இந்த வெளிச்சத்தில பேச வேண்டிய பேச்சு!"

வாய் மூடியிருந்தான்.

"கேசவா! நேத்து சொன்னியே, 'நான் உங்க மாதிரி இருந்திருக்கணும் மாமா'ன்னு. அது உண்மையில்லடா! எத்தன தடவை நான் உன்னை நினைச்சிப் பொறாமைப்பட்டி ருக்கேன் தெரியுமா? எத்தனை முறை அந்த 18-ஆம் மாடியில இருந்து குதிச்சிடலாம்னு நெனைச்சிருக்கேன் தெரியுமா? உனக்குக் கிடைச்சிருக்கிறது எப்படிப்பட்டதா இருந்தாலும் அதக் காப்பாத்திக்கடா கேசவா! அது மறுபடியும் கிடைக்காது!"

மாமா வந்த வேகத்திலேயே திரும்பி நடந்தார். கொஞ்சம் தயங்கிய பிறகு கேசவனும், அவர் பின்னால் வேகமாக நடந்தான். ❍

எண்பத்து நாலு வயதில் எம்.ஃபில் பட்டம்!



எண்பத்து நான்கு வயதில் திருச்சூரைச் சேர்ந்த சுவாமிநாதய்யர் எம்.ஃபில் பட்டம் பெற்று கின்னஸ் சாதனை புரிந்துள்ளார். இந்த வயதில் யாரும் இந்தப் பட்டத்தைப் பெற்றதில்லை என்பதால் இவர் பெயர் கின்னசில் இடம் பெறும். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் கணித சாஸ்திரத்தில் இப்பட்டம் பெற்ற இவருக்கு, இப்போது வயது எண்பத்தைந்து. ஆனாலும் இப்போதும் இவர் தமது படிப்பை நிறுத்தவில்லை. சமஸ்கிருத எம்.ஏ. படித்துக் கொண்டிருக்கிறார். கொச்சியில் வருமானவரி உயர் அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற சுவாமிநாத அய்யர், தொடர்ந்து படிக்கத் தொடங்கி, ஒன்றன்பின் ஒன்றாகப் பட்டங்களைப் பெற்று வருகிறார்.

திருவனந்தபுரம் : எஸ்.எஸ். மணி



அவர் ஒரு போலி நாதஸ்வர வித்வான் போலிருக்கு!''

''எப்படிச் சொல்றே?''

'''ஊஞ்சல் வாசிங்க'ன்னு சொன்னதுக்கு 'ஆடத்தானே முடியும். எப்படி வாசிக்க முடியுங்'கறார்!''

— புளியரை கணேசன்

''சார். நம்ம வயலின் வித்வானைக் கடத்திச் சென்ற வீரப்பனிடமிருந்து ஒரு கேசட் வந்திருக்கிறது!''

''அப்படியா! கேசட்டில் என்ன சொல்லியிருக்கான்?''

''இசைவிழா முடிஞ்சதும் அவனே விட்டுவிடுவானாம்!''



கிரி... கம... சபா!



''இதற்குக் காரணமான என்னோட எதிரிகளை நான் சும்மா விட மாட்டேன்!''

''புரியும்படி சொல்லுங்க பாகவதரே!''

''நான் ராகம் பாடிக்கிட்டிருந்த போது எவனோ வெடிகுண்டு புரளியைக் கிளப்பியிருக்கான்!''



• ‘ஆரோக்யாதாரா’



• ராகவேந்திரராவ் • பிரமீளா

பெங்களூரின் டாப் டீ!

“நாம் வாழ்க்கையை ஓட்டுவதற்குப் பணம் தேவைதான். ஆனால் அதுவே முழுமையாகி விடாது. தெய்வீகத்தை உணர வேண்டுமானால் இசைதான் சிறந்தது. சங்கீத மேதைகளின் இசைப் பொக்கிஷங்களைப் பாதுகாத்து, பல தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்...” என்கிறார் பெங்களூர் மல்லேஸ்வரத்திலிருக்கும் அனன்யாவின் நிறுவனர், டாக்டர் ஆர்.வி. ராகவேந்திர ராவ்.

அனன்யாவை (இணையற்றது, ஒப்பற்றது என்று பொருள்) நிர்வகிக்கும் ராகவேந்திரா ராவ், அவர் மனைவி டாக்டர் பிரமீளா இருவருமே விஞ்ஞானிகள். இவர்களுக்கென சொந்த பிஸினஸ் இருக்கிறது. மிகச் சாதாரணமான நிலையிலிருந்து உயர் மட்டத்திற்கு உழைப்பினால் வந்திருக்கிறார்கள் இத் தம்பதி. இசை மீது கொண்ட தீரா மோகத்தால், சம்பாதிப்பதை எல்லாம் இசைக்கே அர்ப்பணிக்கிறார்கள்.

சென்னையைப் பொறுத்தவரை டிசம்பர் மாதம்தான் கச்சேரி சீஸன். ஆனால் பெங்களூரில் ராம நவமி, கோகுலாஷ்டமி, நவராத்திரி, என்று மாதக் கணக்கில் கச்சேரிகள் நடக்கும். ரசிகர்களுக்குக் கொண்டாட்டம்தான். ஏனென்றால் பெரும்பாலும் இலவசம்தான். டிக்கட் கிடையாது!

சங்கீதத்தைக் காக்க வேண்டுமென்பதற்காகவே ‘அனன்யா சங்கிரஹா’ என்ற லைப்ரரி தொடங்கியிருக்கிறார். இங்கு எண்ணற்ற காஸெட்டுகள், சி.டிகள், புத்தகங்கள் உள்ளன.

டைகர் வரதாச்சார்யர் மற்றும் மைசூர் வாசுதேவச்சார்யார் 50களில் பாடிய லைவ் கச்சேரிகளின் காஸெட் இங்குள்ளது. கிடைத்தற்கரிய ஒரிஜினல் பிரதிகள் இருக்கின்றன. முத்தையா பாகவதரின் ‘அஷ்டோத்திரசத க்ருதி ஸ்வரா’, சுப்ரமண்ய தீட்சிதரின் ‘சங்கீத சம்பிரதாய ப்ரதர்ஷினி’ போன்றவை அவர்களுடைய கையெழுத்திலேயே உள்ளது. ஹவாய் பல்கலைக் கழகத்திலிருந்து நேபாளி, பெங்காலி, கொங்கனி... மற்றும் தெற்கு ஆசிய மொழிகளின் எழுநூறு இசைக் காஸெட்டுகளை அன்பளிப்பாக கொடுத்து உதவியதை மறக்க முடியாது” விவரிக்கிறார் ராகவேந்திரா.

புதுப் பாடகர்களுக்காக ‘நிரந்தரா’, நலிந்த

இசைக் கலைஞர்களுக்கென 'ஆரோக்கிய தாரா', என நிறைய நற்பணிகள் நடக்கின்றன.

'அனன்யா அபிவ்யக்தி' என்ற இசைப் பத்திரிகையும் இலவசமாக வெளியிடுகிறார்கள்.

ஜிஎம்எல் லேபோரட்டரீஸ் என்ற கம்பெனியின் நிறுவனரான ராகவேந்திர ராவ், "நான் ஜிஎம்எல்லில் உழைத்துச் சம்பாதிக்கிறேன். அனன்யாவில் செலவழிக்கிறேன்... ஆனால் சந்தோஷமாக" என்கிறார்!

ஸ்ரீ ராம்சேவா மண்டலியும் பெங்களூரில் வெகு பிரசித்தம். சாம்ராஜ் பேட்டில் இருக்கும் இந்த சபா அறுபத்து நான்கு வருடங்களுக்கு முன்பு எஸ்வி. நாராயண சாமி ராவால் தொடங்கப்பட்டது. முதலில் ஹரிகதை உபந்நியாசம் போன்ற நிகழ்ச்சிகளே நடந்து கொண்டிருந்தன. பிறகு வேகமாக வளர்ந்து இன்று எஸ்.வி.என் அகாடமியாக உருவெடுத்திருக்கிறது. இந்தியாவின் புகழ் பெற்ற அத்தனை முன்னணி இசைக் கலைஞர்களும் இங்கு வந்து பாடுகிறார்கள். கேட்பவர்களின் எண்ணிக்கையும், வருடா வருடம் கூடிக் கொண்டே போகிறது.



* கம்போஸர் மியூசிக் ஃபெஸ்டிவல் - துவக்கி வைக்கிறார் டி.டி வாசு

இரண்டு வருடங்களுக்கு முன்னால் ராவ் காலமானதிலிருந்து, அவரது மகன் ராம்பிரசாத், தந்தை விட்டுச் சென்ற பணியைத் தொடர்கிறார், புதுப்புது பாணி கச்சேரிகளில். ஒருமுறை 'கம்போஸர் மியூசிக் ஃபெஸ்டிவல்' என்ற பெயரில் இசைத் திருவிழா நடந்தது. தியாகராஜர், ஸ்வாதித் திருநாள், முத்தையா பாகவதர், புரந்தர தாஸர், அன்னமாச்சார்யா, ஸ்யாமா சாஸ்திரி... என சங்கீத ஜாம்பவான்களின் கிருதிகள் ஒவ்வொரு நாளும் முன்னணிப் பாடகர்களால் பாடப்பட்டன. சில மாதங்களுக்கு முன் 'ராகத் திருவிழா' நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் ஒரு ராகம், அதில் அமைந்த பாடல்கள் என மனம் வருடும் ராகங்களில், கலைஞர்கள் பாடப் பாடக் கிறங்கினர் ரசிகர்கள். மூன்று மணி நேரத்திற்கு ஒரே ஒரு மேளகர்த்தா ராகமும் அதன் ஜன்ய ராகங்களையும் எடுத்துக்கொண்டு பாடுவது/கேட்பது இரண்டுமே சவால்தான்.

ஒவ்வொரு வருடமும் மூத்த சங்கீதக் கலைஞர் ஒருவருக்கு விருது கொடுத்து கௌரவிக்கிறது. முதல் முறை விருது பெற்றவர் எம்.எஸ். "எங்க ராம்சேவா மண்டலியில் எம்.எஸ். அம்மா தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் பாடியிருக்காங்க. சுமார் முப்பத்து நான்கு வருடங்கள்... இதுவே ரெக்கார்ட்தான்" என்கிறார் ராம்பிரசாத் நெகிழ்ச்சியுடன்.

"ஜேசுதாஸ் மிக இனிமையானவர். எங்கள் அகாடமிக்கு இலவசமாகத்தான் கச்சேரி செய்கிறார். ஒரு பைசாகூட வாங்க மாட்டார். பெங்களூரில் மிக அதிகமான கூட்டம் என்றால் அவர் கச்சேரிக்குத்தான்" - ராம்பிரசாத் நமக்குத் தந்த தகவல்!



* எஸ்.வி.என். ராவ்

'உதயோன்முகி' என்ற விழாவில் பல புதிய இளம் கலைஞர்களை அறிமுகம் செய்கிறது அகாடமி.


இசைக்கெனவே வாழ்ந்த நாராயண சாமியைக் கௌரவிக்கும் விதத்தில், சாம்ராஜ் பேட்டில் ஒரு சாலைக்கு அவர் பெயரை வைத்திருக்கிறார்கள்.

- லதா சேகர்

பழங்கஞ்சியும்
பயித்தந் துவையலும்
ஏருழும் மாமனுக்கு
எடுத்துப் போவாள்

அவனுக்குப் பிடிக்குமென்று
ஈச்சம் பழங்களை
துண்டில் மூடித் தருவான்
இவன்

வானம் பார்த்த பூமியில்
எப்போதும் பெய்தபடி
பிரிய மழை





காதல் பிசாசே

என் மீது நீ கொண்டிருக்கும் காதலின் எடை; உன் மீது நான் வைத்திருக்கும் காதலின் எடையைக் காட்டிலும் அதிகமானதா? குறைவானதா? இப்படி ஒருவனுக்கோ அல்லது ஒருத்திக்கோ தோன்றுமாயின் அதற்குப் பெயர் காதலல்ல. வியாபாரம். சமமான பகிர்தலுக்குப் பிறகு சந்தேகங்கள் துளிர்க்குமாயின், அந்த மனங்களில் புல்லாங் குழல் ஊதாங்குழலாகி விடும் அபாயமிருக்கிறது.

அபாயகரமான வளைவுகளென்று பெண்ணின் அவயங்களை வர்ணித்த ஒரு கவிதையை எப்போதோ வாசித்த நினைவு. பொதுவாகவே, காதலிக்கத் தொடங்கும் ஒவ்வொரு ஜீவராசியும், கவிதைக்கு நெருக்கமான உறவாகி விடுவது இயற்கை. கவிதை எழுதுகிற ஆணை விடவும் கவிதை எழுதுகிறப் பெண், காதலின் மிருதுத் தன்மையைக் கொண்டிருப்பது மகிழ்ச்சி. எனில், ஆண்களின் கவிதைகள் வெளிப்படையானவை; அவளுக்கு எழுதியதை பிரகரம் செய்வித்து அதில் கிடைக்கும் சந்தோஷத்தை ருசி காண்பவை. பெண்களின் கவிதைகளோ, நாட்குறிப்பின் இடுங்கிய பக்கங்களில் மறைந்து வசிப்பவை. தலைமறைவாய் வாழ்கிற கலகக்காரனைப் போல, கம்பீரமும் நேர்மையும் கொண்டிருப்பவை. தட்டுத் தடுமாறி பிறர் கண்களில் பட்டு விடுவோமோ, என பயந்து கிடப்பவை.

ஆண் பாவம்; பெண் பாவம் என்பன போல ஆண் காதல்; பெண் காதல் எனவும் பிரித்து வைத்திருக்கிறார்கள். பெண் காதல் ஆழமானது; ஆண் காதல் நீளமானது. நீளமானது என்பதற்கான பொருள் ஆழமற்றது என்பதன்று. முழுமை பெற்ற காதலெல்லாம் முதுமை வரை கூட வரும் என்பார் கண்ணதாசன்.

ஒரியப் பெண் கவிஞர் அன்னபூர்ணா மொஹந்தி பெண் மனதின் நுட்பத்தை மிகத் துல்லியமாகப் பதிவுசெய்திருக்கிறார். ஔவை

தொடங்கி இன்று எழுதுகிற ஜெயராணி வரை, இந்த நுட்பத்தை நம்மால் உணர முடியும். அழகான மார்கழி கோலமிடுகிற விரல்கள் தெளிவான கவிதைகளை வரைவது இயல்பு தான். பெண்ணின் விரல்கள் மீட்டும்போதே பியானோவின் இசை பிரமிப்பூட்டுகிறது. ஒரு பெண் சிறுமியாய் இருக்கும் போதே தாய்மைக்கான மனப்




பக்குவத்தோடு வளர்க்கப்படுகிறாள். பெண் குழந்தைகளுக்கான தாலாட்டுப் பாடல்களில் அத்தகைய தன்மையைத் தரிசிக்கலாம். ஆணை அடித்தும் பெண்ணைப் பொத்தியும் வளர்க்கும் ஒரு சமூகத்தில், இயல்புகள் வேறு படுவது புதுமையல்ல.

கொடு, எதாவது கொடு
உனது வறுமையைக் கொடு
உனது வெறுமையைக் கொடு
உனது தனிமையைக் கொடு
உனது உறக்கமற்ற இரவுகளின்
நீட்டிப்பைக் கொடு
உனது உடலுள்
மறைந்து வளரும்
முதுமையைக் கொடு.

யுகபாரதி

இளமையைக் கேட்கும் மனது ஆணுடையது. வனப்பும் வளமும் தொலைந்த வயோதிகத்தைக்



''டீவில இன்னிக்கு என்ன புதுசா நியூஸ்?''
''லேட்டஸ்டா அதிரடிப்படையை வீரப்பன் தேடிக்கிட்டிருக்கானாம், தாத்தா!''
— உ. ராஜாஜி

கேட்கும் மனது பெண்ணுடையது. வெறுமைக்காகப் புலம்புது ஆண் மனது. வெறுமையையும் புளகாங்கிதத்தோடு ஏற்பது பெண் மனது. உன்னால் உறக்கம் போனதென்று ஒப்பாரி வைக்கும் ஆண் காதல் கவிதையை விட, உறக்கமற்ற இரவைக் கேட்கிற அன்ன பூர்ணாவின் கவிதை எனக்கு உயர்ந்ததாகப்படுகிறது. கலையக் கலைய அலங்கரித்து என் கனவுகளில் வர மாட்டாயா, என ஏங்காமல் கலைந்து போன தலையோடு வருகிற உயிரை, தாய்மையோடு முத்தமிடுகிறது இக் கவிதை. இந்தக் கவிதையின் விசேஷமான வரியாக எனக்குப்படுவது 'உனது உடம்பில் மறைந்து வளரும் முதுமையைக் கேட்கும் இடம்தான். முதுமையைக் கேட்கிறவள் தாய்மையுடையவள். முதுமைதான் தாய்மையைக் கொடுக்கும். இங்கோ முதுமையைத் தாய் கேட்கிறாள். உடம்போடு இணைந்தது தான் காதல். உடம்பை விலக்குவதோ? உடல் சுகத்தைத் தவிர்ப்பதோ காதலுக்குப் பெருமையில்லை. உடம்பில்லாமல் ஆன்மாவின் கரையைத் தொட முடியாது. உடல் சாரல், உயிர் தூறல் இரண்டிலும் நனைதல் இன்பம்.

அமுது கொப்பளிக்கும் உனது அதரத்தில் மௌனத்தை யார் பூசியது? நளினம் ததும்பும் உனது வதனத்தில் புதிர்களை யார் பொருத்தியது? பெண் மனம் ஆணின் முதுமையைக் கேட்டால், ஹ்ருகஷிகே மல்லிக் தன் உடம்பில் புதைந்த மௌனத்தைப் பற்றி விசாரிக்கிறார். ஒரியக் கவிதை உலகில் முக்கியமானவராகக் கருதப்படுகிறவர்.

இடைவெளி நீட்சியில்
மெல்லிய பனிமூட்டமாய் நீ
புரிபடாத பல
புதிர்களிடையே தான்
எது வனப்பகமை? எதுவுன் புருவம்?
எவை பனிமுத்துக்கள்
கோடானு கோடி பிறப்பெடுக்கும்
என்னுடம்பில் எங்கு புதைந்தது
உன் மௌனம்?

வார்த்தையை விதைத்தால் கவிதையாகிறது. வார்த்தையைப் புதைத்தால் மௌனமாகிறது. கவிதையை விட மௌனம் சக்திமிக்கது. வனப் பகமையும் பனி முத்துக்களும் இவருடைய கண்களில் படுகிறது. ஏனெனில், இது ஆண் மனது. வறுமையும் வெறுமையும் கேட்பவை பெண் மனது. ஆண், பெண் என்கிற கருத்தியல் கவிதைகளில் பிரதிபலிப்பது தவிர்க்க இயலாதது. இரண்டு கவிதைகளும் சத்தியத்தோடு இயங்குவதால் நெஞ்சைத் தொடுகிறது. ஒவ்வொரு மொழியிலும் ஒரு பெண் கவிஞராவது என் அபிப்ராயத்திற்கு ஆதாரமாகிறார்கள். கமலாதாஸின் கவிதையிலும் இதைக் காண முடிகிறது. கமலாதாஸ் தமிழுக்கு நன்கு அறிமுகமான மலையாளக் கவி. இவருடைய சிறுகதைகளும் கவிதைகளும் திறந்த மனத்தோடு பேசுபவை. அன்னபூர்ணாவின் மனதைப் போலவே இருவரும் எழுதுகிறார்.

உனது
சிதைந்த சௌந்தர்யமே
எனது சரணாலயம்
உனது அழுத்தும் முத்தத்தில்
எனது வாய்ச் சொற்கள் மடியட்டும்
எனது நினைவுகளைக்
கொள்ளையிடட்டும்
உனது பாயும் குருதியில்
எனது தோல்விகள்; அச்சங்கள்
அவமானங்கள்
அனைத்தும் அடங்கி முடங்கட்டும்

அழுத்தும் முத்தத்தில் வாய்ச் சொற்கள் மடியட்டும் என தன்னையே ஒப்படைக்கும் இராணியைப் பெண் கொண்டிருக்கிறாள். சிதைந்த சௌந்தர்யத்தில் சரண் புகும் வல்லமை அவளுக்கிருக்கிறது. அழகு தொலைந்த ஒரு பெண் மீது ஒருவனுக்குக் காதல் வருவதில்லை. குறைந்தது அவனுடைய கண்களிலாவது அவள் அழகாகத் தென்படாதவரை, காதல் சாத்தியமில்லை. பெண் அப்படியில்லை. யாருடைய கண்களாலும் அவள் அவனைப் பார்ப்பதில்லை. ஏன், அழகற்ற ஒருத்தியை அவன் காதலிக்கிறானே என நீங்கள் கேட்டால், அழகு, கண்களால் தீர்மானிக்கப்படுவதில்லை என்றும், காதலுக்கு கண்ணில்லை என்றும் தப்பித்துக் கொள்ளலாம்.

(தொடரும்)

காசியில் கங்கையில் செய்யும் தீபவழிபாடு மனிதவாழ்வுக்கு மேன்மை அளிக்கக்கூடியது!

பித்ரு தர்ப்பண க்ஷேத்ரமான காசியில்

தை அமாவாசையன்று

கங்கைக்கு தீபமேற்றி அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியுடன்
புனித க்ஷேத்ரமான காசியில் அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்கேற்கலாம்...

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்டின் நான்காம் ஆண்டில் தொடர்ந்து அன்னதான சேவை!

பேரன்புடையீர்! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ அன்னபூரணி அன்னை தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

பிரபஞ்சம் முழுமைக்கும் உணவுபடைக்கும் தாயாக விளங்கும் ஸ்ரீ அன்னபூரணி மாதா கொலுவீற்றிருக்கும் காசியில் மாதாமாதம் அமாவாசை அன்று கங்கைக்கு தீபமேற்றி, அன்னதானம் செய்யப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ஆன்மீக அன்பர்கள் அனைவராலும் காசியில் கங்கைக்கு தீபமேற்றி அன்னதானமிட முடியும் என்ற இலட்சியத்தோடு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" என்ற தனி அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம். இந்த அன்னதான இறைபணிக்கு தங்களால் இயன்ற நன்கொடையை வழங்கி "இறையருளால் காசியில் ஏழைகளுக்கும், அடியார்களுக்கும் அன்னம் அளிப்பதில் நாமும் ஓரளவேனும் பங்குகொண்டோம்" என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
ரூ.500/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
ரூ.1000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையை அனுப்புவோர், திருமண நாள், பிறந்தநாள் மற்றும் திதி நாள் மேலும் தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவித்தால் அதன்படி தாங்கள் விரும்பும் மாதத்தில் அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு கங்கா தீர்த்தத்துடன் கூடிய காசி சொம்பும் காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும் ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் அமாவாசை அன்று காசியில் அன்னதானமும், கங்கைக்கு தீபமேற்றும் பணியும் செய்து பத்து வருடங்கள் "ஆன்மீகம்" மாத இதழ் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தங்கள் விருப்பப்படி [illegible] மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள ஸ்ரீமத் பகவத் கீதை புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.


காசி, கயா, பிரயாகை (திரிவேணி சங்கமம்) ஆகிய இம்மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் புண்ணிய காரியங்கள், பித்ரு காரியங்கள், பிண்டம் போடுதல், தர்மங்கள், ச்ராத்தம், திவசம், தர்ப்பணம் போன்றவற்றை அவரவர் விருப்பப்படி அன்னதானக் கைங்கர்ய அன்பர்களுக்கு செய்து தரப்படும்.

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு பிண்டப்பிரதானம் மற்றும் தர்ப்பணம் காசியிலும், கயாவிலும், பிரயாகையிலும் நேரில் சென்று செய்ய முடியாதவர்களுக்காக, சாஸ்திரிகளைக் கொண்டு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" மூலம் செய்யப்படுகிறது.

பித்ருக்களுக்கு பிண்டப்பிரதானம் செய்ய காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று பித்ரு க்ஷேத்ரங்களுக்கும் தனித்தனியாக ரூபாய் 1000/- அனுப்பும்போது யாருக்கு ச்ராத்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி மற்றும் கோத்ரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். பிண்ட பிரதானத்திற்காக ரூ.5000/= அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக தொடர்ந்து வருடத்திற்கு ஒருமுறை பத்து ஆண்டுகளுக்கு மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் எந்த இடத்தில் யாருக்கு ச்ராத்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவர்களுக்கு ச்ராத்தம் செய்யப்படும். பித்ரு காரியங்களுக்குப் பணம் அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள தெய்வீக ஆலமரமான 'அக்ஷய வடத்தின்' படமும், கயாவில் உள்ள விஷ்ணு பாதத்தின் படமும் அனுப்பி வைக்கப்படும். நம் வீட்டில் செய்யும் ச்ராத்தத்திற்கு தாய், தந்தையர், உறவினர்கள் மட்டுமே பங்குகொள்ள வாய்ப்புண்டு. மூன்று பித்ரு க்ஷேத்ரங்களில் ஏதாவது ஒரு அக்ஷய வடத்தில் (ஆலமரம்) பிண்டப்பிரதானம் செய்தால் ஏழு தலைமுறைக்கு பித்ருக்கள் கூட்டமே முக்தி அடைவதுடன் பித்ரு தோஷங்களும் நிவர்த்தியாகும்.

அன்னதான சேவையிலும், கங்கைக்கு தீபமேற்றும் பணியிலும் ஈடுபட விரும்பும் ஆன்மீக அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque/D.D/M.O மூலம் (Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4) என்ற பெயருக்கு எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கலியுகத்தில் அன்னதான சமுதாயப்பணி மகத்தான தெய்வீகப்பணியாக காசி திருத்தலத்தில் தழைத்திட உதவுமாறு அன்புகூர்ந்து வேண்டுகிறோம்.

நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.



Cheque/D.D./M.O அனுப்ப வேண்டிய முகவரி:

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)

68, Nadu Street, (Opp: Sri Kapaleeswarar Temple), Mylapore, Chennai - 600 004.

Tel : 4959302 Fax: (044) 7102308 E-mail : siva siva@vsnl.net



காசியில் தை அமாவாசையன்று பித்ருக்களுக்கு தர்ப்பண பூஜை செய்வது ஒவ்வொருவரின் இன்றியமையாத கடமையாகும்!

சிவகாமியின் சபதம்

முப்பத்து ஒன்றாம் அத்தியாயம்

புலிகேசி ஓட்டம்

மாமல்லரும் பரஞ்சோதியும் ஆயனரின் அரண்ய வீட்டுக்கு எப்படி வந்து சேர்ந்தார்கள், என்ன மனோநிலையில் வந்து சேர்ந்தார்கள் என்பதைச் சற்று கவனிப்போம்.

மணிமங்கலம் போர்க்களத்தில் மகேந்திர பல்லவரின் சிறுபடை, அடியோடு நாசம் செய்யப்படவிருக்கும் தறுவாயில், மாமல்லரும் பரஞ்சோதியும் பாண்டியனைப் புறங்கண்ட குதிரைப் படையுடன் அங்கு வந்து சேர்ந்தார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் போர் நிலைமை அடியோடு மாறி விட்டது. சளுக்க வீரர் பின் வாங்கி ஓட ஆரம்பித்தனர். அவர்களைத் தொடர்ந்து போய் அடியோடு அழித்து விட்டு வர மாமல்லர் எண்ணிய சமயத்தில், போர்க்களத்தின் ஒரு மூலையில் மகேந்திர பல்லவர் மரணக் காயப்பட்டுக் கிடப்பதாகச் செய்தி கிடைத்தது. மாமல்லரும் பரஞ்சோதியும் அவ்விடத்துக்கு ஓடிப்பார்த்தபோது, காயப்பட்ட மகேந்திரரைப் பக்கத்து மணிமங்கலம் கிராமத்திலிருந்த அரண்மனை விடுதிக்குத் தூக்கிக் கொண்டு போய்ச் சிகிச்சை செய்து வருவதாகத் தெரிந்தது. சிநேகிதர்கள் இருவரும் உடனே அவ்விடத்துக்குச் சென்றார்கள். சிறிது நேரம் சிகிச்சைகள் செய்த பிற்பாடு மகேந்திரர் கண் திறந்து பார்த்தார். புதல்வனைக் கண்டதும் முதலில் அவருடைய முகத்தில் மகிழ்ச்சி தோன்றியது. மறுகணத்திலே மகிழ்ச்சி பாவம் மாறி அளவற்ற வேதனையும் கவலையும் அந்த முகத்தில் பிரதிபலித்தன.

"மகனே! உனக்குப் பெரிய துரோகம் செய்துவிட்டேன்! என்னை மன்னிப்பாயா?" என்று அவருடைய உதடுகள்

அமரர் கல்கி

முணுமுணுத்தன.

"அப்பா! நீங்கள் கவலைப்பட வேண்டாம். நாங்கள்தான் சரியான சமயத்துக்கு வந்து சேர்ந்து விட்டோமே! சளுக்கர் சிதறி ஓடுகிறார்கள்!.." என்று மாமல்லர் சொல்லும்போதே மகேந்திரர் நினைவை இழந்துவிட்டார்.

மாமல்லரும் பரஞ்சோதியும் மகேந்திர சக்கரவர்த்தியைப் பத்திரமாகக் காஞ்சி நகருக்குக் கொண்டு போக ஏற்பாடு செய்து விட்டுப் போர்க்களத்தின் நிலைமையை ஆராய்ந்தார்கள். மகேந்திர பல்லவருடன் காஞ்சியிலிருந்து புறப்பட்டு வந்த சைனியத்தில் பெரும்பகுதி வீரர்கள் மணிமங்கலம் போர்க்களத்தில் வீரசுவர்க்கம் புகுந்து விட்டதாக அறிந்தார்கள். சேனாதிபதி கலிப்பகையாரும் அந்தப் போர்க்களத்திலேயே உயிர் துறந்த செய்தி தெரிய வந்தது. மேலே தாங்கள் செய்ய வேண்டியது என்ன என்று மாமல்லரும் பரஞ்சோதியும் யோசனை செய்தார்கள். காஞ்சி நகரைச் சுற்றிலும் இன்னும் பல இடங்களில் சளுக்க வீரர்களின் சிறு படைகள் ஆங்காங்கே கிராமங்களில் புகுந்து ஜனங்களை ஹிம்சித்துக் கொண்டிருப்பதாக அவர்களுக்குத் தகவல் தெரிய வந்திருந்தது. எனவே, அப்படிப்பட்ட கிராதக ராட்சதர்களை முதலில் ஒழித்துக் கிராமவாசிகளைக் காப்பாற்றுவதுதான் தங்களுடைய முதற் கடமை என்றும் காலாட்படையும் வந்து சேர்ந்த பிறகு புலிகேசியின் பெரும் படையைத் தொடர்ந்து போகலாம் என்றும் தீர்மானித்தார்கள்.

அவ்விதமே மூன்று நாட்கள் சுற்றிச் சுற்றி வந்து காஞ்சிக்குக் கிழக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் சளுக்கர் படையே இல்லாமல் துவம்சம் செய்தார்கள். இதற்குள்ளாகக் காலாட் படையும் வந்து சேரவே மீண்டும் வடக்கு நோக்கிப் புறப்பட்டார்கள். காஞ்சிக்கு வடக்கே மூன்று காத தூரத்தில் சூரமாரம் என்னும் கிராமத்துக்கு அருகில் ஒரு பெரும் போர் நடந்தது. இங்கே சளுக்கர் படைக்குத் தலைமை வகித்தவன் தளபதி சசாங்கன். இந்தச் சண்டையில் தளபதி சசாங்கனும் சளுக்க வீரர்களில் பெரும் பகுதியினரும் மாண்டார்கள், மற்றவர்கள் பின்வாங்கிச் சிதறி ஓடினார்கள். பல்லவர் படை அவர்களைத் துரத்திக் கொண்டு வெள்ளாறு வரையில் சென்றது.

தளபதி சசாங்கனைப் பின்னால் நிறுத்தி விட்டுப் புலிகேசிச் சக்கரவர்த்தி முன்னதாகவே வெள்ளாற்றைக் கடந்து போய் விட்டதாக மாமல்லரும் பரஞ்சோதியும் அறிந்தார்கள். மாமல்லர் வெள்ளாற்றையும் கடந்து அப்பால் புலிகேசியைத் துரத்திக் கொண்டு போக விரும்பினார். கலிப்பகையின் மரணத்தினால் இப்போது பல்லவ சேனாதிபதியாகி விட்ட பரஞ்சோதியார் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

"பிரபு! சக்கரவர்த்தியை எந்த நிலைமையில் நாம் விட்டு விட்டு வந்தோம் என்பது தங்களுக்கு நினைவில்லையா? அவரை அப்படி விட்டுவிட்டு நாம் நெடுகிலும் போய்க் கொண்டேயிருப்பது நியாயமா? கலிப்பகையும் போர்க்களத்தில் காலமாகி விட்டார். நாம் இல்லாத சமயத்தில் சக்கரவர்த்திக்கு ஏதேனும் நேர்ந்துவிட்டால் பல்லவ ராஜ்யம் என்ன கதி ஆவது? சளுக்கர்களால் சூறையாடப்பட்டும் ஹிம்சிக்கப்பட்டும் தவித்துக் கொண்டிருக்கும் கிராமவாசிகளின் கதி என்ன? அவர்களுக்கு அன்னவஸ்திரம் அளித்துக் காப்பாற்றும் கடமையை யார் நிறைவேற்றுவார்கள்? மதுரைப் பாண்டியன் மீண்டும் பல்லவ ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்பது என்ன நிச்சயம்? பிரபு! இதையெல்லாம் யோசித்துப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்" என்றார் பரஞ்சோதி.

மகேந்திரருடைய தேக நிலைமையைப் பற்றிக் குறிப்பிட்டவுடனேயே மாமல்லருடைய மனவுறுதி தளர்ந்துவிட்டது. சற்று நேரம் தலைகுனிந்தபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். பின்னர், "சேனாதிபதி! நீங்கள் சொல்லுவது உண்மைதான். அது மட்டுமல்ல, நாம் இப்போது நமது சைனியத்துடன் முன்னேறினால் அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள் இல்லை. போகும் வழியில் ஏற்கெனவே சளுக்க அரக்கர்கள் கிராமங்களைச் சூறையாடிக் கொண்டு போகிறார்கள். அவர்களுக்குப் பின்னால் நாமும் போனால் கிராமவாசிகள் எங்கிருந்து உணவு அளிப்பார்கள்? நாமும் சேர்ந்து அவர்களை



"நீங்கள் எப்படி
இங்கே வந்தீர்கள்?
சிவகாமியை
எப்போது
பிரிந்தீர்கள்?"

ஹிம்சிப்பதாகவே முடியும். எல்லாவற்றுக்கும் காஞ்சிக்குத் திரும்பிச் சென்று தந்தையின் உடல்நிலை எப்படியிருக்கிறதென்று தெரிந்து கொள்வோம். தக்க ஏற்பாட்டுடன் பிறகு திரும்புவோம்" என்றார்.


காஞ்சியை நோக்கித் திரும்பி வரும்போது ஆங்காங்கே கிராமங்களில் சளுக்க வீரர்கள் செய்துள்ள அக்கிரமங்கள் அவர்களுடைய கவனத்தைக் கவர்ந்தன. ஊர் ஊராக வீடுகளிலும் குடிசைகளிலும் வைக்கோற் போர்களிலும் அறுவடைக்கு ஆயத்தமாயிருந்த வயல்களிலும் சளுக்கர்கள் தீ வைத்திருந்தார்கள். எங்கே பார்த்தாலும் ஒரே சாம்பல் மயமாயிருந்தது. பல்லவ நாடே ஒரு பெரிய பயங்கர ஸ்மசான பூமியாக மாறி விட்டதாகத் தோன்றியது. இன்னும் சில கிராமங்களில் வீடுகள் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தன. ஆங்காங்கு ஜனங்களின் அழுகைக் குரல் எழுந்தது. மாமல்லரையும் பரஞ்சோதியையும் கண்டதும் ஜனங்கள் உரத்த சப்தமிட்டுப் புலம்பத் தொடங்கினார்கள். சளுக்க வீரர்கள் செய்த பயங்கர அட்டூழியங்களைப் பற்றி ஆங்காங்கே சொன்னார்கள். சிற்பிகள் கால் கை வெட்டப்பட்டது பற்றியும், இளம் பெண்கள் சிறைப் பிடித்துப் போகப்பட்டது பற்றியும், ஆடு மாடுகள் வதைக்கப்பட்டது பற்றியும் ஜனங்கள் சொன்னதைக் கேட்டபோது கோபத்தினாலும் ஆத்திரத்தினாலும் மாமல்லரின் மார்பு வெடித்து விடும் போலிருந்தது. நாக்கு உலர்ந்து மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டது. பரஞ்சோதியிடம் தமது கோபத்தையும் ஆத்திரத்தையும் வெளியிட்டு நாலு வார்த்தை பேசுவதற்குக் கூட மாமல்லரால் முடியாமல் போய்விட்டது.

சிற்பிகள் பலருக்கு நேர்ந்த கதியைப் பற்றிக் கேட்டபோது மாமல்லரின் இருதய அந்தரங்கத்தில், நல்லவேளை! ஆயனரும் சிவகாமியும் காஞ்சிக் கோட்டைக்குள் இருக்கிறார்களே! என்ற எண்ணம் ஓரளவு ஆறுதலையளித்தது. எனினும் சிற்பங்கள் அழிக்கப்பட்டதைப் பற்றி அறிந்தபோது மாமல்லபுரத்து அற்புதச் சிற்பங்களுக்கு என்ன கதி நேர்ந்தோ என்ற ஐயம் உதித்து மிக்க வேதனையளித்தது. அதை நேரில் பார்த்துத் தெரிந்து கொள்வதற்காக மாமல்லரும் பரஞ்சோதியும் அதிவிரைவாக மாமல்லபுரம் சென்றார்கள். அங்கே சிற்பங்களுக்கு அதிகச் சேதம் ஒன்றுமில்லையென்று தெரிந்துகொண்டு காஞ்சிக்குப் பயணமானார்கள். மாமல்லபுரத்திலிருந்து காஞ்சிக்குப் போகும் வழியில் ஆயனரின் அரண்ய வீடு இருந்ததல்லவா? அந்த வீட்டையும் பார்க்க வேண்டும், அதிலிருந்த தெய்வீக நடனச் சிலைகளுக்கு ஒன்றும் சேதமில்லையென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று மாமல்லர் விரும்பினார். ஆயனரின் வீட்டு வழியாகப் போவது காஞ்சிக்குக் குறுக்கு வழியாகவும் இருந்ததல்லவா?

ஆயனர் வீட்டு வாசலுக்கு வந்ததும் கதவு திறந்திருப்பதைப் பார்த்தார்கள். உடனேயே இருவருக்கும் 'திக்' என்றது. வீட்டின் முன் பக்கத் தோற்றமே மனக் கலக்கத்தை உண்டாக்கிற்று. ஏதோ ஒரு மகத்தான விபத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளப் போகிறோம் என்ற உள் உணர்ச்சியுடன் வீட்டுக்குள்ளே பிரவேசித்தார்கள்.

உடைந்தும் சிதைந்தும் அலங்கோலமாய்க் கிடந்த சிலைகளைப் பார்த்தபோது இருவருக்கும் தங்களுடைய நெஞ்சு எலும்புகள் உடைவது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. அவர்களுடைய காலடிச் சப்தத்தைக் கேட்டதும் படுத்திருந்த ஆயனர் எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தார்.

காஞ்சியில் பத்திரமாக இருப்பதாக அவர்கள் எண்ணிக் கொண்டிருந்த ஆயனரை இங்கே கண்டதினால் ஏற்பட்ட வியப்பு ஒருபுறமிருக்க, பயங்கரத்தால் வெளிறிய அவருடைய முகமும் வெறி கொண்ட அவருடைய பார்வையும் அவர்களுக்கு விவரிக்க முடியாத பீதியை உண்டாக்கின. "என் சிவகாமி எங்கே?" என்று ஆயனச் சிற்பியார் கேட்டதும், மாமல்லருக்கு மலை பெயர்ந்து தலையில் விழுந்து விட்டது போலிருந்தது.



முப்பத்து இரண்டாம் அத்தியாயம்

இரத்தம் கசிந்தது

மாமல்லர் 'கீழே விழுந்து விடுவாரோ' என்ற பயத்தினால் பரஞ்சோதி அவருடைய கரத்தைப் பிடித்துக் கொண்டார். இருவரும் பேச நாவெழாமல் ஆயனரைப் பார்த்தபடியே நின்றார்கள்.

மீண்டும் ஆயனர், "பல்லவ குமாரா! சிவகாமி எங்கே? என் செல்வக் கண்மணி எங்கே? ஆயனச் சிற்பியின் அருமைக் குமாரி எங்கே? மகேந்திர பல்லவரின் கவிகார புத்திரி எங்கே? பரத கண்டத்திலேயே இணையற்ற நடன கலாராணி எங்கே?" என்று வெறி கொண்ட குரலில் கேட்டுக் கொண்டே போனார்.

மாமல்லருடைய உள்ளமானது பெரும் புயல் அடிக்கும்போது கடல் கொந்தளிப்பது போல் கொந்தளித்தது. ஆயினும் சிவகாமிக்கு என்ன நேர்ந்தது என்று தெரிந்து கொள்ளும் ஆவலினால் பல்லைக் கடித்து மனத்தை உறுதிப்படுத்திக் கொண்டு, பசையற்ற வறண்ட குரலில், "ஐயா! தயவு செய்து மனத்தை நிதானப்படுத்திக் கொள்ளுங்கள். சிவகாமி எங்கே என்று நானல்லவா தங்களைக் கேட்க வேண்டும்? சிவகாமிக்கு என்ன நேர்ந்தது? சொல்லுங்கள்," என்று கேட்டார்.

ஆயனருடைய வெறி அடங்கியது. அவருடைய உணர்ச்சி வேறு உருவங் கொண்டது. கண்ணில் நீர் பெருகிற்று. "ஆமாம், பிரபு! ஆமாம்! என்னைத்தான் தாங்கள் கேட்க வேண்டும். சிவகாமியை இந்தப் பாவியிடந்தான் தாங்கள் ஒப்புவித்திருந்தீர்கள். நான்தான் என் கண்மணியைப் பறி கொடுத்து விட்டேன். ஐயோ! என் மகளே! பெற்ற தகப்பனே உனக்குச் சத்துருவானேனே!" என்று கதறியவண்ணம் தலையைக் குப்புற வைத்துக் கொண்டு விம்மினார்.

ஆயனரின் ஒவ்வொரு வார்த்தையும் நரசிம்மவர்மரின் இருதயத்தை வாளால் அறுப்பது போல் இருந்தது. சிவகாமி இறந்து போய்விட்டாள் என்றே அவர் தீர்மானித்துக் கொண்டார்.

பொங்கி வந்த துயரத்துக்கும், ஆத்திரத்துக்கும் இடையே சிவகாமி எப்படி இறந்தாள் என்று தெரிந்து கொள்ளும் ஆவலும் எழுந்தது. ஒருவேளை சளுக்கர்களால் அவளுடைய மரணம் நேர்ந்திருக்குமென்று எண்ணம் மின்னலைப் போல் உதயமாகி அவருடைய உடம்பையும் உள்ளத்தையும் பிளந்தது.

மீண்டும் ஒரு பெரு முயற்சி செய்து மனத்தைத் திடப்படுத்திக் கொண்டார். அதிகாரத் தொனியுடைய கடினமான குரலில், "ஆயனரே! மறுமொழி சொல்லிவிட்டு அப்புறம் அழும். சிவகாமி எப்படி இறந்தாள்? எப்போது இறந்தாள்?" என்று கர்ஜித்தார்.

"ஆஹா! என் கண்மணி இறந்துவிட்டாளா?" என்று அலறிக் கொண்டு, படுத்திருந்த ஆயனர் எழுந்து நிற்க முயன்றார். அவர் கால் தடுமாறியது. பயங்கரமாக வீறிட்டுக் கொண்டு தொப்பென்று தரையில் விழுந்தார்.

"இறந்து விட்டாளா?" என்ற கேள்வியினால், சிவகாமி இறந்து விடவில்லை என்ற உண்மை மாமல்லரின் மனத்தில் பட்டது. ஆயனர் அப்படி நிற்க முயன்று விழுந்தபோது, அவருடைய காலில் ஊனம் என்னும் விவரமும் மாமல்லருக்குத் தெரிந்தது. இதனால் அவர் கல்லாகச் செய்து கொண்டிருந்த மனம் கனிந்தது. "ஐயா! தங்களுக்கு என்ன?" என்று கேட்டுக் கொண்டே ஆயனரின் அருகில் வந்து உட்கார்ந்தார்.

"ஐயா! தங்கள் கால் முறிந்திருக்கிறதே? இது எப்படி நேர்ந்தது?" என்று இரக்கத்துடன் வினவினார்.


"மலையிலிருந்து விழுந்து கால் முறிந்தது. என் கால் முறிந்தால் முறியட்டும். சிவகாமி இறந்து விட்டதாகச் சொன்னீர்களே! அது உண்மைதானா?" என்று ஆய


னர் கேட்டார். "ஐயா! சிவகாமியைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. போர்க்களத்திலிருந்து நேரே வரு கிறேன். நீங்களும் சிவகாமியும் காஞ்சியில் சௌக்கியமா யிருப்பதாக எண்ணியிருந்தேன். நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்? சிவகாமியை எப்போது பிரிந்தீர்கள்? அவள் இறந்து போய் விடவில்லையல்லவா?" என்று மிகவும் அமைதியான குரலில் பேசினார் மாமல்லர்.


இதற்கு மாறாக, அலறும் குரலில், "ஐயோ! சிவகாமி இறந்து போயிருந் தால் எவ்வளவோ நன்றாயிருக் குமே!" என்றார் ஆயனர்.

"ஐயா! சிவகாமிக்கு என்ன தான் நேர்ந்தது?"

"ஐயோ! எப்படி அதைச் சொல் வேன்? எல் லாம் இந் தப் பாவி







"இதெல்லாம் எப்படி நடந்தது? காஞ்சியிலிருந்து நீங்கள் ஏன் கிளம்பினீர்கள்? சிவகாமி எப்படிச் சிறைப்பட்டாள்? உங்கள் கால் எப்படி ஒடிந்தது? அடியிலிருந்து எல்லாம் விவரமாகச் சொல்லுங்கள்!"

அருள்வாக்கு

எத்தனை ஏழைக் குடும்பமானாலும் சோற்றுச் செலவைவிட ஜாஸ்தியாகக் காபி அல்லவா இழுக்கிறது? அகத்தில் சாப்பிடுவதோடு, கண்ணில் படுகிற ஹோட்டலில் புகுந்தும் மூன்று வேளை நாலு வேளை என்று குடிக்கப் பண்ணுகிறதே! எழுந்தவுடனேயே, பல் தேய்க்காமலே கூட பெட் - காபி இல்லாவிட்டால் அந்தக் காபிப் பொடி வண்டலாலேயே பல் தேய்த்து விட்டு அதை உள்ளேயும் தள்ளுவது என்பதாக, 'இதில்லாமல் ஜீவனில்லை' என்கிற அளவுக்கு



இதற்கு நம் புத்திக்கு மேல் ஆதிக்யம் கொடுத்திருப்பது தப்புத்தானே? இந்த ஆதிக்யத்தினால்தான் இக்கால ஸந்நியாஸிகளுக்குத் தண்ட, கமண்டலம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை; ஆனால் 'ஸ்டவ்' இருந்தாக வேண்டுமென்று ஆகியிருப்பது? நெருப்புக்கிட்டேயே போகப் படாது, சமைக்கவே கூடாது என்று விதிக்கப்பட்டிருக்கும் ஸந்நியாசிகள்கூட, பிரம்ம முஹூர்த்தத்தில் எழுந்து தியானம் செய்வதானால் அதற்கு முந்தி காபி இல்லாமல் முடியவில்லை என்று தாங்களே 'ஸ்டவ்'வில் போட்டுக் குடிக்கிறதாக அல்லவா பார்க்கிறோம்? இதுதான் இன்றைக்கு நடக்கிற ஸ்வயம்பாக நியமம்! இப்படி ஒரு வழக்கத்துக்கு அடிமைப் பட்டிருப்பது தப்பு என்பதால் தான் நான் காபியை பலமாகவே கண்டிப்பது. காபியை நிறுத்திவிட்டு அந்தப் பாலை ஏழைக் குழந்தைகளுக்கோ, பலஹீனருக்கோ விநியோகம் பண்ணுவதென்று வைத்துக் கொண்டால் பெரிய புண்யமாகும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

யினால் வந்த வினைதான்! பிரபு! சிவகாமியைச் சளுக்கர்கள் சிறைப் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள்!"

"என்ன? என்ன?" என்று மாமல்லர் கேட்ட தொனியில் உலகத்திலேயே கண்டும் கேட்டுமிராத விபரீதம் நடந்து விட்டதென்று அவர் எண்ணியது புலனாயிற்று.

"ஆம், பிரபு! சிறைப் பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள். தாங்கள் சளுக்கர்களைத் தொடர்ந்து போனது பற்றிக் கேள்விப்பட்டபோது, சிவகாமியை விடுவித்துக் கொண்டு வருவீர்களென்று நம்பியிருந்தேன். என்னை ஏமாற்றி விட்டீர்கள்! ஆனால் உங்கள் பேரில் என்ன தப்பு? எல்லாம் இந்தப் பாவியினால் வந்ததுதான். சித்திரம், சிற்பம் என்று பைத்தியம் பிடித்து அலைந்தேன். என் உயிர்ச் சித்திரத்தை, ஜீவ சிற்பத்தைப் பறி கொடுத்தேன்...! ஐயோ! என் மகளுக்கு நானே யமன் ஆனேனே!"

இவ்வாறெல்லாம் ஆயனர் புலம்பியது மாமல்லரின் காதில் ஏறவே இல்லை. சிவகாமியைச் சளுக்கர் சிறைப் பிடித்துச் சென்றார்கள் என்னும் செய்தி ஒன்றுதான் அவர் மனத்தில் பதிந்திருந்தது. சிறிது நேரம் பிரமை பிடித்தவர் போல் உட்கார்ந்திருந்தார்.

பிறகு, தொண்டையைக் கனைத்துக் கொண்டு, மிக மெலிந்த குரலில், "சிற்பியாரே! இதெல்லாம் எப்படி நடந்தது? காஞ்சியிலிருந்து நீங்கள் ஏன் கிளம்பினீர்கள்? சிவகாமி எப்படிச் சிறைப்பட்டாள்? உங்கள் கால் எப்படி ஒடிந்தது? அடியிலிருந்து எல்லாம் விவரமாகச் சொல்லுங்கள்!" என்றார்.

ஆயனரும் அவ்விதமே விவரமாகச் சொன்னார். தட்டுத் தடுமாறி இடையிடையே விம்மிக் கொண்டு சொன்னார்.

மாமல்லர் கேட்டுக் கொண்டிருந்தார். அச் சமயம் உறையிலிருந்து எடுத்த கத்தியை அவர் கையில் வைத்துக் கொண்டிருந்தார். கத்தியின் கூரிய விளிம்பை அவர் இடக்கை விரல்கள் தடவிக் கொண்டிருந்தன. அவ்வாறு தடவியபோது விரல்களில் சில கீறல்கள் ஏற்பட்டன. அந்தக் கீறல்களில் கசிந்த இரத்தம் சொட்டுச் சொட்டாகத் தரையில் சொட்டிக் குட்டையாகத் தேங்கியது. (தொடரும்)

நரசிம்மன்

அன்றும், இன்றும்



மூன்று தலைமுறை வித்வான்களைக் கேட்டு மகிழ்ந்த ரசிகர் நரசிம்மன் — அவர்களைப் பற்றிய சுவையான சம்பவங்களைச் சிரிக்கச் சிரிக்க நினைவு கூர்வதில் வல்லவர். சென்னை, திருவான்மியூரில் செயல்படும் ஆஸ்திக சமாஜம் அமைப்பின் செயலாளர். சமாஜத்தில் மகிழ்ச்சியோடு பாட முன்னணிக் கலைஞர்களும் முன் வருவது அதன் ஆத்மார்த்தமான செயல்பாட்டுக்குக் கிடைக்கும் அங்கீகாரம். பலர் அங்கலாய்ப்பது போல் இன்று இசையின் தரம் தாழ்ந்து விட்டதா? நீர்த்து விட்டதா?.... அலசுகிறார் நரசிம்மன்.

மதுரை புஷ்பவனம் என்ற வித்வான் (இவர் மதுரை மணியின் சித்தப்பா) ஒருமுறை திருவையாறில் கச்சேரி செய்வதாக இருந்தது.

அக் கச்சேரிக்கு அவர் வர முடியாமல் போய்விடவே, அவரிடத்தில் யாரைப் போடுவது என்ற பேச்சு எழுந்தது.

ஏற்பாடுகளைக் கவனித்து வந்தவர் மலைக்கோட்டை கோவிந்தசாமிப் பிள்ளை.

"மஹாராஜபுரம் விச்வநாதன் இருக்கான்..."

— சிபாரிசு செய்தார் ம்ருதங்க வித்வான் அழகநம்பிப் பிள்ளை.

"என்ன வயது...?" கேட்டார் மலைக்கோட்டை.

"இருபது..."

"ஹ! எனக்கு ஒத்துக் காது...!" — மறுத்துவிட்டார் அந்தக் கச்சேரிக்கு வயலினும் வாசிக்கவிருந்த மலைக்கோட்டை கோவிந்தசாமிப் பிள்ளை.

அவருக்கு எடுத்துச் சொல்லி, நம்பிக்கையூட்டி, மஹாராஜபுரம் விச்வநாத அய்யரை ஏற்பாடு செய்தார் அழகநம்பிப் பிள்ளை.

கோவிந்தசாமிப் பிள்ளை, ரொம்ப தோரணையாக, பிரதான கலைஞரைப் போல், பார்வையாளர்களை நோக்கியே உட்கார்ந்தார்.

விச்வநாத அய்யர் பாட ஆரம்பித்தார். ஹரிகாம்போதி. 'உண்டேதி ராமுடு...'





ஆலாபனை பாடிய இனுசைக் கேட்டவுடனேயே, கோவிந்த சாமிப் பிள்ளை அவரைப் பார்க்கத் திரும்ப ஆரம்பித்தார்... நிரவல் ஸ்வரம் பாடியதும், "இவன்தான் அடுத்த புஷ்பவனம் அய்யா!" என்று அறிவித்துவிட்டார்.

அடுத்த தலைமுறையை ஏற்பதும் அரவணைப்பதும், கலை உலகில் அவ்வளவு சுலபமாக நடந்துவிடுவதில்லை என்பதை இது உணர்த்துகிறது.

'அந்தக் காலம் போல் உண்டா?' என்று அங்கலாய்ப்பவர்கள் இன்றும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கூட இரண்டு _ இரண்டரை மணி நேரம் உட்கார்ந்து கச்சேரியைக் கேட்டு, தலையாட்டி ரசித்துவிட்டுப் பேசுபவர்கள் தான்!

"இன்றைக்குப் பாடுவதெல்லாம் ஒரு பாட்டா... அந்த நாள் சங்கீதத்தைக் கேட்கணும்" இந்த வசனத்தை, கச்சேரி தோன்றிமைக் தோன்றாக் காலத்திலிருந்து கேட்டு வருகிறோம்!

பட்டணம் சுப்ரமண்ய அய்யர், பூச்சி ஸ்ரீநிவாஸ அய்யங்கார் போன்றவர்கள் பாடிச் சென்று, அடுத்த தலைமுறை தோன்றிய காலத்தில், 'இதெல்லாம் ஒரு பாட்டா! இந்தப் பாட்டைப் போய்க் கேட்க வேண்டி வருகிறதே!' என்று அங்கலாய்ப்பார்கள். நான் சிறுவனாகக் கேட்ட இந்த டயலாக், வளர்ந்த பிறகு, அரியக்குடி, மஹாராஜபுரம் விச்வநாத அய்யர் காலம் முடிந்த பின்னரும், எழுந்தது. ஆனால் அதன் பிறகும் உயர்ந்த

என்றும்...!



• மகாராஜபுரம் விஸ்வநாத அய்யர்



• அரியக்குடி

சங்கீதம் தொடரவில்லையா...? இன்றளவும் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது.

புல்லாங்குழல் மாலியையே முதன் முதலில் குழல் வாசிப்புக்கு லாயக்கில்லை என்று சொன்னவர்கள் உண்டு! 'போய் நாதஸ்வரம் வேண்டுமானால் முயன்று பார்!' என்று அவரை விரட்டிய வித்வான் முன்னிலையிலேயே, குழலிசைக் கச்சேரி செய்து வெற்றிக் கொடி நாட்டினார் மாலி.

வித்வானுக்கு வித்வான் அங்கீகாரம் அளிக்க முன்வந்துவிட்டால் அப்புறம் ரசிகர்களிடையே என்ன தயக்கம் இருக்க முடியும்! ஒருமுறை மாலி, வாணி மஹாலில் சிறப்பாக வாசித்து கொண்டிருக்கிறார் என்ற செய்தி பரவி, முசிறி, செம்மங்குடி, எம்.எஸ் _ சதாசிவம், எல்லோரும் அக் கச்சேரியைக் கேட்க ஓடோடி வந்தார்கள்!

இன்று சக வித்வான்களின் பரஸ்பர ஆதரவும் மூத்த வித்வான்களின் அங்கீகாரமும், தாராளமாகக் கிடைக்கிறதா?... ஆராய்ச்சிக்குரியதுதான். அவ்வாறு கிடைக்கப் பெறுகிற கலைஞர்களுக்கு ரசிகர்களின் ஆதரவும் சுலபத்தில் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

இந்தத் தலைமுறையிலும் ரவிகிரண், மாண்டலின் ஸ்ரீநிவாஸ் போல் மிகச் சிறிய வயதில் பெயரெடுத்து நிலைத்தவர்கள் இருக்கிறார்கள்.

இசை வளம் குன்றிவிட்டது என்ற குற்றச்சாட்டைப் பொய்யாக்கும் வகையில், ஒவ்வொரு கலைஞரிடமும் ஒரு தனித்தன்மையிருக்கிறது. பலம் இருக்கிறது.


இன்றைக்கு சுருதி சுத்தம் போற்றப்படுகிறது. பல கலைஞர்கள் ஒன்றுக்கு இரண்டாகத் தம்பூரா வைத்துக்



• மாலி

கொண்டு பாடுகிறார்கள். அந்த நாளில் 'தம்பூராவை ஏன் கிட்டே கொண்டு வருகிறாய்?' என்று கேட்கக் கூடிய வித்வான்கள் இருந்திருக்கிறார்கள்!

இன்று லட்சிய ஞானம் மட்டும் இன்றி, சங்கீத லட்சணங்கள் குறித்த ஞானமும் தேடித் தெரிந்து கொள்கிறார்கள். குறைந்த நேரத்தில் நிறைய விஷயங்களை நிரவிக் கொடுக்கிறார்கள்.



• மதுரை மணி

முன் போல் இன்று கச்சேரிகளுக்குக் கூட்டம் வருகிறதா...? கேட்கிற இசை ஒன்றாக இருக்கலாம். கிடைக்கிற சுகம் மாறாதிருக்கிறதா?.... இந்த நியாயமான கேள்விகள் எழுகின்றன.

இன்று கச்சேரி கேட்பதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன. இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன் இப்படி இல்லை. ஒரு வித்வான் சென்னையில் கச்சேரி செய்துவிட்டுப் போனால், அடுத்த முறை வருவதற்கு இரண்டு மூன்று மாதங்களாகிவிடும். அபூர்வ வாய்ப்பு என்பதால், அசௌகரியங்களைப் பொருட்படுத்தாமல் ஓடி ஓடிப் போய்க் கேட்டோம். ஒருமுறை சாயி பாபா கோயிலில் கீத்துக் கொட்டகை போட்டு, மதுரை மணி அய்யர் கச்சேரி. நல்ல மழை பிடித்துக் கொண்டது. சைனீஸ் டார்ச்சர் என்று சொல்வார்கள், அந்த மாதிரி கீற்று நுனி வழியே மழை நீர் சொட்டுச் சொட்டாகத் தலையில் விழுகிறது. யாராவது பொருட்படுத்த வேண்டுமே!

''எல்லோரும் நனைகிறீர்களே... நிறுத்திவிடட்டுமா?'' என்றார் மணி அய்யர்.

''இசை மழையிலே நனையறபோது இந்த மழை சிரமமாகத் தெரியலை...'' என்று கூட்டம் பதில் சொல்லிவிட்டது!

இதே மதுரை மணி... வண்ணாரப்பேட்டையிலே கச்சேரி... இரவு எட்டரைக்கு மேல்தான் கரஹரப்ரியா எடுத்தார். 'சக்கனி ராஜ மார்கமு...' 'கண்டிகி சுந்தர' வரியில் நிரவல்... பழனி சுப்ரமண்யப் பிள்ளை, சங்கரன் பக்கவாத்தியம்! மாற்றி மாற்றி வாசிக்கிறார்கள்... கேட்க இரண்டு காது போதாது என்றால், பார்க்கப் பதிணைந்து கண்கள் போதாது போலிருந்தது! அப்படியொரு பரிமாற்றம் அந்த மேடையில் நிகழ்ந்து கொண்டிருந்தது. எழுந்து வீட்டுக்குப் போக எப்படி மனசு வரும்? இரவு ஒன்பதரைக்கு மேல் விடுதிக்குத் திரும்பி, சாப்பாட்டைத் துறந்து தூங்கிய போதும், சந்தோஷமாகவே இருந்தது.

இன்றைக்கும் அந்த மாதிரி கச்சேரிகள் நடக்கின்றன. ஆனால் படிப்பையும் பசியையும் கொஞ்சம் மறந்து, இளைஞர்கள் வருவதில்லை... வயோதிகர்களே அதிகம் வருகிறார்கள்...

நான் எல்.ஐ.ஸியில் பணியாற்றிய காலத்தில், கூட்டமாக நாற்பது இளைஞர்கள் ஜமா சேர்ந்து கொண்டு கச்சேரிக்குப் போவோம். புரமோஷன் பரீட்சை சமயம், படிக்காவிட்டால் போகிறது என்று ஆலத்தூர் சகோதரர்கள் கச்சேரி கேட்கப் போய்விட்டேன். (பிறகு பரீட்சையிலும் தேறிவிட்டேன்.)

கோவை பின்னி சுப்பாராவ் வீட்டில் ஒரு இசை விழா நடக்கும். ஹிந்துவில் விவரங்கள் வெளி வரும். அதைக் கத்திரித்து வைத்து மனப்பாடமே செய்து விடுவேன். அந்தந்த தினத்தில், அந்தந்தக் கலைஞர் என்ன பாடுவார்? எப்படிப் பாடுவார்? பக்கவாத்தியம் எப்படி வாசிப்பார்கள் என்று இருந்த இடத்திலிருந்தே கற்பனை பண்ணி மகிழ்வேன். நிகழ்ச்சிகள் அபூர்வமாய் இருந்ததால், ஆர்வம் பொங்கிக் கொண்டே இருக்கும்.

இன்றைக்குப் படிப்பு, பரீட்சை, டி.வி._ இளைஞர்களை கச்சேரிகளுக்குப் போக விடாமல் செய்கிறது. வாய்ப்புகள் அதிகம் என்றாலும் ஆர்வத்தை அவர்கள் வளர்த்துக் கொள்ளக் காணோம். கச்சேரிகளில் இளைஞர்களை மேடையில்தான் பார்க்க முடிகிறது!

ஆனால் இசையின் தரம் நிச்சயம் குறையவில்லை. இலட்சியங்கள் மாறியிருக்கின்றன; லட்சணங்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. சங்கீதம் தரும் மகிழ்ச்சியும் அமைதியும் ஆனந்தமும் நீடிக்கின்றன. அவற்றை எப்போதும் நிலைத்து நீடிக்கச் செய்யும் சக்தி சங்கீதத்துக்கே உண்டு! ○

கிங்கரன் அனுப்பி வைத்த விபூதி பிரசாதம்!

சுமார் நூறு பிள்ளைகளும், பெண்களும் சேர்ந்து தங்கள் தகப்பனாருக்குப் பிறந்த நாள் விழா எடுத்தால் எப்படி இருக்கும்? அப்படித்தான் இருந்தது. சமீபத்தில் இனியவன் நடத்திய 'இலக்கிய வீதி'யின் வெள்ளிவிழா எட்டாவது உலா நிகழ்ச்சி.

'கண்ணன்' ஆசிரியரும், பழம் பெரும் எழுத்தாளருமான 'ஆர்வி'யை, அவர் உருவாக்கிய எண்ணற்ற எழுத்தாளர்களைச் சந்திக்க, நெகிழ்ச்சியும் மகிழ்ச்சியும் கலந்த ஒரு வாய்ப்பை வழங்கினார் 'இலக்கியவீதி' இனியவன்.

'கிங்கரன்' என்ற பெயரில் அன்று கும்பகோணத்தில் பாடசாலையிலிருந்து எழுதியவர் மட்டும், ஆசிகளுடன் குங்கும விபூதி பிரசாதம் அனுப்பி வைத்திருந்தார். 'கிங்கரன்' வேறு யாரும் அல்ல. காஞ்சி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திரர்தான்!



சிங்கப்பூர் வானொலியில் பணியாற்றும் ஜே. எம்.சாலி, தாம் 'கண்ணனுக்குக் கதைகள், எழுதிய காலத்தில், ஒரே ஒரு சிறுகதையை மட்டும் ஆர்வி திருப்பி அனுப்பி விட்டதாகச் சொன்னார். இதை 'ஆனந்த விகட'னுக்கு அனுப்பி வைத்தால், முத்திரைக் கதையாக வெளிவர வாய்ப்பு இருக்கிறது என்று சிறு குறிப்பும் எழுதியிருந்தாராம்! சாலி அதை விகடனுக்கு அனுப்ப, அது முத்திரைக் கதையாகவே அன்று வெளியாயிற்று. "எந்தப் பத்திரிகை ஆசிரியர் இந்த மாதிரி வழி காட்டுவார்?" என்று நெகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தார் சாலி.

'கோகுலம்' முன்னாள் ஆசிரியர் ரேவதி, தமது நாவல், 'கண்ணன்' போட்டியில் பரிசு பெற்று, தொடராக வெளியாகிக் கொண்டிருந்தபோது 'கண்ணன்' அலுவலகத்துக்கு ஒரு நாள் வருமாறு அழைக்கப்பட்டு, நாலு வெள்ளைத் தாள்களைக் கொடுத்தாராம் உதவி ஆசிரியர். நான்காம் அத்தியாயம் ஓவியரிடம் படம் போடக் கொடுத்தபோது, காணாமல் போய்விட்டதாகச் சொன்னாராம். அங்கேயே உட்கார்ந்து அந்த அத்தியாயத்தை மறுபடி எழுதிக் கொடுக்கச் சொன்னாராம்.

"நானும் எழுதிக் கொடுத்தேன். பிறகு தற்செயலாக ஓவியரைப் பார்த்தபோது 'கதையின் அத்தியாயத்தைத் தொலைத்து விட்டீர்களாமே?' என்று கேட்டேன். 'இல்லையே, படத்தோடு கொடுத்து விட்டேனே!' என்றார். அந்த வாரம் 'ஆர்வி'யைச் சந்தித்து, 'எதற்குக் கதையின் நான்காவது அத்தியாயம் தொலைந்து விட்டதாகச் சொன்னீர்கள் என்று கேட்டேன். 'அது ஒன்றுமில்லை. அந்தத் தொடர்கதையை நீயேதான் எழுதினாயா என்று பரிசோதித்துப் பார்க்கவே அப்படிச் செய்தேன்!' என்றார். நாசுக்கான அவரது துப்பறியும் உத்தி அப்போது என்னை பிரமிக்க வைத்தது'' என்றார் ரேவதி.

'கல்கி'யில் அவர் எழுதிய 'தேன்கூடு' தொடர்கதையை வாரம் தோறும் படித்து வந்தார் காஞ்சி பரமாசாரியார். மடத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த 'கலைமகள்' அலுவலகத்தைச் சேர்ந்த நடராஜனிடம், 'எப்படி முடிக்கப் போகிறார் ஆர்வி?' என்று பெரியவர் கேட்டிருக்கிறார். தொடர்கதை முடிந்ததும், 'நான் நினைத்த மாதிரியே முடித்திருக்கிறார் ஆர்வி. எனக்குத் திருப்தி என்று சொல்லு!' என்று கூறினாராம்.

- எஸ்.வி.என்.

புகைப்படம் : க்ளிக் ரவி

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

குறை ஒன்றுமில்லை

பகவான் கீதையிலே ரொம்பவும் கவலைப்பட்டுச் சொன்ன வார்த்தை இது:

"நான் வந்து மனித வடிவிலே இவர்களுடன் கலந்து சஞ்சரிப்பதனாலே இந்த மூடாத்மாக்கள் என்னை உணரவில்லை. என் பெருமையை உணரவில்லை...'' என்று மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டான்.

அப்படிப்பட்ட உயர்ந்த பரமாத்மா - அவன் பெருமையை உத்தமர்களான பீஷ்மாதிகள் என்ன, வியாஸ மஹரிஷி என்ன... இப்படிப் பட்டவர்கள் நன்கு உணர்ந்தார்கள். ஆனால் அஞ்ஞானிகள் உணரவில்லை அவன் பெருமையை. பரமாத்மா வெளிப்படையாகத் தன் பெருமையைக் காட்டிக் கொள்ளாத காலத்திலும் மகான்கள் மட்டும் அதை உணர்ந்தார்கள். ஆதலால் நாம் எம்பெருமானுடைய பெருமையை, அந்த மகான்களிடத்திலேதான் கேட்டுக் கேட்டு நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிந்து கொள்வதைத்தான் 'பஹுதா சுரோதவ்யம்' என்கிறது சாஸ்திரம்.

பஹு என்றால் நிறைய; ச்ரோதவ்யம் - கேட்டல்.


'சாப்பிடுவதை நிறுத்தி விடுங்கள்...' என்கிறது சாஸ்திரம். சாப்பிடுவது என்பது தான் ஆயுளுக்கும் கூடவே வந்து கொண்டிருக்கிறதே! அதைப் பற்றி ஏன் நினைக்க வேண்டும்! தர்மத்தை நினைத்துக் கொள், பார்ப்பதையும் நிறுத்து; கேட்பதை மட்டும் நிறுத்தவே நிறுத்தாதே! எப்போதும் கேட்டுக் கொண்டே இரு...' என்கிறது.

அதனால்தான் சரீரத்திலேயே அழகான அமைப்பாகக் கொடுத்திருக்கிறான். வாய்க்கு மூடி போட்டு வைத்திருக்கிறான் பரமாத்மா. சாப்பிட வேண்டுமானால் வாயைத் திறந்தாக வேண்டும். பார்க்க வேண்டுமானாலும், கண்களுக்குப் போட்ட மூடிகளை - இமைகளைத் திறந்து பார்க்க வேண்டும். காது மட்டும் எப்போது பார்த்தாலும் திறந்தே இருக்கும்! ஏனென்றால், 'ஒரு நிமிடமும் கேட்காமல் இராதே' என்று கேட்பதன் மேன்மையைச் சொல்கிறது வேதம்.

நிறையக் கேட்க வேண்டும்; பல மகான்களிடத்திலே கேட்க வேண்டும். மகான் ராமானுஜர் இருந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் 'பஞ்சாச்சார்ய பதாச்சார்யர்' என்று அவருக்குப் பெயர். ஐந்து ஆசார்யர்களை அண்டி, ஐந்து விஷயங்களைக் கற்றுக் கொண்டார்.

திருக்கோட்டியூர் நம்பிகளிடத்திலே மூல மந்திரத்தைக் கேட்டார். பெரிய திருமலை நம்பிகளிடத்திலே ராமாயணத்தைக் கேட்டார்... இப்படி ஆசார்யர்களிடத்திலே போய் அவர்களுக்கு சிச்ருஷை பண்ணி, அவர்கள் எப்போது உபதேசம் செய்வார்கள் என்று காத்திருந்து, அவர்கள் சொல்லச் சொல்லக் கேட்டுக் கொண்டார்.

ஆசார்யர்களை நிர்ப்பந்தப் படுத்திக் கேட்டு விட முடியாது. பல காலம் கூடவே இருந்து சிரமப்பட்டுத்தான்


21

கற்றுக் கொண்டாக வேண்டும். அவர்கள் எல்லாம் பட்ட சிரமம் நாம் பட்டதில்லை.

இஞ்சிமேட்டு ஸ்ரீமத் அழகிய சிங்கர், நாவல்பாக்கம் சுவாமி என்பவர்… (காஞ்சிபுரத்தில் எழுந்தருளியவர்) இவர்கள் இருவருமே சக அத்யாயிகள். இங்கேயிருந்து நடந்தே காசிக்குப் போய், தர்க்க சாஸ்திரத்தைப் பூர்த்தியாகப் படித்தார். அந்த வித்யையைச் சம்பாதிக்க அவர் பட்ட கஷ்டம் என்னவென்று சொல்லி முடியாது. நாம் பட்ட சிரமம் இனி யாருமே படக்கூடாது என்றுதான், மதுராந்தகத்திலே வேத பாடசாலையைக் கட்டி அதிலே வித்யார்த்திகள் சேர்ந்து சுலபமாக அத்யயனம் பண்ணும்படியாகச் செய்தார். இப்போது ஊர் ஊராக எங்கு சென்றாலும், அங்கே காஞ்சியிலே பயின்று வந்த ஆசார்யர்களைத்தான் பார்க்கிறோம்.

அப்படிப்பட்ட தீர்க்க தரிசனத்தோடு அவர் பாடசாலையை நிர்மாணம் பண்ணினார். எவ்வளவு விசால ஹ்ருதயம் அழகிய சிங்கருக்கு!

எதற்குச் சொல்ல வந்தேன் என்றால், கல்வி கற்பதற்கு அவ்வளவு சிரமப் பட்டார்கள் அந்தக் காலத்தில். ராத்திரி பகல் என்று பாராமல் போவார்கள். அப்படிப் போனால்தான் வித்தை வரும். வித்தை வர வேண்டுமானால் சுகத்தைப் பார்த்தால் முடியாது, தூக்கத்தை எதிர்பார்க்கக் கூடாது.

வித்யை கற்பதுதான் கஷ்டம். அதைச் செலவழிப்பது ஆனந்தம். பல பேருக்குச் சொல்லிக் கொடுப்பதனாலே, கற்றவருக்கு இன்னும் கெட்டி ஆகிறது. அதை நினைத்து நினைத்து ஆனந்தப்படுகிறார்.

பொருள் இருக்கிறது பாருங்கள்… அதைச் சம்பாதிப்பதும் கஷ்டம்; செலவழிப்பதும் கஷ்டம். ஐயோ, கையை விட்டுப் போகிறதே போகிறதே, என்று தோன்றிக் கொண்டேயிருக்கும்.

ஆனால் வித்தையாகிற தனம்தான் உயர்ந்த தனம். அந்த மெய் வித்தையை - வேதாந்த வித்யா என்று, உத்தமமான எம்பெருமானின் பெருமையைக் காட்டும் வித்யையைக் கற்பிக்கிற ஆசான்தான் உயர்ந்த ஆசார்யர். சாதாரண வித்யை கற்றுத் தருவோரும் உயர்ந்த ஆசார்யர்கள் தான். இருந்தாலும் எம்பெருமானைக் காட்டித் தருகிறார் பாருங்கள்… அந்த ஆசார்யர் மிகவும் உயர்ந்தவர் என்று சாஸ்திரம் கொண்டாடுகிறது. அப்பேர்ப் பட்ட ஆசார்யனுக்கு எதை வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்கிறது சாஸ்திரம்.

சர்வத்தையும் அர்ப்பணம் பண்ணு, என்று விசேஷமாக சாஸ்திரம் கொண்டாடுவதனாலே, அந்த எம்பெருமானுடைய ஸ்வரூப-ரூப-விபவ குண ஐச்வர்யாதிகளை நன்கு நாம் தெரிந்து கொள்ள வேண்டும் - ஆசார்யர்கள் வாயிலாக.



எம்பெருமானை நன்கு தெரிந்து கொள்வதைப் போலவே, இந்த ஆத்மாவினுடைய தன்மையையும் நாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். நாம் யார்…? என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். சொஸ்வரூப ஞானம் என்று பெயர் இதற்கு.

தேகமே ஆத்மா என்று நினைத்துக்

கொண்டிருந்தால் அது உண்மையில்லை.

யாராவது பேசுகிறபோது நன்கு கவனித்துப் பாருங்கள்.... தேகமே ஆத்மா என்றால் என்ன சொல்ல வேண்டும்...?

நான் தலை வலிக்கிறது!

நான் மூக்கு குடைகிறது!

நான் காது, நான் வாய், நான் கண்!

ஆனால் இப்படி யாராவது சொல்கிறார்களா....?

'என்னுடைய கை வலிக்கிறது; என்னுடைய கண் வலிக்கிறது; என் தலை வலிக்கிறது... தாளவே முடியவில்லை' என்கிறார் அவர்.

இப்படிச் சொல்கிறபோது என்ன ஏற்படுகிறது...? சரீரத்தைக் காட்டிலும் பின்னமான வேறானது ஆத்மா. சரீரத்திலே நாம் மமதா புத்தியை (என்னுடைய என்ற பற்றை) வைத்துக் கொண்டு, 'இது என்னுடையது; என்னுடையது' என்று பேசிக் கொண்டிருக்கிறோம். ஆத்ம ஞானம் நமக்குக் கை வராவிட்டாலும், மமகாரத்தைப் புகுத்தி 'என்னுடையது' என்று நாம் பேசுவதனாலேயே, ஆத்மா வேறு, சரீரம் வேறு என்ற ஞானம் நமக்கு ஏற்பட வேண்டும்.

நன்றாகச் சாப்பிட வேண்டும்; தூங்க வேண்டும் என்பது லோகாயதம். மீதி பிராணிகளெல்லாம் இதைத்தான் பண்ணுகின்றன. ஆனால் சாஸ்திரம் இதை மட்டும் பண்ணு என்று நம்மைச் சொல்லவில்லை. நம் அறிவுக்கு எட்டாத எம்பெருமான் பிரபாவத்தை, நம்முடைய தன்மையை, ஒவ்வொரு உபநிஷத்தும் அழகாக எடுத்துக் காட்டுகிறது.

இதை நாம் உணராமல் போய்விடுவோமேயானால், இந்த வாழ்வே வீணாகப் போய்விடும். மறுபடியும் இந்த மாதிரி வாழ்வு நமக்குக் கிடைக்குமா? ஆகவே ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இத்தனை நாளாக அஞ்ஞானிகளாக இருந்துவிட்டாலும் பாதகமில்லை, இனிமேலாவது உணர வேண்டும். ஆத்ம ஞானம் கை வர வேண்டும். 'நான் யார்' என்பதை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். அஹம் ஆத்மா! ந தேஹோஸ்மி - நான் என்பது ஆத்மா; நான் என்பது தேகம் அல்ல... என்கிற ஞானம் ஏற்பட வேண்டும்.

சரி, பகவானைக் குறித்துத் தெரிந்து கொண்டோம். நாம் யாரென்றும் தெரிந்து கொண்டோம். இப்போது பகவானைப் போய் அடைய வேண்டுமல்லவா...? அதற்கான வழி என்ன என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

பக்தி, பிரபத்தி - இவை இரண்டும் உபாயங்கள். பக்தியையும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். சரணாகதி என்றால் என்ன என்கிற ஞானமும் நமக்கு ஏற்பட வேண்டுமல்லவா! இதைத்தான் ஆசார்யர்கள் விசேஷமாக பகவானிடத்திலே செலுத்தும்படி நம்மை வழிகாட்டிச் செய்ய வைக்கிறார்கள்.

சரணாகதி என்பது எத்தனை விசேஷமாக, வித்தியாசங்களோடு அமைந்திருக்கிறது! நான்கு விதமாகச் சொல்லியிருக்கிறது சரணாகதி நிஷ்டைகளை... விவரமாக விளக்குகிறேன்.

(வளரும்)


எம்பிரான் புண்ணியம்!



தக் கவசத்தில் சின்ன கேஸ் சிலிண்டர் இருக்கிறது. தப்பித்தவறி, விபத்து ஏற்பட்டு, வாகன ஓட்டி தூக்கி எறியப்பட்டாலும், இந்த கேஸ் சிலிண்டரின் மூடி தானே திறந்து கொண்டு, உடனே ரப்பர் கவசத்தில் ஒரு வித வாயுவை நிரப்பி உப்பச் செய்து விடுகிறது. இதனால் எக்பார்க்கா' கவசமணிந்த வண்டி ஓட்டி, ரப்பர் பந்து போல குதித்து எழுவாரே தவிர, எலும்பு முறியாது. அடிபடாது.

— ஆர். லலிதா

பெ.நாயகி



தனி வீடு. சுற்றிலும் தோட்டம் போட வசதியாகச் சுற்றுச் சுவருக்கும் வீட்டுக்கும் நடுவே கொஞ்சம் திறந்தவெளி, ஒரு கிணற்றுடன். ஏற்கெனவே ஒரு வேப்ப மரம், தென்னைமரம் மற்றும் மாமரம் ஆகியவை இருந்தன. சில வகை குரோட்டன்ஸ்களும்கூட இருந்தன. அருமையான காற்று. ஆழ்ந்து சுவாசித்து நெஞ்சு நிரப்பி மகிழ்ந்தேன். நாளை முதல் தியானம் செய்ய ஆரம்பிக்கலாம். வாழ்க்கையின் போக்கினையே மாற்றிவிட முடியும் என்று நம்பினேன். தோட்டத்தை ஒழுங்கு செய்து இன்னும் பயனுள்ள செடி கொடிகள் வளர்த்தால், வீட்டையே ஃபார்ம் ஹவுஸாக்கிவிடலாம் என்று தோன்றியது.

வந்த அன்றே ராம்சரண் கம்பெனி எம்.டி. ரஞ்சேக்கர் செல்ஃபோனில் பிடித்தார். "சாரி சார்! உங்க ஃபேர்வெல்லுக்கு வரமுடியாமல் போயிடுச்சு. நான் லண்டன்ல இருந்தேன். என் பையனை அனுப்பியிருந்தேன்" என்று சம்பிரதாயமான மரியாதையுடன் பேசினார்.

"நீங்க பேசாமல் எங்க கம்பெனில சேர்ந்திருக்கலாம். உங்களுக்காகவே பிளானிங் செக்ஷன் தலைமைப் பொறுப்பை காலியாக வைத்திருக்கிறேன். பிடிவாதமாக ஓய்வெடுக்கப் போறதா சொல்லிட்டுப் போயிட்டீங்கன்னு சொன்னாங்க. எனக்கு இன்னும் நம்பிக்கை இருக்கு. உங்க நல்ல பதிலுக்காகக் காத்திருக்கிறேன்" என்றார் தொடர்ந்து.

அவருக்கு நன்றி சொன்னேன். என்னுடைய திட்டங்களைச் சொல்லி அவருடைய அழைப்பினை நாசூக்காக மறுதலித்தேன். அவர் மட்டுமல்ல, பிரவுபசார விழாவில்கூட ஆளாளுக்கு என் முடிவை விமரிசித்தார்கள். இத்தகைய உயர் பதவியில் இவ்வளவு காலம் இருந்துவிட்டு, அந்த

நாற்காலி செல்வம்!

அனுபவங்கள் சகலத்தையும் விட்டுவிட்டு, நான் தனிமையை நாடிச் செல்லக் கூடாது என்றும் குறைந்த பட்சம் ஒரு கன்ஸல் டன்ஸியாவது தொடங்கி, அடுத்த தலை முறைக்கு வழிகாட்டும் அறிவுரைகள் வழங்கியபடி பணியில் நீடிக்க வேண்டும், என்றெல்லாம் பேசிக் குளிர வைத்தார்கள்.

ஆனால் நான் என் முடிவில் உறுதியாக இருந்தேன்.

சின்ன வேலைகளில் குறைந்த சம்பளத் தோடு ஓய்வு பெறுகிறவர்கள்கூட, நிறை வோடு, அழகாகப் பதவி ஓய்வு வாழ்க் கையை அனுபவிக்கிறார்கள். ஜிஎம், டெபுடி டிரெக்டர், டிரெக்டர் மாதிரி பெரிய பதவிகளில் இருந்து போகிறவர் கள், ஓரிரு மாதங்கள் கூட வீட்டில் கிடப்ப தில்லை. ஏதாவது தனியார் நிறுவனங் களில் நுழைந்து விடுகிறார்கள். அதில் பல பேருக்கு அவங்க தகுதிக்கு ஏற்ற பதவிகள் கூடக் கிடைக்கற தில்லை. எப்படித் தான் சமரசம் பண்ணிக் கறாங்களோ! நான் அந்த ரகமில்லை என்பதை நிரூபித்தே ஆக வேண்டும்.

"நம்முடைய கம்பெனியின் கிளைகளே இல்லாத ஓரிடத்தில் தனியாக வீடொன்று பிடித்து, நானும் என் மனைவியும் மட்டும் எங்களே எங்களுக்காக வாழப் போகிறோம்" என்றேன் உறுதியாக.

அப்படித்தான் இந்த ஊருக்கே வந்து சேர்ந்தோம் நானும் என் மனைவியும். இரண்டு பிள்ளைகளில் மூத்தது பெண். கல்யாணமாகி கல்கத்தாவில் இருக்கிறாள். பையன் பாங்க் ஆஃபீஸராக சென்னையில் வாசம். எங்களுடன் வந்து விடுங்கள் என்கிற அவர்களின் வேண்டுகோள்களை அன் புடன் புறந்தள்ளி ஊருக்கு ஒதுக்குப் புறமாக வந்துவிட்டோம்.

சாமான் பார்ஸல்களைப் பிரித்து ஒழுங்குபடுத்தி, வீடு ஒரு ரூபத்துக்கு வர மகனும் மருமகளும் வந்து நின்று உதவினார்கள். ஒரு வாரம் உட னிருந்து விட்டு என்னையும் மனைவியையும் தனிக்குடித்தனம் வைத்தது போல் வைத்துவிட்டுக் கிளம்பினார்கள்.

இந்த ஊரில் செல்ஃபோனுக் கான சிக்னல் விட்டுவிட்டுத்தான் கிடைக்கிறது. இன்னும் டெலி ஃபோன் கனெக்ஷன் கிடைக்க வில்லை. அலைய வேண்டும். போக லாம். இனிமேல் என்ன, நேரமோ நேரம்தானே!

கல்லூரி நாட்களில் நன்றாக ஓவியங்கள் வரைவேன் நான். அப்புறம் விட்டுப் போச்சு. அதனை மீண்டும் பழகிப் பார்க்க வேண்டும். தொடர்பு விட்டுப் போனதால் தூரிகையை என் மனவாகுக்கு ஏற்ப, கைகள் இழுத்துச் செல்லுமா தெரிய வில்லை.

நேரமிருக்கிறதே, முயற்சித்துப் பார்க்கலாம். மனைவிக்கு ஓய்வு கொடுத்து அவ்வப்போது சமையலும் செய்ய வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அவளிடம் நிறையப் பேச வேண்டும். கடந்த இருபது வருடங் களில், மனம் விட்டு சொந்த விஷயங் கள் எதையும் அவளிடம் பேச வில்லை; அவளையும் பேசவிட்டுக் கேட்டதில்லை. அந்த இடை வெளியை நிரப்ப வேண்டும்.

திட்டங்கள்... திட்டங்கள்...

புதிய உலக வாழ்க்கை முறைக்கு ஒத்துப் போதல் என்கிற பரீட்சைக்கு என்னுடைய தன்முனைப்பின் ஒத்துழைப்பு எந்த அளவுக்குக் கிடைக்கும், என்பது குறித்த பயம் மனமூலையில் எழுந்தது. அலட்சியப் படுத்தினேன்.

மறுநாள் காரை எடுத்துக் கொண்டு டவுன் எல்லையைத் தாண்டி நர்ஸரி இருக்கும் கிராமப் பகுதிக்குச் சென்று திரும்பிய போதுதான் அது நிகழ்ந்து.

கார் திடீரென்று முன்பக்கம் சமநிலை இழந்து ஆட்டம் கொடுக்க எனக்குத் தெரிந்துவிட்டது, இடது பக்க டயர் பங்க்சர் என்று. உடனடியாக ஓரம் கட்டி இன்ஜினை நிறுத்தினேன்.

அப்புறம்?

அப்படியே சில விநாடிகள் உட்கார்ந்து விட்டேன். காரின் கண்ணாடியை இறக்க, முகூர்த்த நாளில் பேருந்து நிலையத்துக்குள் நுழையும் பேருந்தின் படிகளின் வழியே, இருப்பவரை இறங்கவிடாமல் உள்ளே பாயும் பிரயாணியாக உள்ளே பாய்ந்த சூடான காற்று இதுவரையில் இருந்த உள் குளிர்ச்சியை விரட்ட, என் நெற்றியில் அப் போதே வியர்வைப் பூக்களின் அணிவகுப்பு.

கதவைத் திறந்து இறங்கினேன். சுற்று முற்றும் யாருமே இல்லை. திடீரென்று இந்த உலகத்தில் எல்லோரும் எங்கோ ஒளிந்து கொண்டது போல் தனிமை. காரை ஒருமுறை சுற்றிவந்தேன்.

ஒரு ஸ்டெப்னி மாற்றிவிட முடியாதா? எத்தனை சினிமாக்களில் பார்த்திருக்கிறேன்.

பின்பக்கமாக வந்து டிக்கியைத் திறந்தேன்.

தடுப்பு விரிப்புகளை விலக்கி டயர் இருப்பதை உறுதி செய்துகொண்டேன். அதனை வெளியே எடுப்பதற்கே நான்கு நட்டுகளைக் கழற்ற வேண்டும் என்பது அப்போதுதான் தெரிந்தது. அதற்கான ஸ்பானர்களைத் தேடி எடுப்பதற்குள் எனக் குப் பாதி மூடுபோய்விட்டது. ஜாக்கியை வெளியே எடுத்து அதை இயக்கும் கம்பி யைத் தேடிக் களைத்து...

ஜாக்கியை எங்கே வைத்து இயக்குவது என்பதற்கான இடம் தேடக் குனிய வேண்டி இருந்தது. தொப்பை தடுத்தது. கிட்டத்தட்ட படுத்துப் பார்க்க வேண்டியிருந்தது. சட்டையில் மண் ஒட்டியது. அது உயிரைத் தைத்தது.

ராஜரத்னம்! இது உன் வேலையா? நீ இருந்த இருப்பென்ன, அழைப்புமணியை அழுத்திய மாத்திரத்தில் அலாவுதீன் பூதமாக உன் ஏவல்களை நிறைவேற்ற ஆட்கள் அணிவகுத்த நாட்களென்ன? வீட்டில் தண்ணீர் வரவில்லையா? மின் சப்ளையில் பிரச்னையா? கேஸ் கட்டாகிவிட்டதா? ப்யூன் பார்த்துக் கொள்வான்; காய்கறி வாங் கித் தர பியூன்; ரேஷன் கார்டு, எலெக்ஷன் கார்டு, கூடுதல் தொலைபேசி கனெக்ஷன், பிள்ளைகளுக்கு டிரைவிங் லைசென்ஸ், அவர்களுக்கான கல்லூரி அட்மிஷன்கள் எல்லாமே பியூன்களே செய்து விட்டார்கள். பெண்ணின் கல்யாணம் உள்ளிட்ட வீட்டு விசேஷங்களை, காண்டிராக்டர்களின் பட் டாளங்கள் கவனித்துக் கொண்டார்கள்.

நான் என்னதான் செய்தேன்? கம்பெனி யின் சிறந்த ஜெனரல் மானேஜர் என்று பாராட்டப் பெற்றேன். தன் சொந்த வேலை களைக் கூடக் கண்டு கொள்ளாமல், கம் பெனி சிந்தனையுடனேயே இருப்பவன் என்று போட்டி மானேஜர்களால் கூட ஒப்புக் கொள்ளப்பட்டேன். அவார்டுகள் வாங்கிக் குவித்தேன்.

அவைகள் வெற்றிகளா, இயலாமைகளை மறக்கடித்த போதை வஸ்துகளா?

கம்பியைச் சுழற்றச் சுழற்ற, கார் ஜிவ்

"அட பாவமே... நல்லா உழைக்கிற தொண்டனாகிய உன்னை ஏன் கட்சியை விட்டு விலக்கிட்டாங்க...?"

"நல்லது பண்றதா நினைச்சு, 'தலை மைச் செயலாளர் பதவியேற்று வெற்றிகர மான 40 நாள்'ன்னு போஸ்டர் ஒட் டிட்டேன்!"

- புளியரை கணேசன்



ஜிவ்வென உயர்ந்தபோது வியர்வையை மீறிக் கொஞ்சம் சந்தோஷமாகவும் இருந்தது. பலமுறை இத்தகைய காட்சிகளை சினிமாவில் பார்க்கும் போதெல்லாம் அவ்வளவு எளிதாகச் சுழற்ற, எப்படி கனமான பொருள் மேலே எழுகிறது என்று முயற்சித்துப் பார்க்கும் ஆசை, படித்த படிப்பையும் மீறி எழுவதுண்டு, பேருந்துகளிலும் ஆட்டோவிலும் இருக்கும் ரப்பர் முண்டு ஹார்னை அமுக்கிப் பார்க்கும் ஆசை போல்.

அது இப்படியா நிறைவேற வேண்டும்?

அறுபது வயதுக்கு இது அதிகப்படி வேலை என்று பட்டது. ஒருமுறை பரோடாவில் அவசர மீட்டிங் என்று அகமதாபாத்திலிருந்து அலுவலகக் காரில் சென்று கொண்டிருக்கும்போது வழியில் பங்ச்சராகிவிட்டது. சரியாக எட்டு நிமிடங்களில் ஸ்டெப்னி மாற்றி வண்டியை எடுத்தான் டிரைவர். அந்த எட்டு நிமிடங்களுக்குள் என்னிடமிருந்து அவனுக்குக் கிட்டத்தட்ட லட்சார்ச்சனையே நடந்தது இப்போது நினைவு வந்தது. அவன் மெதுவாகச் செய்வதுபோல் எனக்குத் தோன்றியது அப்போது. அவன் அன்று சாபம் விட்டிருப்பான்.

மூச்சு மூட்ட காரின் டயரை மாற்றி வீட்டுக்கு ஓட்டி வரும் வழியிலேயே தீர்மானித்து விட்டேன். மறுநாள் முதல் வேலையாக ரஞ்சேக்கருக்கு ஃபோன் செய்தேன்.

என் குரல் கேட்ட மாத்திரத்தில் பரிச்சயம் கண்டு உற்சாகமாகப் பேசினார்.

அடுத்த வாரம்.

ராம்சரண் கம்பெனியின் பிரம்மாண்டமான அலுவலகத்தின் மூன்றாவது மாடியில், பச்சைக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்த, குளிரூட்டப்பட்ட வராந்தா வழியாக ரஞ்சேக்கர் என்னைக் கைப்பிடித்தபடி அழைத்துச் சென்று பித்தளைத் தகட்டில் ஜொலிப்புடன் என் பெயர் மின்னிய அறையினுள் நுழைந்து, பெரிய மேசைக்குப் பின் இருந்த நாற்காலியில் உட்கார வைத்து, சம்பிரதாயமாகக் கைதட்டினார். கூடவே வந்திருந்த டைரக்டர்களும் கைகளைத் தட்ட கம்பீரமாக உணர்ந்தேன். எதிரே இருந்த சுவரில் 'உங்கள் குடும்பங்களை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்; கம்பெனி நலனை நீங்கள் கவனியுங்கள்'



''சிக்கனமாக குடும்பம் நடத்தச் சொல்லி நீதானேம்மா அறிவுரை சொல்லியிருந்தே!''

''அதுக்காக உன்னைப் பார்த்துட்டுப் போக வந்த எனக்கு இந்த டம்ளரில்தான் காப்பி தரணுமா?''

- உ. ராஜாஜி

என்கிற ஆங்கில வாசகம் கம்பெனியின் குறிக்கோளாக மிளிர்ந்தது.

நாற்காலி செல்லமாக அசைந்து கொடுத்தது. திடீரென்று என்னுடைய கால்கள் இரண்டும் இல்லாத மாதிரியான உணர்வு ஏன் என்னை வந்து தாக்கியது என்று தெரியவில்லை. குனிந்து நோக்க, அது சக்கர நாற்காலியாகத் தோற்றமளிப்பதான பிரமை. என்னுடைய இயலாமைகள் என் முன்னே விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கின. என்னுடைய எல்லாத் தேவைகளையும் இது நாள் வரை நிறைவேற்றித் தந்த அலுவலகப் பியூன்கள் என்னுடைய ஏவலாட்கள் அல்ல, அவர்கள்தான் என்னுடைய நாற்காலியின் உண்மையான சக்கரங்கள் என்பது தெரிய வர, உள்ளூர அவமானமாக இருந்தது. நான் கால்களை மறந்து போனவனா, கால்கள் மரத்துப் போனவனா, கால்களே இல்லாதவனா என்பது பற்றிய பட்டிமன்றத்தின் முடிவை எதிர்நோக்கும் தைரியமின்றி, கவனம் திருப்ப விழைந்து அழைப்பு மணியை அழுத்தினேன்.

கதவைத் திறந்து உள்ளே நுழைந்த புதியவன் ஒருவன், "என் பெயர் முகேஷ். ஐ'ம் அட் யுவர் சர்வீஸ். மேடம் உதவிக்கு ஏற்கெனவே முருகன்னு ஒருத்தனை அனுப்பி இருக்கிறேன்," என்று பணிந்து நின்றான்.

புதிய சக்கரங்கள்!



கண் சிமிட்டும் வாசம்!

கைக் குட்டையை ஓர் உதறு உதறி, அதன் நடுவே டால்கம் பவுடரைக் கொட்டி, நான்காய் மடித்து, தேவைப்படும்போது, மணமணக்கப் பூசிக் கொள்ளும் கற்கால மனிதர்கள் யாரேனும் இருந்தால், தயை செய்து சென்னை, இஸ்பஹானி சென்டரில் உள்ள 'ஆக்ஸென்ட்ஸ்' என்ற கடைக்குப் போய்விடாதீர்கள். நிச்சயம் வெட்கமாய்ப் போய்விடும்.

அங்கே, ஒரு கடை முழுக்க சென்ட், பர்ஃப்யூம், டியோடரண்ட், பாடி ஸ்ப்ரே, ஷாம்பூ, ஃபேஸ்வாஷ், பாடி ஸ்பிளாஷ், ஹேண்ட் வாஷ், பாத் சோப், பாத் பபிள்ஸ், என கமகம சமாசாரம் தவிர வேறொன்றுமில்லை பராபரமே!

இப்படி வாசனைத் திரவியங்கள் மட்டுமே பிரத்யேகமாகக் கிடைக்கும் ப்ரீமியம் பர்ஃப்யூம் பொட்டிக் இந்தியாவிலேயே மும்பையில் மட்டுமே இருந்தது. இப்போது தமிழக தலைநருக்கு வந்தே விட்டது!

ஒய்.எஸ்.எல், அடிடாஸ், சேனல், போலீஸ், நீனா ரிக்கி, ஆல்ஃபிரட் டன்ஹில், எலிஸபெத் ஆர்டன் என நாற்பதுக்கும் மேற்பட்ட ஓர்ர்ர்ஜினல் பிராண்டுகள் விற்கப் படுவதால் சதா சர்வகாலமும் இளவட்டக் கூட்டம் திமிதிமி என்று மொய்க்கிறது.

"மேலுக்குப் பூசிக்கிட்டா வாசனையா இருக்குங்கிற அழுகுக் கொள்கை எல்லாம் மலையேறிடுச்சு. இப்ப மேற்கத்திய பாணியிலே, மூடுக்கு ஏற்ப நறுமணப் பொருட்கள் பயன்படுத்தும் மோகம் இங்கேயும் வந்திருக்கு. காதலுக்கு, பரிசுக்கு, பார்ட்டிக்கு, தன்னம்பிக்கைக்கு, மன மகிழ்ச்சிக்கு என ஏகப்பட்டது இருப்பதால், விற்பனைக்குப் பஞ்சமில்லை" என்கிறார் உரிமையாளர் ரிஷி அகர்வால்.

— டாலி

படம்: ஸ்ரீஹரி



மிகப் பெரிய தனியார் வங்கியின் வைஸ்-பிரசிடெண்ட் கணபதிராமன். தலைமைப் பொறுப்பில் இருப்பதால், கிழே பணி செய்யும் அதிகாரிகளுக்கு ஊக்கம் தந்து, உற்சாகம் ஊட்டி, தட்டிக் கொடுத்து, அவர்களைச் சாதனைகள் புரிய வைக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு உண்டு.

"ஒரெஸ்ட்காம் நிறுவனத்தைச் சேர்ந்த லட்சுமி கீர்த்தி வாசன் எங்களைத் தொடர்பு கொண்டு, 'சாதனை புரிய வேண்டியவர்களுக்கு எங்கள் நிறுவனம் தனிப் பயிற்சி அளிக்கிறது' என்றபோது, அதில் சேர்ந்து பயிற்சி எடுத்துக் கொண்டேன். ரியலி குட். அவர்கள் கற்பிக்கும் விதம், நம் சிந்தனையைத் தூண்டி விடுகிறது. வித்தியாசமாகச் செய்து காட்ட வேண்டும் என்ற துடிப்பை நமக்குள் ஏற்படுத்துகிறது. சுய கட்டுப்பாடு எவ்வளவு அவசியம் என்று சிந்திக்க வைக்கிறது. இரண்டு தலைப்புக்களில் வகுப்பை நடத்துகிறார்கள். 1. உங்கள் செயல் திட்டம் என்ன? 2. அதை எப்படி வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவீர்கள்? இதில் லீடர்ஷிப் தகுதிகள் அலசப்படுகின்றன. ஈகோ பிரச்னைக்கு முடிவு கட்டப்படுகிறது. தெளிவாகப் பேச, புரிந்து கொள்ள எல்லாவற்றுக்கும் அருமையான பயிற்சிகள். மொத்தத்தில், வெற்றிப் படிகளில் ஏற வைக்கும் பயிற்சி."

மிகப் பிரபலமான நிதி நிறுவனத்தில் ஜிஎம்.ஆக இருக்கிறார் மணிவண்ணன்.

"மிகவும் பயன் தரும் பயிற்சி. தலைப்புகள் எல்லாம் பிரமாதம். வாழ்க்கைக்கும், செய்கிற பணிக்கும் வெகுவாக உபயோகப்படும் வீடியோ பிரசன்டேஷன். நிறுவனத்தின் தலைவர் நரேஷ், இந்திய வர்த்தக - நிர்வாகச் சூழ்நிலையை நன்றாக மனத்தில் கொண்டு பயிற்சிகளை அமைத்திருக்கிறார். எல்லாமே முக்கியமானவை. எங்கள் நிறுவனத்தின் பல கிளைகளில் இருந்தும் எண்பது பேர் பயிற்சிக்குச் சேர்ந்தோம். இருபது பேர் கொண்ட நான்கு குழுக்களாகப் பிரித்துத்தான் பயிற்சி அளித்தார்கள். இதில் என்ன விசேஷம் என்றால், பயிற்சி எடுத்தவர், பிறருக்குப் பயிற்சி கொடுப்பவராக



• லட்சுமி கீர்த்திவாசன்


உயர்த்துகிறார்கள்!

மாறிவிடுவார். அப்புறம் என்ன? நிறுவனத்தில் ஒருவர் பயிற்சி எடுத்துக் கொண்டாலும், பிற ஊழியர்களுக்கு அவரே பயிற்சி அளித்து விடுவார் இல்லையா? ஒரு விதத்தில் பார்த்தால், இது நிறுவனத்துக்கு லாபம்தானே?" என்கிறார்.

உலகின் மிகப் பிரபல கம்ப்யூட்டர் நிறுவனத்தில் உயர் பதவி வகிக்கும் வித்யா முரளியும் இதே கருத்துக்களையே சொன்னார்.

யார் இந்த கிரெஸ்ட்காம்?

ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் உலகில் மிகப் பெரிய நிறுவனம். இவர்களுடைய வாடிக்கையாளர் பட்டியலில் அபாட் லேபராடரீஸ் என்று அகர வரிசையில் ஆரம்பித்தால், ஒய்.எம்.சி.ஏ., யார்க் இன்டர்நேஷனல் வரை, உலகின் மிகப் பெரிய நிறுவனங்கள் எல்லாமே இருக்கின்றன. இவர்களின் நோக்கமே 'புல்லட்-ப்ரூஃப்' நிர்வாகிகளைத் தயார் செய்வதுதான். உலகத்தரம் வாய்ந்த சாதனையாளர்களைத் தயார் செய்தால், நிறுவனத்துக்கு லாபம்தானே?



• பயிற்சி வகுப்பு

சென்னையில் இந்த நிறுவனத்தின் அதிகாரிகளில் ஒருவர் லட்சுமி கீர்த்தி வாசன். அவரைச் சந்தித்தோம்.

லட்சுமி, முன்னாள் பெண்கள் கிரிக்கெட் அணி ஆட்டக்காரர். சாந்தா ரங்கசாமி, சுதா ஷா இருவர் தலைமையிலும் கிரிக்கெட் ஆடியிருக்கிறார்.

"நான் வீட்டிலேயே கொஞ்சம் துணிச்சல்காரி. அதனால் எதற்கும் பயந்ததில்லை. அப்பா சிம்ப்சனில் நல்ல வேலையில் இருந்தார். சேமித்து வைக்காவிட்டாலும், எங்கள் எல்லோரையும் நன்றாகப் படிக்க வைத்தார். என் சகோதர - சகோதரிகள் எல்லாருமே அமெரிக்காவில் இருக்கிறார்கள். அப்பா சுயமாக உழைத்து முன்னேறியவர். அதனால் அவர் குழந்தைகளான நாங்களும் அவரையே ரோல் - மாடலாக வைத்துக் கொண்டோம். அவருடைய எழுபத்தைந்தாவது பிறந்த நாளின் போது எல்லோரும் சந்தித்துக் கொண்டோம். என்னுடைய இரண்டாவது ரோல் மாடல் என் சகோதரி ஹேமலதா மோகன். வைசியா வங்கியில் வைஸ்-பிரசிடென்ட். 'மேலே இருக்கிறவர்களைப் பார்த்து முன்னேறணும்' என்பாள் எப்போதும். மூன்றாவது என் அம்மா. ரொம்ப தைரியசாலி. திட மனசு. வரவுக்குள் செலவை அடக்கத் தெரிந்தவர்.

"கல்லூரியில் படிக்கும்போது இன்டர்-ஸ்டேட் விக்கட் கீப்பராக பரிசுகூட வாங்கியிருக்கிறேன். ஆனால் ஒரு மாட்சின் போது, பந்து தாக்கி, முன்பற்கள் இரண்டும் விழுந்தன! அப்புறம், 'கிரிக்கெட் விளையாடினது போதும்' என்று அப்பா தடுத்துவிட்டார். அடுத்ததாக என்ன செய்வது?

"வேலைக்குப் போக வேண்டும். என் சிநேகிதி ஐசுவர்யா, 'ஒரு நிறுவனத்தில் வேலைக்கு மனு போடப் போகிறேன்' என்றாள். என்னையும் போடத் தூண்டினாள். போட்டேன். எனக்கு வேலை கிடைத்தது. ஆனால் பாவம், அவளுக்குக் கிடைக்கவில்லை. அதுதான் நான் மிக சந்தோஷமாக வேலை செய்த காலம். அருமையான அலுவலக நண்பர்கள். அலுவலக நிர்வாக விஷயங்கள் அத்தனையும்



* குழு விவாதத்தில்...

சுற்றுக் கொண்டேன்.

"86ல் திருமணம் ஆயிற்று. உறவினர். விளம்பரத் துறையில் எக்ஸிக்யூடிவ் ஆக இருந்தார். நானும் முதல் நிறுவனத்திலிருந்து சோழா ஷெராட்டன், ப்ளூ ஜாகர்ஸ் என்று வெவ்வேறு நிறுவனங்களில் வெவ்வேறு பதவிகளை வகித்தேன். 90'ல் குழந்தை பிறந்தாள். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக, கணவர் காலமானார். எல்லோரும் 'அவ்வளவுதான் நீ!' என்று ஒதுக்கி வைக்கிற மாதிரி பேசியபோது, என்னை யாரோ உசுப்பிவிடுகிற மாதிரி இருந்தது. கணவரை இழந்துவிட்டோம் என்பதற்காக ஒய்ந்து சாய்ந்து போய் விடுவதா, என்று மனசைத் திடப்படுத்திக் கொண்டேன்.

"கிரெஸ்ட்காம் நிறுவனம் பற்றிக் கேள்விப்பட்டு அதில் பயிற்சி எடுத்துக் கொண்டேன். இந்தியாவில் அதன் பிரதிநிதியாகச் செயல்பட ஒப்பந்தம் செய்து கொண்டேன். பன்னிரண்டு மாதப் பயிற்சி என்றாலும்கூட, மாதத்தில் ஒரு நாள் தான் வகுப்புக்கு வர வேண்டும். எழுபது சதவிகிதம் பிராக்டிகல் அப்ளிகேஷன். ஐந்து சதவிகிதம் செயல் திட்டம். இருபத்தைந்து சதவிகிதம் வீடியோ பிரசண்டேஷன்.

"கிரெஸ்ட்காம் 53 நாடுகளில் செயல்படுகிறது. என்னுடைய வேலை எல்லாம், நிறுவனங்களோடு பேசி, அவர்களிடம் இந்தப் பயிற்சிகள் பற்றி எடுத்துச் சொல்லி, அவர்களுடைய அதிகாரிகளை இந்தப் பயிற்சிக்கு அனுப்புமாறு செய்வதுதான். ஹிந்து, சுந்தரம் ஃபைனான்ஸ், ஃபோர்டு மோட்டார்ஸ், போலாரிஸ், டிஎஸ்க்யூ, ரூட்ஸ், ப்ரிகாட், இன்ஃபோஸிஸ், ஐபிஎம் என்று அத்தனை கம்பெனிகளிலிருந்தும் உயர் அதிகாரிகளும், மேலதிகாரிகளும் கிரெஸ்ட்காமில், பயிற்சி பெற்று வருகிறார்கள். பயிற்சி முறைகள் மாறும் போதெல்லாம், நான் அமெரிக்காவுக்கு என் திறமையை உயர்த்திக் கொள்ளப் போய்விடுவேன். அங்கேயே, அவர்களுக்குக்கூட பயிற்சிகள் எடுத்திருக்கிறேன்!"

பயிற்சியின்போது மான்யுவல்கள் கொடுக்கிறார்கள். ரொம்பவே தியரி இல்லை. பிராக்டிகல்தான் அதிகம்.

"உங்களுக்கு ஏற்கெனவே தெரிந்ததுதான். ஆனால் இப்படிச் செய்து பாருங்களேன்!" என்று சொல்லிக் கொடுக்கிற நயமான உத்தி.

லீடர்ஷிப் பயிற்சி என்பது சாதாரண விஷயமல்ல. அதுவும் பயிற்சிக் கட்டணம் சற்றே உயர்வாக இருக்கும் இதுபோன்ற வகுப்புகளுக்கு, ஏற்கெனவே திறமையான ஊழியர்களைக் கொண்டிருக்கும் நிறுவனங்களில் போய், 'எங்கள் பயிற்சி முறை வித்தியாசமானது, வெற்றிக்கு வழி வகுக்கும் என்று நிரூபணமானது' என்று நிமிர்ந்து நின்று கூறும் திட மனசும் உறுதியும், லட்சுமி கீர்த்திவாசனிடம் இருக்கிறது.

சந்திப்பு : **சாருகேசி**

படம் : **வெங்கடேஷ்**

ஸ்ரீதேவி பேட்டி

கனவிலும் நினைவிலு[ம்] கார்ட்டூன்!



'காதல் வைரஸ்' கொண்டு, இளம் இதயங்களில் தாக்குதல் நடத்த வரும் தளிர்தேவதை ஸ்ரீதேவி, நமது சின்னச்சின்னக் கேள்விகளுக்குத் தந்த மின்னல் பதில்கள்.

பிடித்த திசை: 'நீ என்னவாக விரும்புறே'ன்னு முதல் வகுப்புலே டீச்சர் கேட்டபோது, 'சினிமா ஸ்டார்'ன்னு சொன்னேன். என் விருப்பம் நிறைவேறிடுச்சு. நடிப்புதான் எனக்குப் பிடிச்ச திசை.

முதல்வோட்டு: இன்னும் போடலே! வரும் தேர்தல்லே போடறதுக்கும் வயசு போதாது.

பிடித்த நடிப்பு: இங்கே ஸ்ரீதேவி, ரேவதி, சிம்ரன். ஹிந்தியில் கஜோல், நந்திதாதாஸ், கரீனா. ஹாலிவுட்டில் ஹெலன் ஹன்ட், பெனலோப் குருஸ் நடிப்பு பிடிக்கும்.

அறிமுகப் படம்: என்னோட வயசுக்கும், அனுபவத்துக்கும் சவால் விடுற மாதிரி முதல் படத்திலேயே நிறைய வாய்ப்பு அமைஞ்ச கதாபாத்திரம். 'காதல் வைரஸ்' படத்தில் நானும் ரிச்சர்டும் பல காட்சிகளில் போட்டி போட்டு நடிச்சிருக்கோம்.

விரட்டும் கனவு: கார்ட்டூன் சீரியலில் 'ஸ்கூபிடூ'ன்னா உயிர். ஸ்கூபி டூ டீமோடு நானும் சேர்ந்து பேய் வீடுகளுக்குப் போய் ஆவி சேஸிங்லே கலந்துகிறமாதிரி கனவு வரும். ஃபன்னி டெரர்!

போற்ற நினைக்கும் நட்பு: 'காதல் வைரஸ்' படக்குழுவில் இருக்கிற லைட் பாயிலிருந்து இயக்குனர் வரைக்கும் எல்லோரும் ஒரு குடும்பம் மாதிரி பழகிட்டோம். ஹாஸ்டல் வாழ்க்கை மாதிரி சந்தோஷமா இருந்தது. கடைசி நாள் படப்பிடிப்பில் கேக் வெட்டி, எல்லோரும் ஆட்டோகிராஃப் வாங்கி... 'ஃபேர்வெல்' சொல்லி அழுதுட்டோம். இந்த நட்பை, கடைசி வரைக்கும் பாதுகாக்கணும்.

தவிர்க்க நினைப்பது: கிசுகிசுக்களை. இயக்குனர் கதிர் எனக்கு குரு. அவரோடு என்னை இணைத்து எழுதியது மனத்தைப் புண்படுத்தியது. என்னைப் போல வளரும் நட்சத்திரங்களை ஊக்குவிக்காவிட்டாலும் பரவாயில்லை. இப்படிக் குதர்க்கமாய்ப் பேசாமலிருந்தாலே போதும்.

தவிக்க வைத்தது: 'காதல் வைரஸ்' படத்தில் எனது நடனத் திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்று தவித்தேன். ஆனால் படத்திற்கு டான்ஸ் மாஸ்டரே கிடையாது. ஒரு பாடலில் கூட கஷ்டமான நடன அசைவு கிடையாது. எல்லாப் பாடல்களும் மியூசிக் வீடியோ மாதிரி இருக்கும். தெலுங்கில் முதன் முதலாக நடித்த 'ஈஸ்வர்' படத்தில் வித்தியாசமாக நடனம் ஆடியிருக்கிறேன்.

முடித்த படங்கள்: தமிழில் காதல் வைரஸ், தெலுங்கில் இயக்குனர் ஜெயந்த் டைரக்ஷனில் 'ஈஸ்வர்'. பிரபல தெலுங்கு நடிகர் எம்.பி. கிருஷ்ணம் ராஜுவின் மகன் பிரபாஸ்தான் ஹீரோ.

நடிக்கும் படங்கள்: தமிழில் சூப்பர்குட் பிலிம்ஸ் தயாரிப்பில் ஆர்.பி. சௌத்ரியின் மகன் ஹீரோவாக அறிமுகமாகும் 'தித்திக்குதே' படத்திலும், ஏவி.எம். நிறுவனத்துக்காக விக்கிரமன் இயக்கும் 'ப்ரியமான தோழி' படத்திலும் மாதவன் ஜோடியாகவும், தெலுங்கில் ஜூனியர் என்.டி.ஆருடன் இணைந்தும் நடித்துக் கொண்டிருக்கிறேன்.

சந்திப்பு: **ஜெய்**




வட்டமேஜை

✉ "குழந்தைகள் ஆடப் போறா. குஞ்சம்மா பாடப் போறா" என்ற முத்திரை வரிகள் அன்றைய சுதந்திர தாகத்தையும், தமிழிசையின் எழுச்சியையும் கோடிட்டுக் காட்டுகின்றன.

எலந்தங்குடி,
கா.மு. ஜக்கரியா

✉ பாகிஸ்தானுக்கு எதிராகவும் இந்தியாவுக்கு ஆதரவாகவும் முன் வாசல் வழியே கர்ஜனை செய்துவிட்டு, புற வாசல் வழியே காயலாங்கடை வகையறா தளவாடங்களையும், ஆயுதங்களையும் விற்பனை செய்ய புதுஉ வியூகம் அமைப்பது வல்லரசு ஸ்டைல்!

நெல்லையப்பபுரம்,
டி.செல்வன்





✉ ஆனந்தியின் 'ஆடுவோமே. பாடுவோமே!' கட்டுரை, இனிய நினைவலைகளை நெஞ்சில் தேக்கி விட்டுச் சென்றது. பழைய புகைப் படங்கள் கட்டுரைக்கு மெருகூட்டின.

மொரட்டுப்பாளையம்
இரா.வி.சௌந்தர்யா

✉ உள் நாட்டில் நம்மைப் பயமுறுத்தி வரும் தீவிரவாதம், லஞ்ச பூதங்கள், வறுமைப் பேய், பொருளாதார சீர்கேடுகள் இவற்றுக்கு எதிராக போர் தொடுத்து அழிக்க முற்படாமல், 'பாகிஸ்தானுடன் யுத்தத்துக்கு நாங்கள் தயார்' என்று முழங்கியபடியே வல்லரசு நாடுகளின் பிரதிநிதிகளுடன் ஆயுத பேரம் பேசிக் கொண்டிருக்கும் துணைப் பிரதமரையும், ராணுவ அமைச்சரையும் தலையங்கத்தில் நன்றாகவே சாடியிருக்கிறீர்கள்!

திருச்சி,
கிரிஜா மணாளன்

ஊஞ்சல் உற்சாகம்!

✉ மனவளர்ச்சி குன்றியவர்களை, 'அதர்வைஸ் டேலண்டெட்' என டி.கே.ராமச்சந்திரன் குறிப்பிட்டது நெகிழச் செய்தது. இதே மனப் பக்குவம் மற்றவர்களுக்கும் வர வேண்டும்!

ஸ்ரீரங்கம்,
எஸ்.கௌரிலக்ஷ்மி



✉ ஆதரவற்றோர் இல்லத்திற்குக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அளித்த நன்கொடை விஷயம் குறித்து எழுப்பப்பட்ட வாசகரின் வினாவுக்கு 'அரசுச் செலவில் நடப்பதை நன்கொடையாக அளிப்பதில் அர்த்தமே இல்லை...' என்று சொன்ன தராசுவின் பதில் தீர்க்கமானது.

அனுப்பானடி,
பி.எல்.பரமசிவம்

✉ கேன்டீன் தொடர் பான குப்புடு ஸ்பெஷல் வெகு ருசி. அயிட்டங்கள் எல்லாமே ரொம்ப டேஸ்ட்!

சென்னை,
கே.என். பாலகிருஷ்ணன்

✉ குளுமையான நிழலில் ஊஞ்சல்கட்டி ஆடி மகிழ்ந்த உற்சாகத்தை அபரிமிதமாக அள்ளி வழங்கியது இலவ்ச் சிறப்பிதழ். பலே!

அருகந்தம்பூண்டி,
மலை அரசன்

வட்டமேஜை

கலைக்கோயில் 50!

ஆக்ராவுக்கு ஒரு தாஜ்மஹால் போல, எங்கள் மும்பைக்கு ஒரு சண்முகானந்தா. அது காதலுக்கோர் ஆலயம் என்றால் இது கலைக்கு ஒரு கோயில்! பொன் விழா காணும் இந்தப் பொன்னான நேரத்தில், கடந்து வந்த பாதையை உணர்ச்சிப் பெருக்குடன் திரும்பிப் பார்க்கின்றனர், அதன் இன்றைய பிரசிடெண்ட் சங்கர், பல காலம் இதன் செயலாளராக இருந்து இன்று அறங்காவலராகி இருக்கும் சேஷாத்ரி.

இன்று, 4842 சதுர கஜ பரப்பளவில், 328 டன் இரும்பையும், 27450 கோணி சிமெண்டையும் கொட்டி, ஏஸி ஜிலுஜிலுப்புடன் 3000 ரசிகர்களுக்கென நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ஆறடுக்கு மாளிகையில், துவக்கக் காலங்களில், தண்ணீர்த் தொட்டியில் டிரக்கு டிரக்காக ஐஸ்கட்டிகளை இறக்கி வெப்பத்தைக் குறைத்த நினைவுகளில் சுவை பட மலர்ந்தார் சேஷாத்ரி.

ஆகஸ்ட் 1963ல் விஜயலக்ஷ்மி பண்டிட் திறப்பு விழா செய்ய, கலை, அரசியல், ஆன்மிகம் என்ற வெவ்வேறு துறைகளில், பல இன மொழி மக்களால் இக் கலையரங்கு அடிக்கடி விழாக் கோலம் பூண்டது. கண்ணடி பட்டு 1990ல் கோரத் தீ விபத்தில் சாம்பலாகியது; 1998ல் மீண்டும் உயிர்த்தெழுந்தது புத்துணர்வுடன், புதிய வனப்புடன்.

இங்கே நிகழ்ச்சி அளித்தாலே ஜன்ம சாபல்யம் அடைந்து விட்டதாக நினைக்கும் கலைஞர்களின் மனோபாவம்தான் இச்சபையின் தனிச்சிறப்பு என்பதால், அவர்களின் உணர்வு பூர்வமான வெளிப்பாடுகளை அவர்களின் நிகழ்ச்சியுடன் இணைத்து, ஒரு டாகுமெண்ட்டரி தயாரித்திருக்கிறார்கள். விரைவில் அது சின்னத்திரையில் வலம் வரலாம்.



• ரிங்கி

• பொன்விழாப் பணியில்...



"நிகழ்ச்சிகளை அளிப்பது பெரிய விஷயமில்லை; பொன்விழா முற்றுப் பெற்ற பின்னும், மக்களுக்கு நிரந்தரப் பயனளிக்கக் கூடிய திட்டங்களைச் செயலாக்குவதே எங்கள் குறிக்கோள். அதன் முதல்படியாக, நுண்கலைகளுக்கு ஒரு கல்லூரி துவங்கி, அதை மும்பை யுனிவர்சிடியுடன் இணைத்துள்ளோம். அடுத்து, லலித கலைகள் தவிர, ஓவியம், சிற்பம் போன்றவற்றில், வளரும் கலைஞர்களுக்கு ஒரு மேடையளிக்க, 'ஆர்ட்



காலரி'யைத் துவக்கியுள்ளோம்'' என நலப்பணிகளை பட்டியலிட்டார்.

''எங்கள் மருத்துவ மையத்தில், டயாலிஸிஸ் யூனிட் ஒன்றைத் துவங்கி, 500 பேருக்கு, மிகக் குறைந்த செலவில் டயாலிஸிஸ் அளிக்க உள்ளோம். இதற்கென, அஹோபில மடத்தின் நாற்பத்தைந்தாவது ஜீயர் 10 லட்சம் நன்கொடை அளித்தார்'' என்று நன்றிப் பெருக்குடன் நினைவுகூர்ந்தவர், "பாருங்கள்... எங்கள் பணிகளில் துறவிகள் கூட அக்கறை காட்டுகின்றனர்" என்று பெருமிதப்பட்டார்.

பெருமிதத்தோடு ஆஸ்கார் வரை சென்ற இந்த அமீர் இப்படிச் செய்துட்டாரேங்க...

காஷ்மீர் பிரச்னையையே எதிர்கொண்டவருக்கு (அட படத்துலதாங்க..) வீட்டுப் பிரச்னையை சமாளிக்கத் தெரியவில்லையே? லகானில் இணைத் தயாரிப்பாளரான மனைவியை, இல்லறத்தில் கழட்டி விட்டுட்டாரே? 'பிரிந்தபின் மனமே துயரம் கொள்ளாதே.. சோகம் பொல்லாதே'ன்னு தேத்திக்க வேண்டியதுதான்!

தேத்திக்க வேண்டியதுதான்... ஒரு ஜோடி பிரிந்தால் ஒரு ஜோடி இணையுதே..! ஸ்வேதாவும் மகேஷ் பூபதியும் கோவாவைக் கலக்குவதைச் சொல்லவில்லை; அது ஏற்கெனவே இணைந்த ஜோடி... இது இணையப் போகிற ஜோடி! ராஜேஷ் கன்னா-டிம்பிளின் இளைய மகள் ரிங்கி, லண்டன் பிஸினஸ் மேனான ஸமீர்ஸரனுக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கிறார். அறிமுகப்படுத்தியது அபுஜானி, சந்தீப் கோஸ்லா ஜோடி. இவர்கள் டிரஸ்ஸைத்தான் டிசைன் பண்ணுவார்கள் என நினைத்தோம்... காதலையுமா...? ம்ம்... வாழட்டும் என வாழ்த்துவோம்.

வாழ்த்துக்களை வேண்டி நிற்கும் பிரிதொரு நட்சத்திரம், பாலிவுட் வானில் புதிதாக உதயமாகி இருக்கும் ரிதேஷ் தேஷ்முக் - அட, எங்க முதல்வர் விலாஸ்ராவ் தேஷ் முக்கோட பிள்ளை தாங்க! அவருடைய 'துஜே மேரி கஸம்' தயாராகிவிட்டது! மரத்தைச் சுற்றி ஆடிப் பாடி வித்தியாசமாக நடித்திருப்பதாகச் சொல்கிறார். 'என் அப்பா சி.எம் என்பதால் எனக்கு ரோல் கிடைக்கவில்லை; நான் நியூயார்க் நடிப்புப் பள்ளியில் பயின்றவனாக்கும்' என்று கதறுபவர் சொல்வதெல்லாம், 'என் அப்பா எனக்கு வெறும் ஃபாதர்; நாட் காட்ஃபாதர்!"

'**கா**ட் ஃபாதர்' ஆகக் கூடிய சான்ஸ் கிடைத்து. அதை மயிரிழையில் இழந்தவர் சல்மான்கான். தம்பி அர்பாஸ்கான், அவர் மனைவி மலைகா அரோராவுக்குப் பிறந்த அர்ஹானுக்கு, மைத்துனரையே காட்ஃபாதர் ஆக்க விழைந்தார் மலைகா! ஆனால் சல்மான் கிறிஸ்துவர் அல்லாத காரணத்தால் பாந்த்ரா சர்ச் நிராகரித்து விட்டது. கடைசியில் மலைகாவின் தங்கை அம்ரிதா காட்மதர் ஆகவும், டிசைனர் வெண்டல் ராட்ரிக்ஸ் காட் ஃபாதராகவும், ஞானஸ்னானம் அன்று நியமிக்கப்பட்டனர்.


"அதனால் என்ன? உணர்வு பூர்வமாக, என் மகனுக்கு சல்மான்தான் காட்ஃபாதர்' என்கிறார் மலைகா! யா அல்லா!

— ஜெய்ஸ்ரீ ராஜ்

புக் பேங்க்











ஒரு கனவின் கதை — சுதா மூர்த்தி

'இன்ஃபோசிஸ்' நிறுவனம் இன்று பிரம்மாண்டமாக வளர்ந்திருப்பதன் பின்னணிக் கதையை, சந்தித்த சோதனைகளை விளக்குகிறார் ஆசிரியர்.

(வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை — 17. விலை ரூ. 35.)

நாட்டு மருத்துவம் — முனைவர் ந. சந்திரன்

நாட்டுப்புற மக்களிடம் உள்ள பரம்பரை மருத்துவ அனுபவங்களையும், சிகிச்சை முறை பற்றியும் விளக்குகிறது இந்நூல். ஆசிரியரின் முயற்சி பாராட்டுக்குரியது.

(விஜயா பதிப்பகம், 20, ராஜவீதி, கோவை — 1, விலை ரூ. 80/-)

கருகமணி — காஸ்யபன்

சிறுகதைகள், எளிமையான வார்த்தைகளில் ஒவ்வொரு சிறுகதையும் புது அனுபவத்தைத் தருகிறது.

(பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான் கான் சாலை, ராயப்பேட்டை, சென்னை — 14, விலை ரூ. 30/-

பெண் படைப்பாளர்களின் புதினங்களில் பெண்ணியப் பார்வை — கோ. சரோஜா

பெண் எழுத்தாளர்களின் நாவல்களில் பெண்களின் நிலைமை எவ்வாறு காட்டப்பட்டுள்ளது என்பது பற்றிய பெண்ணியப் பார்வை ஆய்வுக் கட்டுரைகள்.

(ஸ்ரீ சக்கரம் வெளியீடு, 5, 20, தனலட்சுமி அபார்ட்மென்ட்ஸ், முதல் அவென்யூ, அசோக் நகர், சென்னை — 83. விலை ரூ. 55/-)

திண்ணைப் பேச்சு — மதுக்கூர் ராமலிங்கம்.

கிராமங்களில் வழங்கி வரும் நகைச்சுவைகளைக் கட்டுரையாக்கியிருக்கிறார் ஆசிரியர்.

(வைகை வெளியீடு, 6/16 புறவழிச் சாலை, மதுரை — 18. விலை ரூ. 15/-)

கந்தபுராணம் ஒரு பண்பாட்டுக் களஞ்சியம் — கலாநிதி நா. சுப்பிரமணியன்

கச்சியப்ப சிவாச்சாரியாரால் இயற்றப்பட்ட கந்தபுராணம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு.

(கலைஞன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தி. நகர், சென்னை — 17. விலை ரூ. 90/-)

ஏற்றுமதி இறக்குமதி தொழில் வேலை வாய்ப்பு — டாக்டர் எஸ். சத்தியமூர்த்தி

புதிய பொருளாதாரக் கொள்கையின் வெளிப்பாடாக ஏற்றமதி இறக்குமதி வளர்ச்சியடைந்துள்ள நிலையில், அது குறித்தான விவரங்களை இந்நூல் விளக்குகிறது.

(ராஜாமணி பதிப்பகம், 24, மணி நகரம், 3வது தெரு, அருப்புக்கோட்டை. விலை ரூ. 450/-)

— தம்பி






பாலகுமாரன்

வெறும் புல்பரப்பு. அங்கங்கே வேலிக் காத்தான் செடிகள். தென்கிழக்கே வேப்ப மரம். வடகிழக்கே கடம்ப மரம். கிழக்கில் ஒரு புளியங்கன்று. மேற்குப் பக்கம் சாலை இருந்தது. மேற்குப் பக்கம் வேறொரு நிலம் மேடாக இருந்தது. முன்பு மரங்கள் அதிகம் இருந்து, வனங்கள் அழியாமல் இருந்து, மாதம் மூன்றுமுறை மழை பெய்ததால், தேங்கிய தண்ணீரை இறைத்து பயிர் செய்ய முடிந்தது.

இப்போது அவ்விதம் செய்ய இயலாது. கிணறு போடலாம். காய்கறி பயிர் செய்யலாம். பூந்தோட்டம் அமைக்கலாம். மிகச் சிறந்த விஷயம் கீரை. அதிகம் பாடுபடாத வெறுமே நீர் இறைத்து களை பிடுங்கினால் போதும். அறுத்து கத்தை கட்டி வைத்துக் கொண்டிருந்தால், மினிவேன் வந்து வாரிக் கொண்டு போகும்.



"ஆஹா... இப்போ புரோஹிதம் மறந்து போயிடுத்தா? விவசாயியா மாறிட்டேளா? ரொம்ப சந்தோஷம்."

ரேவதி கேலி செய்தாள்.

"எதிர்காலம் பத்தி ஒரு தெளிவே இல்லையா உங்களுக்கு? ஏன் இப்படிக் குழம்பிக் குழம்பி யோசிக்கறேள்?"

கடிந்து கொண்டான்.

இந்த யோசனையைக் கேட்டதும் சங்கரய்யர் பாராட்டினார்.

"எனக்கு நீங்க என்ன சொல்றேள்னு புரியறது ராதாகிருஷ்ணன். நீங்க சொன்னதை நான் திரும்பிச் சொல்லட்டுமா? படப்பையில நிலம் வாங்கப் போறேள். நாலு ஏக்கரோ, அஞ்சு ஏக்கரோ, ஆறு ஏக்கரோ. தாம்பரத்துல வீடு வாடகைக்கு எடுக்கப் போறேள். குழந்தேளை அந்தப் பக்கத்துப் பள்ளிக்கூடத்துல சேர்த்து, அதுகள் படிக்கறவரைக்கும் தாம்பரத்துலேருந்து படப்பை நிலத்தைப் பார்த்துண்டு அல்லது வெறுமே மரம் நட்டு வளர்த்துண்டு மாசத்துக்கு ஒரு தடவை எட்டிப் பார்த்துட்டு வரப் போறேள். குழந்தை எட்டாவது படிக்கிறாளா. ப்ளஸ் டூ வரதுக்கு அஞ்சு வருஷம். காலேஜுக்கு மூணு வருஷம். கல்யாணத்துக்கு அதுக்கப்புறம் இரண்டு வருஷம், ஆக பத்து வருஷத்துல அந்த படப்பை நிலம் பெரிய விலை போகும். விக்கறதா இருந்தாலும் விக்கலாம். வீடு கட்டறதா இருந்தாலும் கட்டலாம். பாதியை விட்டுட்டு, பாதியில வீடு கட்டலாம் இல்லையா? பொண்ணைக் கல்யாணம் பண்ணி கொடுத்துட்டாக்க படப்பை என்ன, இன்னும் தள்ளி செங்கல்பட்டு தாண்டி மாமண்டூர் பக்கம் கூட இருந்துடலாம். நீங்க சரியா யோசனை பண்றேள்."

அவர் பாராட்ட நெஞ்சு நிமிர்த்தி ராதாகிருஷ்ணன் ரேவதியைப் பார்த்தார். ரேவதிக்கு ராதாகிருஷ்ணனின் நிமிர்வு திகைப்


பாக இருந்தது.

"இவர் இப்படி நிமிர்ந்தால் மறுபடியும் ஏதேனும் குனறுபடி பண்ணுவாரே" என்று கவலைப்பட்டாள்.

"சரி. இது லௌகிகம். இந்தக் கணக்கு வாய்ப்பு இருக்கிறது என்றும் சொல்ல, சங்கரய்யர் கைகொட்டிச் சிரித்தார்.

"இந்த பதிலைதான் உங்ககிட்டே எதிர்பார்த்தேன். மந்திரஜபம் என்பது ஒரு வாகனம். அந்த வாகனத்துல ஏறி, நகர்ந்து போயிண்டே இருக்கணும். ஏதோ ஒரு இடத்துல, ஏதோ ஒரு நேரத்துல நம்முடைய பயணம் ஒரு நல்ல விதமா முடியும். மந்திரஜபம் பண்ணிண்டே இருந்தோம்னா உள்ள பார்க்கத் தெரிஞ்சுடும். மந்திரஜபம் பண்ணும் போது மனசு வேற எங்காவது போகும். கொஞ்சம் பிடிச்சு இழுத்துக் கொண்டு வரணும்.

"எத்தனை நாள் இப்படி மனசோட போராடிண்டிருக்கறது. அப்படின்னு நடுவுல ஒரு கேள்வி. ஒரு அலுப்பு வரும். புதுசா கார் கத்துக்கறேன். இடது காலை என்ன பண்றது. வலது காலை என்ன பண்றது. இதுல



32 மனம் உருகுதே

எது ஃபர்ஸ்ட் இயர். எது செகண்ட் இயர். மனசு திண்டாடித் தவிச்சு, எதுக்காக இந்தக் கார். எவனாவது ஓட்டிட்டுப் போறான். நாம பின்னாடி சாய்ஞ்சுண்டிருக்கலாமே, அப்படின்னு தோணும். பத்து நாள் வரைக்கும் போராட்டம். பதினைஞ்சு நாள் வரைக்கும் கொஞ்சம் விறைப்பு. மெல்ல மெல்ல காரோட, கார் இன்ஜினோட

நன்னாத்தான் இருக்கு. அடுத்தபடியா நான் சொல்லிக் கொடுத்த விஷயங்கள் எவ்வளவு தூரத்துல இருக்கு" என்று அடிக்குரலில் சங்கரய்யர் கேட்க, தான் தொடர்ந்து ஜபம் செய்வதாகவும் மிகப் பெரிய மாற்றங்கள் இல்லையெனிலும், மனசுக்குள் ஒரு குறிப்பிட்ட நேரம் வரை அமைதி இருப்பதாகவும், அந்த அமைதி நாள் முழுவதும் பரவுகின்ற

ஒரு ஸ்நேகிதம் ஏற்பட்ட பிறகு, கார் ஓட்ட றோம் அப்படிங்கற எண்ணமே நமக்கு இருக்காது. கை கால் பாட்டுக்குத் தானா அசையும். கார் பாட்டுக்க ஓடிண்டிருக்கும். மந்திரஜபத்தை அந்த மாதிரி ஒரு பழக்கத்துக்குக் கொண்டு வரணும். மந்திர ஜபம் பழக்கமாயிடுத்துன்னா வீணா பொழுது கழிக்கறதே கிடையாது. எப்பொழுதெல்லாம் பொழுது கிடைக்கறதோ அப்பொழுதெல்லாம் மனசு மந்திரஜபத்தை ஆரம்பிச்சுடும். பேச்சு குறையும். பேச்சு குறைஞ்சா, சிந்தனை அதிகமாகும். நம்ம சிந்தனையில கூர்மை இல்லாததுக்குக் காரணம், வெட்டிப் பேச்சு, வெறும் பேச்சு.

"நீங்க இரண்டு பேரும் திரும்பத் திரும்ப மந்திர ஜபம் பண்ணி, இந்தத் தனிமை ருசியை அனுபவிக்கணும்னு பிரார்த்தனை பண்ணிக்கறேன், எப்போ முடிஞ்சதோ அப்போ வந்து பார்க்கலாம்!"

சங்கரய்யர் கைகூப்பினார்.

வீட்டுக்குப் போனதும் பூஜையறையில் ரேவதி உட்கார்ந்துகொள்ள, ஹாலுக்கு அருகேயுள்ள வராண்டாவில் கிழக்குப் பார்த்து ராதாகிருஷ்ணன் அமர்ந்து கொண்டார்.

சட்டென்று வாழ்க்கை மாறிப் போனது அவருக்குத் தெரிந்தது. உடைமை எதுவுமில்லை. ஆனால், காசு இருந்தது. பெண் குழந்தைக்கும் ரேவதிக்கும் தேவை என்ற எண்ணத்தோடு ஒரு லட்ச ரூபாய்க்கு நகைகள் வாங்கினார். பாத்திரங்கள் வாங்கினார். வங்கியில் முதலீடு செய்ய அந்தக் காசுக்கு வட்டி வந்தது. அது வாங்கிய சம்பளத்தைவிட அதிகமாக இருந்தது. அடுத்த நான்கு மாதங்கள் வாழ்க்கையில் மறக்கவே முடியாத நாட்களாக அமைந்தன.

குழந்தைகளைப் பள்ளிக்கூடம் அனுப்பிவிட்டு புருஷனும், மனைவியும் தனித் தனியே உட்கார்ந்து மந்திர ஜபம் செய்வார்கள். பதினோரு மணிக்கு மெல்லப் போய் சங்கரய்யரை எட்டிப் பார்ப்பார்கள். சங்கரய்யர் ஏதாவது கேள்வி கேட்டால் பதில் சொல்வார்கள். அல்லது அங்கேயே உட்கார்ந்து சிறிது நேரம் மந்திர ஜபம் செய்து கொண்டிருப்பார்கள். பன்னிரண்டு மணிக்கு விழுந்து நமஸ்கரித்து விடை பெற்று வருவார்கள். பிற்பாடு சாப்பிட்டுவிட்டு அவர் பேப்பர் படிக்க, ரேவதி வாரப் பத்திரிகைகளைப் படிப்பாள். மாலை நான்கு மணிக்கு, கூட்டமில்லாத நேரத்தில் காளிகாம்பாள் கோவிலுக்குப் போவார்கள். ஐந்து மணிக்குக் குழந்தைகள் வந்ததும் அவர்களோடு பேசிக் கொண்டிருப்பார்கள். ஆறு மணிக்கு குழந்தைகளுக்கு அவர் பாடம் சொல்ல ஆரம்பிப்பார். ஒன்பது மணிக்கு ஜபம் செய்ய உட்காருவார். பத்து மணிக்கு தூங்கப் போவார்கள். விடியற்காலையில் ஐந்தரை மணிக்கு எழுந்து, பல் தேய்த்து, கைகால் கழுவிக் கொண்டு மறுபடியும் ஜபத்திற்கு உட்காருவார்கள்.

அப்பா பாடம் சொல்லிக் கொடுக்கிறார் என்பதால் ஆர்வத்தால் மகன் நன்கு பாடம் படித்தான்.

ஓவியப் போட்டியில் முதல் பரிசு வாங்கினான். உயரம் தாண்டுவதில் இரண்டாவது பரிசு வாங்கினான். குழந்தைகளுக்குப் பரீட்சை முடிந்தபோது தாம்பரத்திலிருந்து போன் வந்தது. அவர்களுக்கான இடம் காலியாக இருக்கிறது என்று சொல்லப்பட்டது.

நல்ல நாள் பார்த்து பால் காய்ச்சினார்கள். வீடு பளிச்சென்றிருந்தது.

> ''வருங்கால அமைச்சரே!'ன்னு தேர்தல் சமயத்தில் உங்களை அழைத்தபோது சந்தோஷப் பட்டீங்க, இப்ப எம்.எல்.ஏ பதவி போதும்ங்கிறீங்களே?"
>
> "இந்தப் பதவிக்கு அஞ்சு வருஷ 'கியாரண்டி' இருக்கே!
>
> - கே.என். பாலகிருஷ்ணன்

அவர்கள் சங்கரய்யரிடம் விடை பெற்றார்கள்.

"உங்க அன்பு, உங்க ஸ்நேகம் எங்களுக்கு மறக்கவே மறக்காது. எங்களை ரொம்ப அற்புதமா வேறே வழியில திருப்பிவிட்டுட்டேள். வாழ்க்கையே மாறிப் போயிடுத்து."

"முகங்கூட மாறிப் போயிடுத்துய்யா. பளபளன்னு ஆயிட்டீர். கண்ணுல ஸ்நேகம் கொஞ்சறதே. உதடு கனிஞ்சிருக்கே. பார்வை மாறிப் போச்சு."

சங்கரய்யர் ஆதரவாக ராதாகிருஷ்ணனை அணைத்துக் கொண்டார்.

"அற்புதமான மனைவி கிடைச்சுருக்காய்யா. அந்தப் பொக்கிஷத்தை ஜாக்கிரதையா வைச்சுக்க வேண்டியது உம்

முடைய பொறுப்பு. பொண்டாட்டி சந்தோஷமா இருந்தா, வீட்டிலே உணவு ரொம்ப அற்புதமா இருக்கும். வீட்டிலே உணவு நன்னாயிருந்தா, உமக்குள்ள நல்ல மாறுதல்கள் ஏற்படும். வீட்டிலே பொண்டாட்டியத் தொந்தரவு பண்ணோம்னாக்க, உணவு கெட்டுப் போயிடும்யா. அவள் துக்கம் அந்த உணவுல இருக்கும். துக்கமான ஒரு உணவு சாப்பிடறபோது மனசுலே பயம் வரும். கிலேசம் இருக்கும். செத்துப் போயிடுவோமோன்னு கலவரம் ஏற்படும். சந்தோஷமான மனைவி ஒரு பலம். இத்தனை வேதனையான ஒரு விஷயத்தை நீங்க தாண்டறதுக்குக் காரணம் ரேவதி. ரேவதி ரொம்ப நல்ல மனைவி. ரேவதி இல்லைன்னா, உம்ம கோவத்துக்கு நீர் நின்ன இடம் புல்லு முளைச்சு போயிருக்கும். வீட்ல இருக்கற பொம்மனாட்டியப் பாராட்டக் கத்துண்டோம்னா, நிறைய விஷயங்கள் சரியா நடக்கும்.



ராதாகிருஷ்ணன், நீர் வெறும் க்ளார்க் இல்லைய்யா. உம்மால வேற வேலை நடக்கப் போறது. நான் சொல்லிக் கொடுத்த மந்திர ஜபத்தால உம்ம வாழ்க்கையையும் சரி பண்ணிண்டு, உம்ம சுத்தி இருக்கறவா வாழ்க்கையும் சரி பண்ண உங்களால முடியும். இதுவரைக்கும் வாங்கிண்டிருந்த சம்பளத்தைவிட அதிகமா வட்டி வருது. காற்றோட்டமா, நகரத்து ஓரமா, சந்தடியில்லாம வீடு கிடைச்சுருக்கு. நிலபுலன் எதுக்காக. இதெல்லாம் எதுக்காக? நீர் மந்திரஜபம் பண்றதுக்குன்னே கிடைச்சுருக்குஒய். நீர் மந்திரஜாபம் ஆரம்பிச்சவுடனே எல்லாமும் சரியா வருது. அப்போ என்ன அர்த்தம்? இதைத் தொடர்ந்து பண்ணணும்னு அர்த்தம். பண்ணும், பண்ணிப் பாரும். உச்சாணிக் கிளைக்குப் போவீர் பாரும். இப்போதைக்கு இது போதும். போயிட்டு வாங்கோ. போறபோது காளிகாம்பாள்கிட்ட, கூடவே வாடியம்மா, அப்படின்னு வேண்டிண்டு போங்கோ.''

சங்கரய்யர் உச்சந் தலையைத் தடவி இருவரையும் ஆசிர்வதித்தார்.

பிரிந்து போவது அவ்வளவு எளிதாக இல்லை. கற்பகாம்பாள் கோவிலில் அழுகை வந்துவிட்டது. சுற்றி வரும்போது "அம்மா... அம்மா..'' என்று அரற்றத் தோன்றியது. "உன்னைப் பார்க்காத... உன்னைப் பார்க்காத... முடியுமா?'' என்று தூண் தூணாகக் கட்டிக் கொள்ளத் தோன்றியது.

கிளம்பும்போது சங்கரய்யரைப் பார்த்து "இதுக்கு என்ன பிரதி உபகாரம் நான் பண்ணுவேன்?'' என்று ராதாகிருஷ்ணன் குரல் தழுதழுக்கக் கேட்டார்.

"எது பண்ணினாலும் சத்தியத்தோட இரும். அது போதும்.''

"புரியும்படியா சொல்லுங்களேன்.''

"ஆரவாரமா, அலட்டலா, பொய்யா இதனால லாபம் சம்பாதிக்கலாம்னு எண்ணமில்லாம எது சொன்னாலும் அது சத்தியமாக இருக்கட்டும். அதனுடைய பலன் ரொம்பப் பெரிசு. நீங்க நினைக்கறதை விட அதிகமான செல்வமும், நீங்க நினைக்கறதைவிட அதிகமான புகழும் சந்துஷ்டியும், சௌபாக்கியமும் கிடைக்கும். மந்திரஜபம்... மந்திரஜபம்... மந்திரஜபம்னே வாழ்க்கை போகட்டும்...''

அவர்கள் சாமான்களுடன் தாம்பரம் போய் இறங்கினார்கள்.

எங்கேயோ பிடுங்கி எங்கேயோ வீசினாற் போல ஒரு வாரம் இருந்தது. ஊர் பழக கண்கள் திறந்தவுடன், இடம் பழக இன்னும் ஒரு வாரம் தேவைப்பட்டது.

தாம்பரத்திற்கு வந்த பதினைந்தாம் நாள் அவரைத் தேடிக் கொண்டு பல பேர் வந்தார்கள். ஊரிலுள்ள சிவன் கோவிலில் உழவாரப் பணி செய்வதாகச் சொன்னார்கள். அங்கு அமர்ந்து அவர்களும் ஜபம் செய்வதாகச் சொன்னார்கள்.

ராதாகிருஷ்ணன் குதூகலித்தார். அவர்களோடு ஸ்நேகமானார். (தொடரும்)

அன்பு அவதாரம்!



அந்த டிசம்பர் இரவில்
தேவக் குழந்தை
மனித குலத்திற்கு
சமர்ப்பணமான நாள்!

ஒரு நட்சத்திரம்
ஆட்டிடையர்களுக்கு
அடையாளம்
காட்டிய நாள்!

ஒரு பெத்லேக
மாட்டுத் தொழுவம்
மகுடம்
சூட்டிக் கொண்ட நாள்!

ஒரு மண் மகள்
விண் மகனை
ஈன்ற
இணையில்லா நாள்!

ஒரு மெய்யன்பு
ஆர்ப்பரிக்காமல்
அமைதியாக
அவதரித்த நாள்!

ஒரு தேவ கவிதை
மனித குல
பத்திரிகையில்
பிரசுரமான நாள்!

சேர்த்து வைத்திருந்த
நம் பாவச் சுமையை
புண்ணியத் தோள்களில்
சுமத்திய நாள்!

வி. ரூபஸ்



● சீனு சந்திரா,
சென்னை — 4.

? நேரு மாமாவை நினைவூட்டுவது போல் நம் ஜனாதிபதி குழந்தைகளை நேசிக்கிறாரே...?'

! குழந்தைகளை நேசிப்பதை வரவேற்கலாம். அவர் செய்யும் குழந்தைத்தனமான காரியங்களை வரவேற்க முடியவில்லை. இசை விழாவுக்குத் தலைமை ஏற்றால், அவரே பாடுகிறார்; இல்லாவிட்டால் தாம் எழுதிய பாட்டை, நண்பர்களைக் கொண்டு பாடச் செய்கிறார்; எழுதிக் கொடுக்கும் உரைகளைத் தூக்கிப்போட்டுவிட்டுக் கிள்ளை மொழியில் பேசுகிறார்; திடீரென்று நிகழ்ச்சிகளில் மாற்றம் புகுத்திக் கொள்கிறார்...

• செண்டிமெண்ட் அரசன்

● அஜார், தேனாம்பேட்டை.

? ஏதாவது ஒரு மதத்தைப் பின்பற்றாதவனால் ஒழுக்க சீலனாக வாழ முடியுமா?

! முடியும். மனசாட்சியை விடாமல் உறுதியாகப் பின்பற்றினால் போதும். மதத்தைப் பின்பற்றுவோருக்கும் இந்த மனோதிடம் தேவைதான் — ஒழுக்கமான வாழ்க்கைக்கு. இல்லாவிட்டால் தப்புப் பண்ணிவிட்டுப் பிராயச்சித்தம் பண்ணுவார்கள்.

● கே. சம்பத்,
திருக்கழுக்குன்றம்.

• வேடப் பொருத்தம்!

வீரப்பனைப் பிடிப்பாராமே சு.சுவாமி!



? கல்கி பகவான் அறக்கட்டளைக்கு எந்த விதத்தில் பணம் கொட்டியது என்று கண்டுபிடிக்க வேண்டும் என வழக்கு தொடரப்பட்டுள்ளதே?

! வழக்கு அதுவல்ல; பக்தர்கள் அறக்கட்டளைக்கு வழங்கிய பணம், குடும்பத் தொழில்களுக்குத் திசை திருப்பப்பட்டதாகத்தான் குற்றச்சாட்டு!

● **பூஜா, வேலூர்.**

? சிலம்பரசன் நடிக்கும் புதிய படத்துக்கு 'தம்' என்று பெயர் வைக்கும் அளவுக்கு இரண்டெழுத்து செண்டிமெண்ட் பித்துப் பிடித்து ஆட்டுவிப்பது குறித்து...?

! தமிழ் வதம்! பண்பாடு ஹதம்! – எப்படி என் மூன்றெழுத்து பதில்!



• வீர(ம்) சபதம்!

● **இல. வெங்கட்ராமன், சென்னை – 78.**

? சட்ட நிபுணர் பல்கிவாலா மறைவு குறித்து...?

! 'ஜாதி – மத அடிப்படையில், வோட்டு வங்கிகளாகவே இன்றைய அரசியல் தலைவர்களால் மக்கள் பார்க்கப்படுகிறார்கள். மக்களைச் சிந்திக்க விடாமல், எப்படி நமக்கு வாக்களிக்கச் செய்யலாம் என்பதே அரசியல் தலைவர்களின் எண்ணமாக இருக்கிறது. நாட்டின் மீது அக்கறை கொண்ட தலைவர்கள் நேரு காலத்தோடு போய்விட்டார்கள்' என்பது பல்கிவாலாவின் திடமான கருத்து. "இன்றுள்ள சூழ்நிலையில் இந்தியத் தேர்தலில் மஹாத்மா காந்தியும் அபுல் கலாம் ஆசாத்தும் போட்டியிட்டால்கூட, அவர்கள் தோற்பது உறுதி" என்றார். சட்ட நிபுணர் என்பதைத்தான் கேள்வியிலேயே சொல்லிவிட்டீர்களே!


● **சி.என். கணேசன், ஆலங்காயம்.** ❑

? நியூசிலாந்து முன்னாள் வீரரும், இந்திய கிரிக்கெட் அணியின் தற்போதைய பயிற்சியாளருமான ஜான் ரைட், தொடரில் எந்த அணி வென்றால் மட்டற்ற மகிழ்ச்சி அடைவார்?

! இந்தியா வென்றால் ரைட்; நியூசிலாந்து வென்றாலும் ஸ்போர்டிவ்வாக எடுத்துக் கொண்டால் ராங்க் இல்லை! ஆனால் அவருடைய உழைப்புக்குப் பலன், முன்னதில்தானே கிடைக்கும். ஆக, மட்டற்ற மகிழ்ச்சி அதில்தான்.

● **எஸ். காளிதாஸ், சூரனூர்.**

? கந்து வட்டி வாங்குவோரை ஒழிக்க புதிய சட்டம் கொண்டுவரப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளாரே?



• சட்டச் செல்வி!

! சட்டம் சுலபமாய்க் கொண்டு வந்து விடலாம்; அமல்படுத்துவதுதான் கஷ்டம். வரதட்சணைத் தடைச் சட்டம் மாதிரிதான்... அதைக் கடைப்பிடிப்போரைக் காட்டிலும், இரு தரப்பு சம்மதத்துடன் மீறுவோரே அதிகமாய் இருப்பார்கள்.



• செல்லும் வழி...?

● **அ. ராஜா ரஹ்மான், கம்பம்.**

? மனிஷா கொய்ராலா, இந்திரா காந்தி வேடத்தில் நடிக்கப்போவது பற்றி...?

! நடிப்பு எப்படி அமையுமோ... வேடப் பொருத்தம் கச்சிதமாய் இருக்கும். தூக்கிய கன்னங்கள், தீர்க்கமான மூக்கு, அகன்ற

❑ **ரூ. 100/- பரிசு பெறுபவர்:**

சி. என். கணேசன்,
89, காந்தி ரோடு (மாடி)
ஐ.ஓ.பி. எதிரில்.
ஆலங்காயம்.

கண்கள், சற்றே அகந்தையுடன் நிமிர்ந்த நெஞ்சம் பார்வையும்...

● **பா. சு. மணிவண்ணன், திருப்பூர்.**

? இந்திய ஜனாதிபதியின் சென்னை விஜயம் பற்றி...?

! தமிழ் மகனை வரவேற்று மகிழ்ந்தாலும் சென்னைச் சாலைகளில் ஏற்பட்ட நெருக்கடியும் குழப்பமும், பல மணி நேரங்களை விணடித்தது.

● **வி. சாரதா, நெய்வேலி – 1.**

? 'தேவாரம் இருக்கும்வரை வீரப்பனைப் பிடிக்க முடியாது. அவரை நீக்கிவிட்டு, என்னிடம் அந்தப் பொறுப்பைக் கொடுத்தால் ஒரு வாரத்தில் வீரப்பனைப் பிடித்துவிடுவேன்' என்று சு.சுவாமி கூறுவது...?


! ஹி...ஹி... என்ன சிரிப்பென்று தானே கேட்கிறீர்கள்... தேவாரம் உடையில் சு.சுவாமியைக் கற்பனை பண்ணிப் பார்த்தேன்.

தேசத்தின் நேசன்!





• கிள்ளைமொழி!



கிளைமேக்ஸ் விருது

● **என். பால கிருஷ்ணன், மதுரை – 1.**

? 'இலக்கியம் வறுமையைத்தான் கொடுக்கும்' என்ற புலமைப்பித்தனின் கருத்து பற்றி என்ன நினைக்கிறீர்கள்...?

! மனத் திருப்திக்காக இலக்கியமும், பணத் திருப்திக்காக ஆபாசமும் எழுதத் தெரியாத அப்பாவியின் கருத்து என்று நினைக்கிறேன்.

● **க.வே. சித்திரவேலு, கருப்பம்புலம்.**

? பால்கே விருது பெறும் யாஷ் சோப்ரா எப்படிங்க...?

! இயக்குனரும் படத்தயாரிப்பாளருமான இவர் இயக்கிய ஐந்து படங்கள் தேசிய விருதுகளைப் பெற்றிருக்கின்றன. இருபதுக்கும் மேலான வெற்றிப் படங்களைத் தந்திருக்கிறார். பால்கே விருது கிளைமேக்ஸ்!

● **ஜி. ஜெயராமன், கூந்தலூர்.**

? பழக்கம் – வழக்கம் – வேறுபாடு கூறவும்.

! பழக்கம்: தனியொருவர் தவறாது அன்றாடம் செய்யும் காரியம் : habit.

வழக்கம்: சமுதாயமே ஏற்றுக் கொண்டு நடைமுறைக்குக் கொண்டுவந்துவிட்ட அன்றாடச் செயல்: custom.

காலையில் வாசலில் நீர் தெளித்துக் கோலம் போடுவது தமிழருக்கு வழக்கம்.

தினந்தோறும் சற்று நேரம் தியானம் பண்ணுவது அவருக்குப் பழக்கம்.

● **கோமனா ஸ்ரீநிவாஸன், சென்னை – 26.**

? ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள், அமைச்சர்களை அதிரடியாக மாற்றிப் பந்தாடும் தமிழக முதல்வர் கையில், மாநில ஆளுனர் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளையும் மாற்றும் அதிகாரம் கொடுத்தால் நாடு என்னவாகும்...?

! இப்போது அம்மையார் கோலி ஆடுகிறார்; அப்புறம் பில்லியர்ட்ஸ் ஆடுவார்!

● **யோகஸ்ரீ ராஜ், மும்பை – 81.**

? முதியோர் இல்லங்கள் பெருகக் காரணம் இள வயதினரின் சுயநலம்தானே?

! சுயநலம், ஒரு சிலர் விஷயத்தில் இருக்கலாம்; பொதுவாக வாழ்க்கை முறை மாறியதுதான் காரணம். குழந்தைகள் காப்பகம் போல், இதற்கும் ஓர் அவசியத் தேவை ஏற்பட்டிருக்கிறது.

* ரூ. 50/- பரிசு பெறுபவர்:

அஜார்,
117, எல்டாம்ஸ் சாலை,
சென்னை – 600 018

மைலாப்பூர் செல்லும் பஸ்ஸில் ஏறினேன். கடைசி சீட்டில் இடம் இருக்க, அமர்ந்தேன். உடன் மழை சடசடவெனப் பெய்தது. மழை சப்தத்தையும் மீறி, எனக்கு அருகில் அமர்ந்திருந்தவர்கள் பேசும் சப்தம் கேட்க, இடதுபுறம் திரும்பிப் பார்த்தேன். இரண்டு இளைஞர்கள். எனக்கு அடுத்து ஒருவன், அவனுக்கு அடுத்து ஜன்னல் பக்கம் மற்றொருவன். நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று உடல் புஷ்டியில், உடைகளில் தெரிந்தது. அவர்களை நேரிடையாகக் கவனிப்பதைத் தவிர்த்தேன். ஆயினும் அவர்களது உரையாடலைக் கேட்பதைத் தவிர்க்க முடியவில்லை. அவர்கள் இருவரில் சன்னலுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தவன், அதிகக் குறும்பு செய்பவனாகத் தெரிந்தான். பஸ் போவதால் தேங்கி நிற்கும் மழைத் தண்ணீர் தன் மீது பட்டு விழ, ஒதுங்கிய யாரோ ஒரு பெரியவரைக் கேலி செய்தான். எனக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தவன் அதை ரசித்தபடி அவன் பங்குக்கு ஏதோ சொன்னான். உடன் சப்தமாகக் கேலிச் சிரிப்பு.

பஸ்ஸின் தகரத்தைத் தட்டி, 'ஓ போடு' பாடலை ஜன்னல் ஓரமிருந்தவன், 'சோறு போடு' என்று மாற்றிப் பாட, என்னருகில் இருந்தவன் தன் தலையைக் கோதிவிட்டபடி சிரித்துக் கொண்டிருந்தான். நான் கவனியாதது போலவே, சீரியஸாக வேறு பக்கம் பார்த்தபடி இருந்தேன்.

அடுத்து, 'ஏய் நீ ரொம்ப அழுக்கா இருக்கே' என்று, 'அழகா இருக்கே' என்ற படத்தை மாற்றி, அருகில் நின்ற பெண்ணைப் பார்த்தும் பார்க்காமலும் ஜன்னல் இளைஞன் சொல்ல, அதற்கும் என்னருகில் இருந்தவன் இலேசான சிரிப்புடன் இருந்தான்.

அந்தக் கலாட்டாக்களை ரசிக்காது, அமைதியாக சலனமற்று இருந்தபடி, அவர்கள் அருகில் நான் அமர்ந்திருப்பது அவர்களுக்கு உறுத்தியிருக்க வேண்டும்.



அடுத்து அவர்கள் டிக்கெட் வாங்கியிருந்தும், வாங்காமல் வந்தது போலவும், அது நியாயம் போலவும் பேசி என் கவனத்தைக் கவர முயற்சித்தார்கள். அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள், படிக்கிற மாணவர்களா அல்லது வேலை தேடுபவர்களா அல்லது வேலைக்குப் போகின்றவர்களா என்று தெரிந்து கொள்ள என்னுள் குறுகுறுப்பு.

கூடாது. நேரிடையாகக் கேட்கக் கூடாது. அதுவும் இப்பொழுது இந்தக் கேள்வியைக் கேட்டால் அவர்களுக்குச் சங்கடமாகப் போய்விடும், என்ற எண்ணம் என்னுள் ஓடியது.

பஸ்ஸில் மற்றவர்கள் எல்லாரும் வேடிக்கை பார்த்து ரசிக்கும்போது, நான் மட்டும் அவர்களைப் பார்க்காதது அவர்களுக்குப் பெரும் சவாலாகி விட்டது போலும். அடுத்து, ஜன்னல் அருகில் அமர்ந்திருந்தவன், என் அருகில் அமர்ந்திருந்தவனைச் சீண்டினான். "ஏய் உன் ஆட்டமெல்லாம் மூணு வருஷம்தான். அப்புறம் காலேஜ் முடிந்ததும் பார். அலையப் போற..."

"ஓஹோ மாணவர்களா?" எனக்குள் ஒரு பாசம் கனிந்தது.

என் அருகில் அமர்ந்திருந்தவன் வாய் திறந்தான்.


"மூணு வருஷம் உனக்குத்தான்டா எனக்கில்ல..."

"ஏன்...?" ஜன்னல் அருகில் இருந்தவன் கேட்டான்.

"நான்தான் எம்.பி.ஏ. சேரப் போறேனே!"

"ஹாஹாஹா..." ஜன்னல் அருகில் இருந்தவன் சிரித்ததில், பஸ்ஸில் இருந்த பாதிப் பேர் திரும்பிப் பார்த்தனர். நானும்

சோம. வள்ளியப்பன்



மழை நாளில் மூன்று பேர்!

அவர்கள் பக்கம் திரும்பிப் பார்க்க, ''ஏன் சார் இவனெல்லாம் எம்.பி.ஏ. படிக்க முடியுமா?''

முதன் முறையாக என்னைப் பார்த்து நேரிடையாகக் கேட்டான், ஜன்னல் அருகில் இருந்தவன்.

''ஏன் முடியுமே...?''

''நல்லாப் பாருங்க சார்...இவனா... முடியுமா?'' ஜன்னல் இளைஞன்.

''உம். புத்திசாலிக் களை தெரியறதே!'' நான் அழுத்தமாகச் சொல்ல... என்னருகில் இருந்தவன் கண்களை விரித்து என்னைப் பார்த்தான். அவன் முகத்தில் ஆச்சரியம், ஆர்வம், உடன் மகிழ்ச்சி..

நான் இறங்க வேண்டிய இடம் வந்து விட்டது. மழை நின்று விட்டிருந்தது. இறங்கித் தேங்கியிருக்கும் மழைத் தண்ணீர், பஸ் கிளம்புகையில் என் மீது தெறித்து விடாமல் இருக்க ஒதுங்கி நின்றேன். பஸ் நகர்ந்து சென்றது. அவர்களின் கேலிப் பேச்சு தொடரும் என நினைத்தபடி பஸ்சுக்குள் பார்த்தேன். கடைசிச் சீட்டில் இருந்த அவர்கள் என்னைத் திரும்பிப் பார்த்தது, மஞ்சள் விளக்கு வெளிச்சத்தில் தெரிந்தது. கடைசிச் சீட்டில் இருந்த 'அவன்' எனக்குக் கையசைத்து விடை கொடுத்தான். மனத்துக்கு நிறைவாக இருந்தது. ○

நடக்குமென்பார்; நடக்கும்...!



மேஷம் : இந்த வாரம் தேவைக் கேற்ப பண வசதி கிடைக்கும். வெளி நாட்டிலிருந்து நீங்க எதிர்பார்த்திட் டிருந்த நல்ல செய்தி கிடைக்கும். எதிர்ப்புகள் 'ஜகா' வாங்கும். எதிரி கள் அடங்கிப் போவாங்க. குடும் பத்துல மகிழ்ச்சிக்குக் குறைவில்லை. நண்பர்கள் உறவினர்கள் உதவ முன் வருவாங்க. 2ல் ராகு, 8ல் கேதுங்கறதால பேச்சில் கடுமை கூடாது. அவசரம் வேண் டாம். கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து இருந்தவங்க இப்ப ஒண்ணா சேருவாங்க. பெண்களுக்கு மனசுக்குப் பிடிச்ச காரியங்கள் நடக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ், பாராட்டு உண்டு.



ரிஷபம் : மனசுல துணிச்சலும் தன் னம்பிக்கையும் பிறக்கும். உற்சாகமான மனநிலை ஏற்படும். இதுவரை தாமதமாகி வந்த காரியங்கள் இப்ப முடியும். அலுவலகத்தில் மேலதி காரிகளின் பாராட்டுக் கிடைக்கும். கடினமான காரியங்களிலும் உங்கள் திறமை, புத்திசாலித்தனம் வெளிப்படும். சுயமா தொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. கொடுக்கல், வாங்கல் கைகொடுக்கும். இதுவரை திருமணமாகாதவங்களுக்கு அதுக் கான வாய்ப்பு வந்து சேரும். சிலர் புதிய சொத்துக்கள் வாங்க வாய்ப் பிருக்கு. சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க முன்னணிக்கு உயருவாங்க.



மிதுனம் : இந்த வாரம் தெய்வ பலம் கூடும். பணம் பலவழிகளில் கிடைக்கும். இடையூறுகள், குறுக்கீடு கள் விலகும். புதிய முயற்சியில் இருப்பவங்களுக்கு நன்மை கிடைக்கும். பழைய கடன் தொல்லைகள் நீங்கும். வர வேண்டிய தொகை வந்து சேரும். குடும் பத்தில் ஒற்றுமை நிலவும். திருமணமாகாத வங்களுக்கு அதற்கான வாய்ப்பு வரும். பெண்களுக்கு இது அதிர்ஷ்டமான வாரம். இயந்திரம், ஜவுளி, பொன், வெள்ளி, ஆபரணங்கள், மருத்துவம், எலக்ட் ரானிக்ஸ் துறைகளில் ஆதாயம் உண்டு.



கடகம் : இந்த வாரம் பணம் பல வழிகளில் வந்து சேரும். இதனால மனசுல மகிழ்ச்சி துள்ளும். எதிர்ப்புகள் விலகி அமைதியான சூழ்நிலை ஏற்படும். இது வரை இருந்து வந்த தாமதம், குறுக்கீடு கள் விலகும். சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் உண்டாகும். சுயமா தொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. இயந்திரம், பத்திரிகை, புத்தகம், பொன், வெள்ளி இந்த வகையில் ஆதாயம் உண்டு. கலைத் துறையைச் சேர்ந்த வங்களுக்குப் புகழ், பாராட்டு உண்டு. குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். சிலர் புதிய வீடு, மனை வாங்க வாய்ப்பிருக்கு. எதிர் பார்த்திருந்த நல்ல செய்தி வந்து சேரும்.



சிம்மம் : உங்க ராசிநாதன் சூரி யன், ஐந்தில் புதன் பூர்வ புண்ணி யஸ்தானத்தில் சஞ்சாரம் என் பதால் உற்சாக மான சூழ்நிலை உண்டாகும். அதிர்ஷ்டகர மானத் திருப் பம் ஏற்படும். எவ்வளவு கடினமான காரி யங்களிலும் வெற்றி உண்டு. அலுவல கத்தில் பாராட்டு, புகழ் கிடைக்கும். வேலை விஷயமாக வெளியூர், வெளி நாடு போக வாய்ப்பிருக்கு. தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிறவங் களுக்கு ஆதாயம் உண்டு. கொடுக்கல் வாங்கல் சுமுகமா இருக்கும். இதுவரை இருந்து வந்த பொருளாதார நெருக்கடி விலகும். குடும்பத்தில் சுபச் செலவு உண்டாகும். பெண்கள் தங்கள் எண்ணம் நிறைவேறப் பெறுவாங்க. குடும்பத்தோடு வெளியூர் செல்ல வாய்ப் பிருக்கு.





கன்னி : இதுவரை இருந்து வந்த தொல்லைகள் நீங்கும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். வேலையில்லாமல் இருந் தவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வரும். வேலையில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்க வாய்ப் பிருக்கு. சுயமா தொழில் பண்றவங்க வளர்ச்சி அடைவாங்க. ஓவியம், சினிமா, சங்கீதம் போன்ற கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. சிலர் வீடு வாங்கவோ, கட்டவோ வாய்ப் பிருக்கு. பூர்வீக சொத்து விவகாரம் சிக்கல் கள் விலகி சுமுகமாகும்.

அக்னிசர்மா பக்கம்

டிசம்பர் 25 முதல் 31 வரை

துலாம் : இந்த வாரம் எல்லா காரியத்திலயும் உங்களுக்கு வெற்றி உண்டு. மூன்றாமிடத்தில் சூரியன், புதன் சஞ்சாரம் என்பதால் துணிச்சல், தன்னம்பிக்கை அதிகரிக்கும். மறைமுக நேர்முக எதிர்ப்புகள் மறையும். எடுத்தக் காரியத்தை எப்பாடுபட்டாவது நிறைவேற்றி முடிப்பீங்க. பழைய கடன் தொல்லைகள் நீங்கி மன அமைதி உண்டாகும். அலுவலகத்தில் மதிப்பு செல்வாக்கு உயரும். அரசியல்வாதிகள் முன்னணிக்கு உயருவாங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் பெயர் புகழ் கூடும். கோர்ட் வழக்கு விவகாரங்கள் அனுகூலமாகும். பெண்களுக்கு உற்சாகமான மனநிலை உண்டாகும்.



விருச்சிகம் : எதிர்பாராத பண வரவு, பொருள் வரவு இந்த வாரம் நிகழும். புதிய வேலை முயற்சிகளில் இருப்பவங்களுக்கு அதுக்கான பலன் உண்டு. வெளிநாடு செல்ல முயற்சி பண்றவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வரும். ஒன்பதில், உச்சம் பெற்ற குரு உங்கள் ராசியைப் பார்ப்பதால், வெளிநாட்டிலிருந்து பொருள் உதவி கிடைக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் மக்களால் மகிழ்ச்சி கூடும். பெண்கள் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவாங்க. பெண்களுக்குத் தாமதமாகி வந்த திருமணம் விரைவில் நடக்கும்.

பாடகி கவிதா கிருஷ்ணமூர்த்திக்கு (விருச்சிகம்) முன்னேற்றம் உண்டாம்.



தனுசு : எதிர்பாராத பயணம் இந்த வாரம் உண்டு. இதனால் அனுகூலம் உண்டு. எதிர்ப்புகள் விலகும். குடும்ப நலம் சீராக இருக்கும். குடும்ப ஸ்தானத்தை குரு பார்ப்பதால் தனலாபம், சுப மங்கள காரியங்கள் நிறைவேறும். தடைபட்ட திருமணம் தடைகள் விலகி நடக்கும். புதிய வீடு, சொத்து சேர்க்கை சிலருக்கு ஏற்படும். கூட்டுத் தொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. அலுவலகப் பணியாளர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.



மகரம் : தெய்வ பலம், தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். மனசுல உற்சாகம் தவழும். வழக்கு விவகாரங்களில் வெற்றி உண்டு. அலுவலகத்தில் இருந்து வந்த விரோத மனப்பான்மை, தொல்லைகள் நீங்கும். புதிய உத்யோக முயற்சியில் இருப்பவர்களுக்கு அதுக்கான பலன் உண்டு. பொருளாதார சிக்கல்கள் விலகும். பார்ட்னர்ஷிப்ல தொழில் பண்றவங்களுக்கு கவனம் தேவை. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புதிய ஒப்பந்தம் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பெண்களுக்கு இது உற்சாகமான வாரம். எதிர்பாராத பண வசதி வந்து சேரும்.



கும்பம் : எவ்வளவு சிக்கலான காரியமானாலும் உங்க புத்திசாலித்தனத்துல திறமையா செயல்பட்டு வெற்றி பெறுவீங்க. அலுவலகத்தில் உங்கள் எண்ணம் நிறைவேறும். சுமூகமான நிலைமை ஏற்படும். தனியார் துறையில் வேலை பார்ப்பவர்களுக்குப் பதவி உயர்வு, அதிகாரம், சுதந்திரத் தன்மை ஆகியவை உண்டாகும். அழகு சாதனங்கள், அலங்காரப் பொருட்கள், காண்ட்ராக்ட்ஸ் ரியல் எஸ்டேட் ஆகிய வகையில் முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் சுப காரிய முயற்சிகள் நடக்க வாய்ப்பிருக்கு. மாணவர்கள் முன்னேற்றம் அடைவார்கள். எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்து சேரும்.



மீனம் : இந்த வாரம் எல்லா வகையிலும் உங்களுக்கு அனுகூலம் உண்டு. தெய்வ பலம் தெய்வீகக் காரியங்களில் ஈடுபாடு, சகல காரிய முயற்சிகளிலும் வெற்றி ஆகியவை ஏற்படும். அலுவலகத்தில் எல்லா வகையிலும் அனுகூலமான போக்கு ஏற்படும். எதிரிகள் அடங்கிப் போவார்கள். வேலை தேடுபவர்களுக்கு அதுக்கான பலன் கிடைக்கும். தொழில் வகையில் புதிய திருப்பம் ஏற்படும். பொருளாதார சிக்கல்கள் நீங்கும். குரு பலம் நிறைந்து இருப்பதால் பொன், பொருள், ஆபரணச் சேர்க்கை ஏற்படும். விருந்து, உபசாரம், நண்பர்கள், உறவினர்கள் வருகைன்னு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.



நடக்குமென்பார்; நடக்கும்...!





ஒளிந்து பிடித்து விளையாடிய அமிர்தவர்ஷினி!

அமிர்தவர்ஷினி மிக நேர்மையான ராகம். மற்ற ராகங்களுடன் அவ்வப்போது சேர்ந்து கொண்டு போக்குக்காட்டும் இடைஞ்சலெல்லாம் அதற்குத் தெரியாது. அப்படிப்பட்ட சமர்த்து ராகத்துக்குக் கொஞ்சம் வஞ்சனையைக் கற்றுக் கொடுத்து, ஒளிந்து பிடித்து ஆட வைத்தார் சேஷாச்சாரி. ஹைதராபாத் சகோதரர்களுள் இளையவர். ஆலாபனையின்போது அபூர்வ பிரயோகம் ஒன்றைப் பிடித்துக் கொண்டு ஏகத்துக்கு அவர் அழுத்தம் கொடுக்க, 'இது என்ன ராகம்?' என்று பலர் மண்டையைக் குடைந்து கொண்டார்கள். 'ஆனந்தாம்ருதகர்ஷினி' என்று சகோதரர்கள் பாட ஆரம்பித்ததும், மழை வராவிட்டாலும் எல்லார் மனத்திலும் நிம்மதி வந்தது - காணாமல் போன அமிர்தவர்ஷினி கிடைத்துவிட்ட நிம்மதி!

ஹைதராபாத் பிரதர் கச்சேரி என்று அறிவிப்பதுதான் நியாயமாக இருக்கும். சின்னவர்தான் அங்கே பெரியவர். பெரியவர் (ராகவாச்சாரி)தான் சின்னவர். கச்சேரியில் அவர் பங்கு அதைவிடச் சின்னது!

மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் அமைப்புக்காக அவர்களுடைய சபா அரங்கில் கச்சேரி. சேஷாச்சாரி சேட்டைப் பிரியர். அவர் மைக்கைப் பிடித்தபோது சட்ட சபை ஞாபகத்துக்கு வந்து பயமுறுத்தியது. இடது கையாலும் வலது கையாலும் ஆஃப் பிரேக், லெக் பிரேக், கூக்லி, ஏன்... சைனா மேன் கூடப் போடுகிறார்; தாளம் போடுகிறேன் பேர்வழி என்று கைகொட்டித் தீர்க்கிறார். கடைசி வரிசையில் கண்ணில் படும் நண்பர்கள் முதல் வரிசைக்கு இடம் பெயராவிட்டால், பாட மாட்டேன் என்று அடம் பிடிக்கிறார்! (அந்த நண்பர்களை டிக்கெட் பரிசோதித்த சாரணச் சிறுவர்கள் மடக்கி நிற்க வைக்க, சபா செயலாளர் வந்து தலையிட்டு அந்தக் கடமை வீரர்களிடமிருந்து அவர்களைக் காப்பாற்றி, முன்வரிசையில் அமர்த்திய பிறகே கச்சேரி தொடர்ந்தது!)

சேட்டைக்காரரான சேஷாச்சாரி ஜோராகவும் பாடுகிறார். வார்த்தைகள்தான் நமக்குப் புரிய மாட்டேன் என்கிறது. (ஒலி அமைப்பு வெகு சுமார்) அவரைப் போல் நாமும், கச்சேரிக்குப் புத்தகம் எடுத்துக் கொண்டு போய் வார்த்தையைப் பார்த்துக் கொள்ளலாம்.

பூர்வி கல்யாணியை சேஷாச்சாரி கீழ் ஸ்தாயியிலும், ராகவாச்சாரி மேல் ஸ்தாயியிலுமாகப் பங்கு போட்டுக் கொண்டார்கள். அகாரத்தைக் காட்டிலும் உகாரம், இகாரம் அதிகம் கேட்க, பாவத்தைக் காட்டிலும் வித்தை மேலோங்கியிருக்க, 'நின்னுவினாக மரிதிக்கெவருன்னாரு' கீர்த்தனை, தாளத்துக்குள், வார்த்தைகளை அடக்கும் சடங்கு போல் தொடர்ந்தது. 'பரமலோபுலனு' என்ற அடியில் செய்த நிரவலால் ஒரு

• மகாராஜபுரம் ராமச்சந்திரன்



நல்ல காரியம் விளைந்தது - அந்தக் கச்சேரியில் கஞ்சிராவும் இருப்பது நமக்குத் தெரிய வந்தது. வாசித்தவர் நெய்வேலி வெங்கடேஷ். மிருதங்கம் குருவாயூர் துரையும், வயலின் ராமானுஜாசார்யுலுவும் ஆதரித்து வாசித்தார்கள். ஆனால் மூன்று 'ஆசார்யர்'களுள் முதலிடம் இந்த ராமானுஜருக்குத்தான். சகோதரர்கள் தோடியில் தொலைய விட்ட பாவங்களையும் கண்டுபிடித்துக் கொண்டு வந்து விட்டார். ராகம் - தானம் - முடிந்து 'வேலவனே நினது பதமே..' என்று தொடங்கிய பல்லவியில், கச்சிதம் இருந்தது, வேகம் இருந்தது. ஆனால் பாவக் குறைவினால் ரம்மியமில்லாத ரகனையாகிப் போனது நிகழ்ச்சி.



• ஓ.எஸ்.தியாகராஜன்

ஓ.எஸ். தியாகராஜனின் உச்சரிப்புக்கு 'ஓ' போடலாம். வார்த்தைகளை மட்டுமின்றி ஸ்வரங்களையும் ஒரு கொஞ்சு மொழியாளராக மாறித் தாலாட்டுகிறார். சாந்தி ஆர்ட்ஸ் ஃபவுண்டேஷன் அமைப்புக்காக அவர் ஸ்ரீநிவாஸ சாஸ்திரி ஹாலில் பாட, 'நாட்டையில் சுவாமிநாத', ஹரிகாம்போதியில் 'எந்தரானி தந' என்று சம்பிரதாய அமைப்பில், வலுவாக வடிவம் கொண்டது கச்சேரி. 'சேஷ"டு சிவுனிகி' என்ற வரியை விடுத்து 'ஆகமோக்த மகு...'வை நிரவலுக்கு எடுத்துக் கொண்டார். பொருத்தமும் அழகும் அமையப் பெற்ற தேர்வு.

ஆபோகி ஆலாபனையின் விஸ்தாரம் பாடகரின் முழு கவனத்தையும், உணர்ச்சி பாவத்தையும் பிரதிபலித்தது. வலுவான அகாரம் கொடுத்து ஜீவ ஸ்வரங்களைத் தொட்டுக் கார்வையில் நின்றபோது, அனாயாசமாக இசை பெருகியோடியது. இவர் கீர்த்தனை பாடுகையில் கிடைக்கப் பெறாத பாவம் கிடைத்தது.

• ஹைதராபாத் பிரதர்ஸ்



வரதராஜனின் வயலின் மிகத் துல்லியமாகப் பாடகரைப் பின்பற்றியது. 'தாமஸமிக தாளனு தாபத்ரய சமநி' ஜி.என்.பி. கீர்த்தனை. கற்பனை ஸ்வரங்கள் பாடுகையில் மிருதங்கம் ஆர். ரமேஷ், முகர்சிங் கண்ணன் இருவரும் கைவரிசையைக் காட்டினார்கள்.

நளினகாந்தி ராகத்தின் நளினத்தை வெளிப்படுத்தும் கற்பனை ஸ்வரப் பிரயோகங்களுடன் 'மனவியாலகிஞ்சர'.. தொடர்ந்தது.

பிரதான ராகமான தோடியை எடுத்த போது, குரல் காத்திரம் அடைந்து கீழ் ஸ்தாயியைத் தொட்டது. ஆனால் மேலே ஏற சிரமப்பட்டது. தியாகராஜன் விடேன் தொடேன் என்று மேலே முயற்சி செய்து வெற்றி பெற்றார். ஆனால் சங்கீதம் அங்கே தோற்றுப் போயிற்று. அதற்கு முன் மயிலை ரசிக மகா ஜனங்களில் பலர் எழுந்தும் போய்விட்டார்கள்!

'நின்னே நம்மி நானு' பாடினார் ஓஎஸ்டி. நிரவலில் வார்த்தைகளும் லயக் கட்டுப்பாடும் மிகத் துல்லியமாயிருந்தன; பாவம் தான் பாவம்... ஒப்புக்குச் சப்பாணியாகி விட்டது.

தனியாவர்த்தனத்தில் ரமேஷ் - கணகணக்க, கண்ணன் கிணுகிணுக்க, அந்த ஒலிச்சேர்க்கை பாடகரை உற்சாகப்படுத்தியதுடன், கச்சேரி களை கட்டவும் உதவியது.

மியூசிக் அகாடமியில் மகாராஜபுரம் ராமச்சந்திரன் பாடியபோது அவர் அப்பாவை முழுக்க முழுக்க நினைவூட்டினார். ஆனால் தந்தைக்கு இருந்த ஆகர்ஷண சக்தி தனயனுக்கு இல்லை. காரணம் என்ன என்ற கேள்வி கச்சேரி முழுதும் தொடர்ந்ததேயொழிய விடை புலப்படவில்லை. பாடகர் நிஷாதத்துக்கு ஏகமாக மேக்அப் போட்டு, சுநாதவினோதினி வர்ணத்துக்குக் கற்பனை ஸ்வரங்கள் ஒட்ட வைத்த போது அச்சம் ஏற்பட்டது. அடுத்த நிமிடமே அனாவாசியங்கள் எட்டிப் பார்க்காத அழகான ஆனந்த பைரவியை சிறு ஆலாபனையாக வழங்கியதும் ஆறுதலாக இருந்தது. (மைசூர் மஞ்சுநாத்தின் வயலின், பாடகருடைய குரலின் கனத்துக்குச் சிறந்த கான்ட்ராஸ்ட்.) 'மானஸ குருகுஹ ரூபம்' - நிதானமாகத்தான் பாடினார் தீக்ஷிதர் கீர்த்தனையை. காலப் பிரமாணத்தால் மட்டுமே கீர்த்தனையின் வீச்சு வெளிப்பட்டு விடுவதில்லை. முத்துஸ்வாமி தீக்ஷிதரின் சாஹித்ய பாவம் கைவர மறுத்தது.


ஸாரமேகானி (பந்துவராளி) பாடிய போதுதான், ம்ருதங்கம் ராஜாராவ் 'உன்ளேன் ஐயா' சொல்ல முடிந்தது. அது வரையில் அவரும் கடம் முரளியும், கீர்த்தனை இறுதியில் கோர்வை ஒட்ட வைத்து திருப்தி கொள்ள வேண்டியிருந்தது. பந்துவராளிக்கேயுரிய சில மெலோட்ராமா பிடிகளை மட்டும் அழுத்தம் கொடுத்துக் கொண்டே போய், கற்பனை ஸ்வரங்களில் ஹிந்துஸ்தானி பிரயோகங்களைப் புகுத்தி... 'அட ராமசந்திரா!' என்று சொல்லி விடக் கூடாது, அதுதான் மகாராஜபுரம் பாணி!

பாணிக்கு உகந்த ராகத்தையே மீண்டும் தேர்ந்தெடுத்தார் ராமச்சந்திரன். ஹமீர் கல்யாணி. எதிர்பார்த்த சஞ்சாரங்களுடன் அமைந்த ஆலாபனை. எதிர்பாராததை வாசித்தார் மஞ்சுநாத்; ஆனால் இறுதியில், ராகத்தின் அமைதியை வேகத்திடம் தாரை வார்த்தார். நாராயணதீர்த்தரின் 'க்ஷேமம் குரு கோபால' தொடர்ந்தது.

ஸாவேரி ஆலாபனையில் அழுத்தமும் கமகமும் தோற்று, வேகமும் விறுவிறுப்பும் வென்றன. கீழ் ஸ்தாயியில் உறுமலும் மேல் ஸ்தாயியில் செருமலும் கலந்து கேட்டபோது, சங்கீத கிராஃபிக்ஸ் போல் தொனித்தது. 'ஸ்ரீ ராஜகோபால' கிருதிக்கு ம்ருதங்கத்தின் போஷிப்பு உயிரூட்ட, நிரவல் ஸ்வரத்தைத் தொடர்ந்த 'தனி'யில் சுவாரஸ்யமான எளிய கணக்குகள் வெளிப்பட்டன.

ஆரபி ராகம் தானம் பல்லவியின் முடிவில், திருவையாறு பஞ்சரத்ன கிருதி ராகங்களில் ராகமாலிகை ஸ்வரங்கள்.

பலமான நாதஸ்வர குரல். சாகஸங்களுக்கு நன்கு ஒத்துழைக்கிறது. கச்சேரியின் இறுதியில் சாகஸங்களையும் சங்கீதத்தையும் தனித்தனியே எடைபோட்டால், சாகஸம் தான் ஜெயிக்கும்! ○



"டேய்... கிட்டிப்புள் ஆடறதுக்குத் தவில் கம்பை எடுக்காதேடா.. இன்னிக்குச் சாயங்காலம் முக்கியமான கச்சேரி இருக்கு!"

— புளியறை கணேசன்

வரி கட்ட மறுத்த ராஜாஜி!

கல்கியிலும் சுயராஜ்யாவிலும் எழுதிக் கொண்டிருந்த ராஜாஜி, தம் எழுத்துக்களுக்காகப் பெறும் சன்மானங்கள் நிரந்தர வருமானங்கள் அல்ல, என்று வாதிட்டு அவற்றுக்குச் சில ஆண்டுகளாகவே வருமானவரி கட்ட மறுத்து வந்தார். ஆடிட்டர் ஜி. நாராயணசுவாமி அவருக்கு அறிமுகமான பிறகு, அவர் ராஜாஜியின் வாதத்தில் உள்ள தவறைச் சுட்டிக் காட்டினார்.

“நீங்கள் கல்கி அல்லது சுயராஜ்யாவில் நிரந்தரப் பணியாற்றவில்லை என்பது உண்மையே; ஆனால் உங்கள் எழுத்துப் பணி நிரந்தரமானதுதானே; உங்கள் அறிவாற்றலையும், நேரத்தையும், உழைப்பையும் பயன்படுத்தி நீங்கள் செய்யும் தொழில், எழுத்துத் தொழில்தானே; அதற்குத் தொடர்ந்து இடைவெளியின்றி வருமானம் வந்து கொண்டிருந்தால், அதற்கு வருமான வரி செலுத்தித்தான் ஆக வேண்டும். எப்போதோ ஒருமுறை எழுதி சன்மானம் பெற்றால், அது தொழில் முறை வருமானமல்ல என்று வாதிடலாம்; உங்கள் விஷயத்தில் அந்த வாதம் பொருந்தாது..!”



இப்படிக் கடிதம் எழுதிய நாராயணசுவாமி, தம்மை அனுப்பிவிட்டு ராஜாஜி வேறு யாரையாவது தமது ஆடிட்டராக நியமித்துக் கொள்வார் என்று எதிர்பார்த்தார்.

ராஜாஜியின் பதில் ஒரு தபால் கார்டில் மறுநாளே வந்தது: “உங்கள் கருத்துகளை ஏற்கிறேன். என்னுடைய ஆட்சேபணைகள் அனைத்தையும் வாபஸ் பெறவும். வருமான வரி பாக்கி, எத்தனை ஆண்டுகளுக்கு, எவ்வளவு உள்ளது என்பதை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, கணக்கிட்டுக் கூறவும். ஒரே மூச்சில் வரி பாக்கி அனைத்தையும் செலுத்தி விட விரும்புகிறேன்!”

அட்வான்ஸ் டாக்ஸ் (Advance tax) கட்டுமாறு ராஜாஜிக்கு வருமான வரி இலாக்கா நோட்டீஸ் அனுப்பியது. ராஜாஜி மறுத்தார். “எனக்கு வயது எண்பது ஆகிறது. நான் இன்னும் எத்தனை நாள் வாழ்வேன் என்பதையோ, நடப்பு ஆண்டில் என் வருமானம் என்னவாக இருக்கும் என்பதையோ, கணிக்க இயலாது” என்று பதில் எழுதினார்.

இது ஆடிட்டர் நாராயணசுவாமிக்குத் தெரிய வந்தபோது, ராஜாஜிக்குக் கடிதம் எழுதினார்: “வருமான வரி அதிகாரிகள் உங்களுக்கு மதிப்பும் மரியாதையும் செலுத்தி பேசாமல் இருந்து விடலாம். ஆனால், அதனால் நீங்கள் செய்கிற காரியம் சரியாகி விடாது. உங்கள் எரிச்சல் எனக்குப் புரிகிறது. ஆனால் சென்னை ராஜதானியின் முதலமைச்சராகவும் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகவும் இருந்த நீங்கள், சட்டத்தை மீறுவதை என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை.”

ராஜாஜி தமக்கு விதிக்கப்பட்ட அட்வான்ஸ் டாக்ஸை பைசா பாக்கியின்றி உடனடியாகச் செலுத்தினார். தொடர்ந்து ஆயுள் பரியந்தம் செலுத்தி வந்தார்.

காலமாவதற்குச் சில காலம் முன் ஜெனரல் ஆஸ்பத்திரியில் அவர் இருந்தபோது, சதாசிவம் அவரைப் பார்க்கப் போனார். அப்போது ராஜாஜி சொன்னார்: “கவலைப் படாதீர்கள்! நான் நல்லாத்தான் இருக்கேன். எப்படியானாலும் டிசம்பர் 15ம் தேதிக்கு முன்னால் சாக மாட்டேன்! ஆடிட்டர் நாராயணசாமி, அட்வான்ஸ் டாக்ஸ் கட்டாமல் நான் சாக அனுமதிக்க மாட்டார்!”

ஆதாரம்: “என்னுடைய பார்வையில் ராஜாஜி”
எழுதியவர்: ஆடிட்டர் ஜி. நாராயணசாமி

(25.12.02 ராஜாஜி நினைவு நாள்)

இந்தி இசை ஆல்பங்களில் முதல் வரியிலேயே கலக்குகிறார்கள். எம்.டி.வி.யில் ஒளிபரப்பான அப்லஃப் ராஜின் ஒரு ஹிட் பாடல் அந்த வகை. 'எல்லோருக்கும் ஒரு வலி இருக்கத்தான் செய்கிறது' என்பது அந்த முதல் வரி. மனத்தில் வலி இருப்பவர்கள் (அதாவது எல்லோரும்) உணர்ந்து பார்க்கிறார்கள்.



• ரவீனா

வேடிக்கையான லட்சியம்!

பன்முகக் கலைஞர் என்ற அறிவிப்புடன் ஜெயா மூவியில் பேட்டியளித்த அனிதா குஹா, நடன நிகழ்ச்சிகளில் தேவைப்படும் வண்ண உணர்வு குறித்துப் பேசினார். ("ஒரு பொண்ணு மட்டும் சிவப்பு உடையிலே வந்தா நல்லாயிருக்கும். நிறையப் பெண்கள் சிவப்பு வண்ணத்தில் உடையணிந்து, ஒரே நேரத்தில் மேடையிலே ஆடினா அது பார்ப்பதற்கு உறுத்தலா இருக்கும்") பதினெட்டே நிமிடங்களில் முடியும் ஒரு நாட்டிய நாடகம் என்றபோது அவர் தேர்ந்தெடுத்த கருவைக் கூறினார். எந்தக் கட்டடம் கட்டினாலும் சனீஸ்வரனுக்குப் பூஜை செய்துவிட்டுக் கட்ட வேண்டும் என்பது நியதி. ஒருமுறை பார்வதிதேவி, அந்த பூஜையைச் செய்யாமல் ஒரு மாளிகையை எழுப்பிவிட, சிவபெருமான் அதைக் கண்டித்தாராம். பிறகு தானே சனீஸ்வரனிடம் சென்று, தவறைக் குறிப்பிட்டு அனுமதி பெற முடிவெடுத்தாராம். "சனி அனுமதித்தால் நான் அதை வந்து சொல்வேன். அனுமதிக்கவில்லையென்றால் அங்கிருந்தே உடுக்கையை அடிக்கிறேன். நீ அந்தக் கட்டடத்தை இடித்துவிடு" என்று கூறிக் கிளம்பினாராம். சிவபெருமானின் கோரிக்கையை ஏற்றுக்



• டெண்டுல்கர்

ிதா குஹா




கொண்ட சனீஸ்வரன், பார்வதிதேவியின் கட்டடத்துக்கு விதிவிலக்கு அளித்தார். பதிலுக்கு ''உங்கள் தாண்டவத்தை நான் பார்க்க அருள் செய்ய வேண்டும்'' என்றாராம். மகிழ்ந்த சிவன், அப்படி ஆடும்போது தன்னை மறந்து உடுக்கையை அடித்துவிட, தொலைவிலிருந்த பார்வதிதேவி, தான் எழுப்பிய மாளிகையை வருத்தத்துடன் இடித்துவிட்டாளாம்!

'டெண்டுல்கர்ஸ் யம்' என்ற பெயரில் மும்பையில் சச்சின் திறந்துள்ள ஹோட்டலில் உணவு சூப்பராக இருக்கிறதாம். விலைதான் கொஞ்சம் அதிகம்- ஆயிரம் ரூபாயாம்! ரவீணா டாண்டன் நடிக்கும் 'ஸ்டம்ப்ட்' படத்தில் கிரிக்கெட் வீரர் ராகுல் டிராவிட் நடிக்க இருக்கிறார். இந்தச் சுவையான செய்திகளை, சோனியில் குறிப்பிட்டார்கள்.

'வீட்டுக்கு வீடு லூட்டி' ஆபாசமில்லாத காமெடித் தொடர் என்பது ஆறுதல். ஆனால், பேசுபவர்கள் தங்கள் வசனத்துக்கு நடுவே கொஞ்சம் இடைவெளி விடுகின்றனர். பின்னர், நடுநடுவே பதிவு செய்யப்பட்ட சிரிப்பொலியைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதால், இந்த கேப். இதனால் தொடரில் தொய்வு ஏற்படுகிறது என்பதோடு, சிரிப்பே வராத வசனங்களுக்கும் சிரிப்பொலியை ஒலிக்கவிடும்போது, நேயர்களின் ரத்த அழுத்தம் எகிறுகிறது.

ஸ்டார் விஜய்யின் 'காவ்யாஞ்சலி' தொடருக்கான ட்ரெயிலரில் ஒரு வேடிக்கை. "உன்னை அழிச்சால்தான் எனக்கு சந்தோஷம். அதுதான் என் லட்சியம்'' என்று கூறிக் கொள்கிறாள் வில்லித் தங்கை. தியாக தீப அக்காவோ "உன் வாழ்க்கையை சந்தோஷமாக்குவேன். அதுதான் என் லட்சியம்'' என்கிறாள். பின்னணிக் குரல் "இருவரில் யாருடைய லட்சியம் நிறைவேறுகிறது என்பதை அறிய தொடரைப் பாருங்கள்'' என்கிறது. இருவருடைய லட்சியமும் ஒன்று தானே!

- ஆதர்ஷ்



• ஜே.ஆர்.தாஸ்

பழி ஓரிடம்; பாதிப்பு ஓரிடம்!

உள்ளூர் நீதிமன்றத்திலிருந்து உச்ச நீதிமன்றம் வரை, தினசரி ஏதாவது ஒரு வழக்கில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து காவல் துறை மீது கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் லாக்-அப் மரணங்களும், அப்பாவிகள் துன்புறுத்தப்படுவதும் நின்றபாடில்லை.

தாம்பரம் விமான நிலைய வளாகத்தை ஒட்டி வசிப்பவர் ஜே.ஆர். தாஸ். விமானப் படை வளாகத்தில் உள்ள தியேட்டரில் முப்பது வருடங்களுக்கு மேல் வேலை பார்த்து ஓய்வு பெற்றவர். இப்போது சைக்கிள் கடையும், எஸ்.டி.டி கடையும் வைத்து தொழில் நடத்திக் கொண்டிருக்கிறார்.

சமீபத்தில் ஒரு நாள், செங்கை மாவட்டக் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து ஒரு ஸ்பெஷல் பார்ட்டி, தாஸ் வீட்டுக்குப் பின்னால் சாராயம் விற்றுக் கொண்டிருந்த ராஜி என்பவரின் வீட்டைச் சோதனை செய்து, சரக்குகளைக் கைப்பற்றியது. காவல் துறையின் நடவடிக்கைகளை, மற்ற எல்லோரையும் போல வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார் தாஸ். நடவடிக்கையின் முடிவில் தாஸையும் 'விசாரிக்கிறோம்' என்று அழைத்துப் போய் வழக்குப் போட்டு ரிமாண்ட் செய்து விட்டார்கள்.

'அறுபது ஆண்டுக் காலமாக எந்த ஒரு குற்றச்செயலிலும் ஈடுபடாமல் அமைதியாக வாழ்ந்து வரும் தாஸைப் பிடித்துச் சென்றது, ஊர் மக்களாகிய எங்களுக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. அவர் மீது பொய் வழக்குப் போட்டு, சிறையில் அடைத்துள்ளார்கள்' என்று அந்தப் பகுதி பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் சார்பில், முதல்வருக்கும் உயர் போலீஸ் அதிகாரிகளுக்கும் மனுக்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

"ஒரு தெரு தள்ளி, பின்பகுதியில் இருக்கும் ராஜி என்பவரின் வீட்டில் பல்லாண்டு


மீறப்படும் மனித உரிமைகள்

களாக சாராய பாக்கெட்டுகள் வியாபாரம் ஜரூராக நடைபெற்று வருவது இந்தப் பகுதியில் எல்லோருக்கும் தெரியும். உள்ளூர் போலீஸ் மாமூலாக வந்து போவார்கள். ஏன் வம்பு என்று நாங்கள் அதையெல்லாம் கண்டு கொள்வது கிடையாது. எங்கள் தந்தை பணியில் இருந்தபோது 'வேலை யுண்டு; தானுண்டு'' என்று இருந்தவர். கிறிஸ்துமஸ் நெருங்கும் இந்த நேரத்தில், இப்படிப்பட்ட சோதனை எங்கள் குடும் பத்துக்கு வந்து விட்டதே'' என்று குமுறலுடன் சொன்னார் தாஸின் மகன் ஜேம்ஸ்.

''அரசுப் பணியில் வேலைப் பார்த் தாலும், அவருக்கு எழுதப் படிக்கத் தெரி யாது. ராஜியின் சாராய வியாபாரத்திற்கு 'தாஸ்தான் பண உதவி செய்தார்' என்று எழுதி, தாஸ் அவர்களை மிரட்டி போலீஸார் கையெழுத்து வாங்கியிருக்கிறார் கள். அப்பட்டமான மனித உரிமை மீறல் நடந்திருக்கிறது என்கிறார், மில்டன். இவர் தாஸுடன் வேலை பார்த்தவர். இப்போது ராஜியையும் அவர் மனைவியையும் போலீஸ் தேடி வருகிறது.

இந்த விவகாரம் பற்றி மேலும் விசாரிப்பதற்காக, செங்கை கிழக்கு காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம், மற்றும் சேலையூர் காவல் நிலையம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டோம். ''தாஸ் பற்றியும் புகார் வந்ததன் பேரில்தான் கைது செய்தோம்'' என்கிறது போலீஸ். சாராய வியாபாரத்துக்கு நிதி உதவி செய்ததாக, மதுவிலக்கு சட்டப் பிரிவுகளில் வழக்குப் பதிவு செய் யப்பட்டிருக்கிறது. ''வேண்டுமென்றே பொய்யான தகவலை போலீஸுக் குக் கொடுத்து, மாட்டி வைத்து விட்டார்கள்'' என்கிறார்கள் அப் பகுதி பொதுமக்கள். 'இனி தான் ஒரு அப்பாவி' என்று தாஸ் கோர்ட்டில்தான் நிரூபிக்க வேண் டும்.

- கௌசி



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Pvt. Ltd.
Editorial Team : C. Egnath Raj, Anuradha Sekhar, C.Jesudoss. Layouts : S.Stephen, P.R. Rajan.
Editor : Seetha Ravi.
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Half Yearly Subscription : India : Rs. 165/-
Overseas (Air Mail) Annual : 62 U.S. Dollars, Srilanka Rs.2000/-


மாமிஸ் குடும்பத்தின்
Maami's
SAMBAR POWDER
2003 - புத்தாண்டு
மற்றும் பொங்கல்
நல்வாழ்த்துக்கள்!
மாமிஸ்
மசாலா
மாமி புட்ஸ் (பி) லிட்.,
H.O : (New No)164, புல்லலக்கோட்டை ரோடு,
விருதுநகர் 626 001.
Ph. : (04562) 267838, 243601 Fax: 244168
B.O : 2/1,சக்கரபாணி தெரு, மேற்கு மாம்பலம்,
ரயில்வே லைன் அருகில், சென்னை 33.
Ph. : (044) 24724500, E-mail:mail@maamis.com.
Visit : www.maamis.com